# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+ 4

சுடர் 32 | கதிர் 24 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 05, செவ்வாய்க்கிழமை 20.12.2016


# வடக்கு சுகாதார நிலையை ஆராய கனடாவில் மாநாடு

## ஜனவரி 16, 17 இல் நடத்த ஏற்பாடு பன்னாட்டு நிபுணர்களும் பங்கேற்பர்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 20

வடக்கின் சுகாதார நிலமைகள் மற்றும் மேம்பாடு தொடர்பில் ஜனவரி மாதம் கனடாவில் பன்னாட்டு மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. கனேடியத் தமிழ்க் காங்கிரஸின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஒழுங்க மைப்பில் இந்தப் பன்னாட்டு மருத்துவக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என்று வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது பன்னாட்டுக் கலந்துரையாடல் இதுவாகும். கனடாவின் ரொறன்ரோ நகரில் ஜனவரி மாதம் 16ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெறும் இந்த மாநாட்டில் பங்கு பற்றுவதற்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களின் சுகாதார மற்றும் கல்வி அமைச்சர்கள் உள்ளிட்ட 22 பேர் பயணமாகவுள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் மூன்று ஆண்டு கால மூலோபாய அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டது. 16 விடயப் பரப்புக்கள் அடையாளப்படுத்தப்பட்டன. பின்னர் 10 விடயங்களாக அவை தொகுக்கப்பட்டன. பத்து விடயங்களிலிருந்து 5 விடயங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டன. >> 25

## ஜனவரி 20 ஈரான் செல்கிறார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், டிசெ. 20

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அடுத்த மாதம் 20ஆம் திகதி ஈரானுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என இலங்கைக்கான ஈரானியத் தூதுவர் மொஹமட் சயேரி அமீராணி தெரி >> 04

## 3000 முரளி மரங்களைத் தறித்த குற்றச்சாட்டில் 50 பேர் கைதாகினர்

வவுனியா, டிசெ.20

வன்னியில் 32 வருடங்களின் பின்னர் பழுத்ததாக கூறப்படும் முரளிப் பழத்தைப் பறிப்பதற்காக 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முரளி மரங்கள் பெரும்பான்மை இனத்தவர்களால் அடியோடு தறிக்கப்பட்டன என்று குற்றஞ்சாட்டப்பட்டது. மரங்களை >> 04

## வடக்கு விவசாய அமைச்சு மீதான பட்ஜெட் விவாதம் இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 20

வடக்கு மாகாண விவசாய அமைச்சு மீதான வரவு-செலவுத் திட்ட விவாதம் வடக்கு மாகாண சபையில் இன்று நடைபெறவுள்ளது. வடக்கு மாகாண அரசின் வரவு-செலவுத் திட்டம் மீதான விவா >> 04

### முச்சந்தி முரளி



தனித் தமிழீழ மாநாடு எண்டு சொல்லப் போறாங்கள் பாருங்கோ...

## 2017 மார்ச்சில் கடும் வறட்சி

### எதிர்கொள்ள விசேட செயலணி

கொழும்பு, டிசெ. 20

2017 மார்ச்சில் இலங்கையில் கடும் வறட்சி ஏற்படும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ள நிலையில், அதற்கு முகங்கொடுப்பதற்குத் தற்போதிருந்தே தயாராகுமாறு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும் அரச திணைக்களங்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்தார்.

சுமார் 40 நாள்கள்வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் வறட்சியான காலநிலையை எதிர்கொள்வதற்குரிய அரச செயற்பாட்டுப் பொறிமுறை சம்பந்தமாக ஜனாதிபதியும் பிரதமரும் விரைவில் பேச்சு நடத்துவர் என்றும், திட்டம் குறித்த அறிவிப்பு ஜனவரியில் வெளியிடப்படும் என்றும் அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. >> 25

## மைத்திரியின் வாக்குறுதிக்கு இன்றுடன் 1 வருடம் பூர்த்தி

### ஆயினும் வலி.வடக்கு மீள்குடியமர்வு இன்னும் முழுமை பெறவில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 20

ஆறு மாதங்களுக்குள் வலி. வடக்கு மக்கள் மீள்குடியேற்றப்படுவர் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ்ப்பாணத்தில் வைத்து வாக்குறுதி வழங்கி இன்றுடன் ஒரு வருடமாகின்றது. >> 25

## கிணற்றுக்குள் தவறி விழுந்து மாணவி சாவு

காரைநகர், டிசெ.20

கிணற்றடிக்கு முகம் கழுவச் சென்ற சிறுமி கிணற்றுக்குள் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் காரைநகர் மாப்பாணவூரிப் பகுதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை >> 04

## நீதிமன்றிலும் சிறையிலும் தராதரம் பார்த்துக் கவனிப்பு

### துறைசார்ந்தோர் இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்கிறார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், டிசெ. 20



நீதிமன்றத்திலும், சிறைச்சாலையிலும் தராதரங்களுக்கு ஏற்ப கவனிப்புக்கள் இருப்பதாகப் பல்வேறு தரப்பினரும் குற்றச்சாட்டுகள் எழுப்புகின்றனர். இதனை இந்தத் துறையில் உள்ளவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். >> 25

## சகோதரனின் கத்திக்குத்தில் இளைஞன் பரிதாபச் சாவு

### தும்பளையில் நேற்றிரவு சம்பவம்

தும்பளை, டிசெ.20

பருத்தித்துறை, தும்பளைப் பகுதியில் சகோதரர்கள் மூவருக்கிடையில் ஏற்பட்ட தகராறில் கத்திக்குத்துக்கு இலக்காகி சகோதரர்களில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் பருத்தித்துறை தும்பளை பெரியதம்பிரான் வீதியில் இடம்பெற்றது. >> 25

## வயோதிபப் பெண் வெட்டிக் கொலை

### குடத்தனையில் நேற்றிரவு கொள்ளையர்கள் வெறியாட்டம்

வடமராட்சி, டிசெ.20

வடமராட்சி கிழக்கு, குடத்தனையில் வயோதிபர்கள் இருவர் வசிக்கும் வீட்டில் நேற்றிரவு திட்டமிட்டு கொள்ளை >> 25

## படுகொலைகள், காணாமற்போதல்களுக்கு

# பொறுப்புக் கூறவேண்டிய கோத்தாவுக்குப் பாதுகாப்பு

### நல்லாட்சி அரசைச் சாடுகிறது சிவில் அமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

மகிந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள், சித்திரவதைகள், சட்டவிரோதமான கைதுகள் மற்றும் காணாமற்போகச் செய்யும் சம்பவங்களுக்கு நேரடியாகப் பொறுப்புக் கூறவேண்டிய கோத்தபாய ராஜபக்சவைத் தற்போதைய தேசிய அரசு பாதுகாத்து வருகின்றது.

இவ்வாறு நீதி >> 25

## இலங்கை வருகிறது இந்திய உயர் குழு

### மீனவர்கள் விவகாரம் குறித்து பேச்சு நடத்த

கொழும்பு, டிசெ. 20

இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக இந்திய அரச அதிகாரிகளுடனான அடுத்த கட்டப் பேச்சுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளன.

மீன்வள அமைச்சர் மகிந்த அமரவீர இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்திய வெளிவிவகார [illegible] யோர் தலை >> 25

## பொருத்தமற்றது பொருத்து வீடு

### கிளிநொச்சியில் நேற்றுப் போராட்டம் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மனு

யாழ்ப்பாணம், டிசெ. 20.

வடக்கு-கிழக்கில் மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ள பொருத்து வீடுகள் எமது சூழலுக்குப் பொருத்தமற்றவை என்பதை வலியுறுத்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று கிளிநொச்சி >> 25



## விபத்து நடந்த இடத்தில் 11 தீபங்கள் ஏற்றி அஞ்சலி

### சங்கத்தானையில் நேற்று மாலை பெருந்திரளான மக்கள் பங்கேற்பு

சாவகச்சேரி. டிசெ. 20

சாவகச்சேரி, சங்கத்தானையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் கொல்லப்பட்ட 11 பேரினதும் ஆன்மா சாந்தியடைய விபத்து நடந்த இடத்தில் நேற்று 11 தீபங்கள் ஏற்றப்பட்டு அஞ்சலி இடம்பெற்றது.

சங்கத்தானைப் பகுதியில் நேற்று மாலை இவ்வாறு 11 மெழுகுவர்த்திகள் ஏற்றி அஞ்சலி செலுத் >> 04

## நாரந்தனை குற்றவாளிகள் இருவரும் தற்போதும் ஈபிடிபியின் உறுப்பினர்களே

### பிடித்தால் இங்கு கொண்டு வாருங்கள் டக்ளஸ் தேவானந்தா வீரவசனம்

யாழ்ப்பாணம், டிசெ. 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது 2001ஆம் ஆண்டு தாக்குதல் நடத்தி இருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில், இரட்டைத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நெப்போலியன் எனப்படும் செபஸ்ரியன் ரமேஸ் மற்றும் நடராசா மதனராசா இருவரும் ஈ.பி.டி.பி.யின் கட்சிச் செயற்பாட்டாளர்களாகத் தற்போதும் வெளிநாட்டில் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். நகரில் >> 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# இரணவில ஒலிபரப்பு நிலையத்தைக் கைவிட அமெரிக்கா தீர்மானம்

## அந்த இடத்தைக் கோருகிறது சீனா

யாழ்ப்பாணம், டிசெ. 20

புத்தளம் மாவட்டத்தின் இரணவிலவில் உள்ள, வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையத்தை மூடுவதற்கு, அமெரிக்கா முடிவு செய்திருப்பதாக, ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த இடத்தைச் சீனா கோரியுள்ளதாகத் தெரியவருகின்றது.

1983 ஆம் ஆண்டு இரணவிலவில் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்புக் கோபுரத்தை அமைப்பதற்கு அரசு அனுமதி அளித்திருந்தது. 1993 ஆம் ஆண்டிலேயே இங்கு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பத்தில் இந்த ஒலிபரப்பு வளாகம், 920 ஏக்கர் கொண்ட, பலத்த பாதுகாப்புமிக்க, இராஜதந்திர விலக்குரிமை பெற்ற பகுதியாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதி மக்கள் நடத்திய போராட்டங்களினால், வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையப் பகுதி 520 ஏக்கர் பரப்பளவுக்குள் குறைக்கப்பட்டது. இந்தப் பிரதேசத்துக்குள் இலங்கையர்கள் எவரும் நுழைவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

இரணவில ஒலிபரப்புக் கோபுரத்தின் மூலம் பிராந்தியத்தின் இராணுவத் தகவல்கள் இரகசியமாகச் சேகரிக்கப்படுவதாகவும், இங்கு இரகசிய ஓடுபாதை ஒன்று இருப்பதாகவும் முன்னர் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன. இந்த ஒலிபரப்பு நிலையத்தையே மூடுவதற்கு அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இரணவிலவில் உள்ள ஒலிபரப்பு நிலையத்தை விலக்கிக் கொள்ள அமெரிக்கா முடிவு செய்துள்ளது என்பதை, அமைச்சர் மலிக் சமரவிக்கிரம உறுதி செய்துள்ளார்.

அமெரிக்கா கைவிடவுள்ள இரணவில பிரதேசத்தில், 5 ஆயிரம் ஏக்கர் நிலத்தைத் தமக்கு வழங்குமாறு சீனா கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

வான் அலைகளைப் பரிமாற்றம் செய்யும் கேந்திர மையமாக இந்தப் பகுதி இருப்பதாலேயே, இரணவில ஒலிபரப்பு நிலையத்தை உள்ளடக்கிய பிரதேசத்தைச் சீன நிறுவனம் கோரியுள்ளது. இந்தப் பகுதி நிலத்தை சீனா கோரியிருப்பது பற்றி தனக்குத் தகவல் தெரியாது என்று அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

இரணவிலவில் ஒலிபரப்புக் கோபுரத்தை அமெரிக்கா அமைத்தபோது, இந்தியா கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. இந்தப் பகுதியில் நிலத்தைப் பெறும் முயற்சியில் சீனா இறங்கினால் அதற்கு இந்தியாவிடம் இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# சிறுமியின் வளைந்திருந்த முள்ளந்தண்டு நேராகியது

## யாழ். போதனா வைத்தியசாலையில் வெற்றிகரமான சத்திரசிகிச்சை

யாழ்ப்பாணம், டிசெ. 20

ஸ்கோலியோசிஸ் என்ற நோயால் பாதிக்கப்பட்டு முள்ளந்தண்டு வளைந்திருந்த சிறுமிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் எலும்புமுறிவு சத்திர சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு முள்ளந்தண்டு நேராக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.

சிறுமியின் வளைந்திருந்த முள்ளந்தண்டு சத்திரசிகிச்சை மூலமாக நேராகியுள்ளதாகவும் அவர் வைத்தியசாலை விடுதியில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றார்என்றும்தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த செவ்வந்தி செனவிரட்ன எனும் 14 வயதுச் சிறுமிக்கே இந்தச் சத்திரசிகிச்சை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சத்திரசிகிச்சை மகத்தான வெற்றியே என்று வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர்.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்படுவதால் ஸ்கோலியோசிஸ் எனப்படும் பாரதூரமான குறைபாடுடைய இந்த நோய் ஏற்படுகின்றது.

இதற்கான காரணம் என்ன என்பது இன்னும் முழுமையாகத் தெரியாத போதிலும் பல காரணங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. பலவகையானசோதனைகளை நிபுணர்கள் மேற்கொண்டபோதும் இந்த நோய்க்கான சரியான காரணம் கண்டறியப்படவில்லை. இது ஒருவகை மரபணுக் கோளாறு என்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்தநோய் தானாக ஏற்படவும் வாய்ப்புண்டு அல்லது பருவ வயதில் திடீர் வளர்ச்சி காரணமாகவும் ஏற்பட வாய்ப்புண்டு.

குறித்த சிறுமிக்குச் சுமார் 7 மணித்தியாலங்கள் தொடர்ந்து நடைபெற்ற இந்த அறுவைச் சிகிச்சை பெரிய வெற்றியை அளித்துள்ளது. இந்தச் சாதனை எமது மண்ணுக்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் பெருமை தேடித்தந்த ஒரு விடயம்.

கடந்த வியாழக்கிழமை காலை புதிய அறுவைச்சிகிச்சைக் கூடத்தில் எலும்பு முறிவு வைத்திய நிபுணர்கள், மயக்கமருந்து நிபுணர்கள், உதவி வைத்தியர்கள், கதிர்ப்பட உத்தியோகத்தர்கள் ஏனைய உத்தியோகத்தர்களின் கூட்டு முயற்சியில் இந்தப் பெரிய அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது. அறுவைச் சிகிச்சைக்கு பின்னரான கவனிப்புக்களுக்கு உறுதுணையாக நின்ற வைத்தியர்கள் தாதியர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள், தற்போது நோயாளியைப் பராமரிக்கும் 17ஆம் இலக்க விடுதி வைத்தியர்கள், தாதியர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள் இந்த விடயத்தில் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. (த-4)

# எழுவைதீவுக் கடலில் நடந்த நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ்ப்பாணம் எழுவைதீவுக் கடலில், கடற்படையினரின் படகால் மோதி மீனவர் கொல்லப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சம்பவத்தில், உயிரிழந்த மீனவரின் மகள் வடித்த 'பயணம்' கவிதை நூல் அதே கடலில் வைத்து நேற்று வெளியிடப்பட்டது.

கடலில் படகில் வைத்து நேற்று முற்பகல் கவிதை நூல் வெளியிடப்பட்டது. ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம் கவிதை நூலை வெளியிட்டு வைக்க வடக்கு மாகாண



சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

எழுவைதீவைச் சேர்ந்த அன்ரனி ஜேசுதாசன் 2014 ஆம் ஆண்டு தொழிலுக்குச் சென்றிருந்தபோது கடற்படையினரின் படகு மோதியதில் கொல்லப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த நிலையில் அவரது மகள் குறித்த கவிதை நூலை உருவாக்கியுள்ளார். இந்த வழக்கு நீதிமன்றில் இன்னும் நிலுவையில் உள்ளமை என்று குறிப்பிடத்தக்கது. (த-4-101)

# எம்.பிக்களின் வாகனங்கள் விற்பனைக்கு எதிராக மனு

யாழ்ப்பாணம், டிசெ. 20

நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தீர்வை வரியற்ற வாகனங்களைவேறு நபர்களுக்கு விற்கும் செயற்பாடுகளுக்கு எதிராக லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமை தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி நாகஹலந்த கொடித்துவக்கினால் நேற்றுத் திங்கட்கிழமை இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காகத் தீர்வையற்ற வகையில் வழங்கப்படும் வாகனங்கள் வேறு நபர்களுக்குக் கொடுக்கப்படுவது லஞ்ச ஊழல் குற்றமே. இதன்படி என்னால் சில மாதங்களுக்கு முன்னர் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் முறைப்பாட்டை மேற்கொண்டிருந்தேன். ஆனால் அந்த முறைப்பாடு தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை. அந்த ஆணைக்குழு அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியுள்ளது. இதனைக் குறிப்பிட்டே உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளேன் என்று நாகஹலந்த தெரிவித்தார்.

மனுவில் பிரதிவாதிகளாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 93 பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (த-5)

# தம்பதியரைத் தாக்கிவிட்டு 20 பவுண் நகை கொள்ளை

## இருவர் பொலிஸாரால் கைது

முல்லைத்தீவு, டிசெ. 20

முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன்குளம் மூன்று முறிப்பில் தம்பதியரைத் தாக்கி தாலிக்கொடி உள்ளிட்ட தங்க நகைகளைக் கொள்ளையடித்துவிட்டுத் தப்பிச் சென்ற 2 கொள்ளையர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பகல் இடம்பெற்ற இந்தக்கொள்ளையுடன் தொடர்புடையவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

கொள்ளையர்களை ஊரவர்கள் பிடிக்க முற்பட்டபோது மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டு அவர்கள் காட்டுக்குள்ளே தப்பிச் சென்றிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பெண்ணின் தாலிக்கொடி, சங்கிலி, காப்பு உட்பட சுமார் 20 பவுண் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதாக முறையிடப்பட்டது. இதில் நகைகளைப் பறிகொடுத்தவர்கள் அயலில் இருந்த தமது உறவுகளுக்குச் சம்பவம் தொடர்பில் அலைபேசியில் தகவல் வழங்கியுள்ளனர்.

அவ்வாறு வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் ஒன்றுகூடிய இளைஞர்கள் பலர் வீதியில் மரக் கட்டைகளைப்போட்டு வீதியை மறித்து தங்க நகையைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றவர்களை மடக்க முயன்றனர். இதனை அவதானித்த கொள்ளையர்கள் தடையை நெருங்கியவேளையில் தாம் பயணித்த மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டு காட்டுப் பாதையின் ஊடாகக்கால்நடையாகத்தப்பிச்சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

இந்நிலையில் அந்தக் கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வவுனியாவைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் விசாரணையிலுள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4-101)

சுகாதார விதிமுறை மீறல்

# கடலுணவுகள், மாம்பழங்கள் மானிப்பாய் சந்தையில் அழிப்பு

சுகாதார விதிமுறைக்கு முரணான வகையில் தரையில் வைத்து விற்பனை செய்யப்பட்ட பெருந்தொகையான கடலுணவுகளையும், மருந்து விசிறிய மாம்பழங்களையும் கைப்பற்றி அழித்த சண்டிலிப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வியாபாரிகளைக் கடுமையாக எச்சரிக்கையும் செய்தனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளமையைத் தொடர்ந்து இந்த நோயை மேலும் பரவவிடாமல் கட்டுப்படுத்தும் நோக்குடன் சண்டிலிப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

மானிப்பாய் மத்திய சந்தையில் சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் தரையில் வைத்துக் கடலுணவுகள் விற்பனை செய்யப்படுவதாகவும், மருந்து விசிறிய மாம்பழங்கள் விற்பனைக்காகக் குவித்து வைக்கப்பட்டிருப்பதாகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு முறையிடப்பட்டது. அங்கு சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தரையில் வைத்து விற்பனை செய்யப்பட்டு வந்த பெருந்தொகையான கடலுணவுகளையும், மாம்பழங்களையும் கைப்பற்றி நிலத்தில் புதைத்து அழித்தனர். இதனை முன்கூட்டியே அறிந்திருந்த மாம்பழ வியாபாரி மாம்பழங்களை விட்டுவிட்டு ஓடி ஒழிந்தாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதமுள்ள நாட்டில் இலக்கியங்கள் வளராது

### கூறுகிறார் பிரதமர் ரணில்

கொழும்பு, டிசெ. 20

தமிழ், சிங்கள இலக்கியங்களே உலகில் சிறந்த இலக்கியங்கள் என்று தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இனவாதம் உள்ள ஒருநாட்டில் இலக்கியங்கள் வளர்ச்சியடையாது என்றும் கூறினார்.

தேசிய சகவாழ்வு மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் இரவு பத்தரமுல்லையில் நடைபெற்ற தேசிய இலக்கிய விழாவில்கலந்துகொண்டுஉரையாற்றியபோதே இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்வில், பிரதமருடன், துறைசார் அமைச்சர் மனோ கணேசன், பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் சமாதானம் காணப்படுகிறது. சமாதானத்துடன், இலக்கியங்கள் வளர்ச்சியடையவேண்டும். தமிழ், சிங்கள கலாசாரங்கள் போன்ற சிறந்த கலாசாரங்கள் உலகில் எங்கும் இல்லை. நம்முடைய இலக்கியங்கள் நவீனத்துவம் பெறவேண்டும். இனவாதம் இருக்கும் ஒரு நாட்டில் இலக்கியங்கள் வளர்ச்சியடையாது. இன்று எதையாவது நாட்டுக்குக் கொண்டுவந்தால் அதனைத் துரத்தி அடிக்கின்றோம். சமூக வலைத்தளங்களில்போட்டுவாட்டுகின்றோம் - என்றார். (து-4)

# முல்லைத்தீவு மீனவர்கள் அகிம்சைவழி போராட்டம்

### சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்கக் கோரி

முல்லைத்தீவு, டிசெ. 20

சட்டவிரோத மீன்பிடி முறைகள் இன்னும்கட்டுப்படுத்தப்படவில்லை. அதனை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர்கள் அகிம்சை வழிப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதில் மீன்பிடி தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2017ஆம் ஆண்டைக் கடல் வள பாதுகாப்பு ஆண்டாகக் கடைப்பிடிக்க உள்ளோம். இந்த முடிவை வடக்கு மாகாண அனைத்துச்சமாசங்களும்இணைந்து எடுத்துள்ளோம். கடல்வளப் பாதுகாப்பு ஆண்டாக கடைப்பிடிக்க முடிவெடுத்த நாங்கள், சட்டவிரோத மீன்பிடி முறைகளைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கைகளைப் பலருக்குத் தெரியப்படுத்தியபோதும் யாரும் கட்டுப்படுத்துவதற்கு முன்வரவில்லை.

எங்களுடைய வளங்களைச் சுரண்டிக் கொண்டு செல்வதுடன் முற்றாக அழிக்கின்றார்கள். இதனை நாங்கள் பார்த்துக் கொண்டு இருக்கமுடியாது. இங்குள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவித்து விட்டோம். எங்களுடைய பிரச்சினைகளை அந்தந்த இடங்களில் முன்வைத்தமைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாகாண சபை உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இப்போது எங்களுடைய பிரச்சினை எல்லா இடங்களிலும் கதைப்பதற்கு நீங்கள் தான் காரணம். இதில் மக்களின் பங்களிப்பும் தேவையாக உள்ளபடியால் 2017ஆம் ஆண்டு எமக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை அகிம்சை வழிப் போராட்டத்தில் ஈடுபட உள்ளோம்-என்றார். (த-4-7)

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

மானிப்பாய் பகுதியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளைஞன், சிகிச்சை பயனின்றி நேற்று மாலை உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. மானிப்பாய், தாவடி வீதியைச்சேர்ந்த விமலேஸ்வரன் சுரேஸ் (வயது- 19) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

'மானிப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளும் வான் ஒன்றும் மோதுண்டு விபத்து இடம்பெற்றது. இதன் போது மோட்டார் சைக்களில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். இந்த நிலையிலேயே சிகிச்சை பயனின்றி நேற்று மாலை உயிரிழந்தார். சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன' என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-21,7)

## மாதகலில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மாதகலில் தென் பகுதியைச் சேர்ந்த ஒருவரது சடலம் சிதைந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கம்பகா மாவட்டத்தைச் சேர்ந்த குணசேன (வயது 60) என்பவரே சடலமாக மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அவரை 5 நாள்களுக்கு முன்னர் காணவில்லை என்று கம்பகா பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. சடலம் தற்போது யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-4-10)

# கூட்டமைப்பினர் எம்.பி.பதவிகளை துறப்பார்களா?

### ஈரோஸ் கட்சி கேள்வி

மாவீரர்களையும், மண்ணையும், தமிழ் மக்களையும் மதிப்பவர்களாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட்டால் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அவர்கள் அனைவரும் துறந்துவிடவேண்டும் என்று ஈரோஸ் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கிறது. அவர்கள் அதனை செய்வார்களா? இவ்வாறு ஈரோஸ் கட்சியின் பொதுச் செயலாளர் இ. பிரபாகரன் கேள்வி எழுப்பினார்.

கிளிநொச்சியில் நேற்று அந்தக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'போரை நிறுத்திவிட்டு, தீர்வை முன்வையுங்கள் இல்லையெனில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்போம் என்று பிரமேதாச காலத்தில் கூறினோம். ஆனால் பிரமேதாச அவ்வாறு செய்யவில்லை. எனவே ஈரோஸின் 13 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவிகளைத் துறந்தோம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனைச் செய்யுமா?

தமிழ் மக்கள் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியல் தலைமையின்றிக் காணப்படுகின்றனர்.எனவே அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்கான நல்ல தலைமையை உருவாக்க வடக்கு, கிழக்கு, மலையக தமிழ்மக்கள் அணிதிரளவேண்டும்என்று ஈரோஸ்அழைப்புவிடுக்கிறது. நாட்டில் உள்ள அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்று சேர்ந்தாலும் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது. காரணம் கடந்த காலங்களில் தங்களின் சுயநலனுக்காகவே இந்தக் கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்தன. எனவேதான் நாம் கோருகின்றோம் தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வு கிடைக்க வேண்டும் என்றால் வடக்கு கிழக்கு, மலையக தமிழ் மக்கள் அனைவரும் ஓரணியில் நல்ல தலைமைத்துவத்தை ஏற்படுத்த அணிதிரளவேண்டும்.

தற்போது தமிழ் மக்கள் நல்ல தலைமைத்துவம் இன்றி வெற்றிடத்துக்குள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். ஒரு நல்ல தலைமைத்துவத்தை ஏற்படுத்துவதுதான் ஈரோஸின் முதலாவது நோக்கம். எனவேதான் நாங்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் சீரழிந்து போயுள்ள சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு பொதுமக்கள்,கற்றறிந்தவர்கள் மட்டுமல்ல மாற்று அரசியல் தரப்புக்களையும் ஒன்றிணைந்து செயற்பட வாருங்கள் என்று அழைக்கின்றோம். நாங்களும் உங்கள் அனைவரிடமும் இணைந்து செயற்பட தயாராக இருக்கின் றோம்' என்று ஈரோஸ் கட்சியின் செயலாளர் தெரிவித்தார். (வ-21.35)

# ஆடுகள் வெட்டிய நால்வர் கைதாகினர்

கொழும்பு, டிசெ 20

பம்பலப்பிட்டி போரா பள்ளிவாசலின் பின்னாலுள்ள இடத்தில் சட்டவிரோதமான முறையில் ஆடுகளை வெட்டிய நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இறைச்சிக்காக வெட்டப்பட்ட 15 ஆடுகள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த நான்கு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்த முச்சக்கர வண்டியொன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

# தரம் - 3 அதிபர்களுக்கு ஜனவரியில் பாடசாலை

### ஜோசப் ஸ்ராலின் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

தரம்-3 வகையிலுள்ள புதிய அதிபர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைப் பொறுப்புக்கள் வழங்கப்படும் என்று வடக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலர் இரவீந்திரன் உறுதியளித்தார் என இலங்கை ஆசிரியர் சங்கச் செயலார் ஜோசப்ஸ்ராலின் தெரிவித்தார்.

புதிய அதிபர்கள் நியமனம் தொடர்பில் யாழ். நகரத் தனியார் கல்வி நிலையம் ஒன்றில் நேற்று மாலை 4 மணியளவில் அதிபர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ராலின் மேலும் தெரிவித்ததாவது:

தரம்-3 தராதரமுடைய புதிய அதிபர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைப் பொறுப்புக்கள் வழங்கப்படாவிட்டால் கொழும்பு உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதாக இன்று (நேற்று) முடிவெடுக்கப்பட்டது.

கடந்த மே 9ஆம் திகதி அதிபர் நியமனங்களைப் பெற்றபோதிலும் இன்றுவரை குறித்த அதிபர்களுக்குப் பாடசாலைகள் வழங்கப்படவில்லை. எனவே இதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் கொழும்பு அரசின் சுற்றறிக்கைக்கு ஏற்ப எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் நியமனங்கள் வழங்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

சந்திப்பில் கலந்துகொண்ட பாதிக்கப்பட்ட அதிபர்கள், ஏற்கனவே வழங்கப்பட்ட 78 பேரின் நியமனங்களையும் மீளாய்வு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் நியமனங்கள் எங்களின் வலயங்களுக்குள் முதலில்வழங்கப்படவேண்டும். அதன் பின்னரே மற்றைய பிரதேசங்கள் தொடர்பில் ஆராயப்படவேண்டும் என்றும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் நியமனங்கள் வழங்குவது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலருடன் ஓரிரு நாள்களில் சந்திப்பு ஒன்றை மேற்கொள்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. செயலரின் உறுதிமொழிப்படி அதிபர் நியமனம் வழங்கப்படும் போது அதில் பாதிக்கப்படுபவர்கள் தொடர்பிலும் கூடி ஆராய்வோம்-என்றார். (த-4-8)

## 14 இராணுவத்தினரின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

சிறுப்பிட்டி பகுதியில் இரண்டு இளைஞர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் சந்தேகநபர்களான 14 இராணுவத்தினரின் விளக்கமறியலை எதிர்வரும் 2ஆம் திகதி வரை நீடித்தது யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம்.

இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் பதில் நீதிவான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே மறியல் நீடிக்கப்பட்டது.

1998ஆம் ஆண்டு பெப்ரவரி மாத காலப்பகுதியில் புத்தூர் பகுதியில் இருவர் காணாமல் ஆக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பாக அந்தக்காலப்பகுதியில் சிறுப்பிட்டி இராணுவ முகாமில் கடமையாற்றிய 14 இராணுவத்தினர் சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து யாழ்.நீதிவான் மன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-4,6)

## கிழக்கில் பருவ மழை; விவசாயிகள் மகிழ்ச்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற் றுத் தென்மேல் பருவக்காற்றின் பருவ மழை மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் பெய்த தாகப் பிரதேசமக்கள் தெரிவித்தனர். மாவட்டத்தின் பல இடங்களிலும் நேற்றுமுன் தினமும், நேற்றும் மழை வீழ்ச்சி பதிவாகி உள்ளதால் மகிழ்ச்சியடைந்துள்ளதாக விவசாயிகள்கூறினர். இம்முறைபருவமழை பிந்தியமையால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 10,000 ஏக்கர் நெற்பயிர் மற்றும் உப உணவுப் பயிர்கள் கருகிப்போயுள்ளதாகவிவசாயத்திணைக்களப்பிரதிப் பணிப்பாளர் ஆர்.கோகுலதாசன் தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இப்பருவமழை தொடர்ச்சியாகப் பெய்யும் பட்சத்தில் நன்மை பெறக்கூடிய வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தலைமைகளின் நிலைப்பாடு பேரவை வந்ததால் மாறிவிட்டதாம்

அரசு எது தந்தாலும் பரவாயில்லை, எம் மக்கள் நாம் கூறுவதை ஏற்றுக் கொள்வார்கள் என்றிருந்த சூழலை மாற்றி இது தந்தால்தான் எமது மக்கள் வரவேற்பார்கள், இல்லையேல் எம்மைப் புறக்கணித்து விடுவார்கள் என்று கூறக்கூடிய சிந்தனை மாற்றங்களை உருவாக்கியுள்ளது தமிழ் மக்கள் பேரவை.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் யாழ். பொது நூலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

போரின் பின்னர் தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் குரல்கள் சில காலம் ஓங்கி ஒலிக்கத் தவறிவிட்டன. போரில் தோற்றுவிட்டோமே நாம் எப்படி எமது உரித்துக்களைக் கேட்க முடியும் என்ற ஒரு தாழ்வு மனப்பான்மைக்கு அவர்கள் ஆளாகியிருந்தார்களோ நானறியேன். மக்களின் மனோநிலை என்ன, அவற்றைப் பிரதிபலிப்பது எமது கடமையல்லவா என்ற எண்ணத்தை அவர்கள் பலர் அடியோடு மறந்திருந்ததாகவே நான் உணர்ந்தேன். ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் பெரும்பான்மையின மக்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய எமது மக்களின் அவலங்களை, அபிலாசைகளை, அங்கலாய்ப்புக்களை நாடாளுமன்றத்தில் எமது பிரதிநிதிகள் தமிழில் பேசிவிட்டு வர அவர்கள் கூறியதை எவருமே கணக்கெடுத்ததாகத் தெரியவில்லை. தாம் பேசியதைத் தமிழ்ப் பத்திரிகைகளில் இடம் பெறச் செய்தால் அதுவே போதும். அரசில் தீர்வுகள் எது கிடைத்தாலும் அதனை ஏற்கலாம், எங்களுக்குத் திரும்பிக்கேட்கும் உரித்து இல்லை என்ற எண்ணத்திலேயே தமிழ் மக்கள் பேரவை உருவாகும் வரை எமது தலைமைத்துவங்கள் இருந்து வந்த தாகத் தெரிகின்றது.

தற்போது எமது தலைமைத்துவங்கள் விழித்துக் கொள்ளவும் தன்னம்பிக்கையுடன் முன்னேறவும் நீங்கள் வழி அமைத்துக் கொடுத்துள்ளீர்கள். இந்த ஒரு வருடத்தினுள் எமது தமிழ்த் தலைமைத்துவங்கள் தன்னம்பிக்கையுடன் முன்னேற நீங்கள் அடிகோலியுள்ளீர்கள். நாங்கள் எமது தலைமைத்துவங்களுக்கு எதிரானவர்கள் அல்லர். அவர்களுக்குப் பக்க பலமாக நின்று மக்கட் பணியில் ஈடுபட்டு வருகின்றவர்களே நாங்கள் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளீர்கள்.

பாதுகாப்புத் தரப்புக்குப் பயந்து பேசாமடந்தைகளாக இருந்த காலத்தை மாற்றித் தமிழ் மக்களின் அவலங்களை, ஆசைகளை அகிலமறியப் பொங்கியெழுந்து ஆனால் பொறுமையாக எடுத்துரைத்தமையால் எமது மக்களின் தன்னம்பிக்கையை தளிர்த்தெழச் செய்துள்ளீர்கள். குட்டக் குட்டக் குனியும் மக்கள் அல்லர் நாங்கள். குடியுரிமை கேட்டால் குட்டவா பார்க்கின்றீர்கள் என்று குட்டியவனையே குறை கூறும் அளவிற்கு எம் மக்களுக்கு உற்சாகத்தை ஊட்டியவர்களும் நீங்கள் தான். தமிழ் மக்கள் பேரவை அதன் பொருட்டு பெருமைப்படலாம்.

வடக்கு-கிழக்கு மக்களை ஒன்று கூட்டும் வகையில் முத்தமிழ் விழாவொன்றை மட்டக்களப்பில் நடத்தித் தமிழ் பேசும் வடக்கு-கிழக்கு மக்களின் அடுத்திருக்கும் அண்மைத்துவத்தை உலகம் முழுவதும் பறைசாற்றியுள்ளீர்கள்.

தமிழ்ப் பேசும் மக்களைச் சிங்களம் பேசும் மக்களாக வேண்டுமென்றே மாற்ற எத்தனிப்பதும் அவர்கள் வாழ்ந்து வந்த இடங்களைப் பெயர்மாற்றம் செய்ய முற்படுவதும் இன அழிப்புக்குச் சமமானது என்ற கருத்தை நாங்கள் வலியுறுத்த வேண்டும். இதன் காரணத்தினால்தான் வடக்கு-கிழக்குத் தமிழ்ப் பேசும் மக்களின் கலை கலாசார ஒற்றுமைப்பாட்டை மக்களுக்கு உணர்த்துவிக்க முத்தமிழ் விழா நடத்தி அதில் வெற்றியும் கண்டீர்கள்.

அரசு பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளைக் காற்றில் விட்டு விடவே கரவாக இயங்கி வருகின்றது. அதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது. அரசு பன்னாட்டுச் சமூகத்திடம் சம்மதம் தெரிவித்துக் கொண்ட சட்ட ஆவணங்கள் மூன்றை நாங்கள் எமக்குச் சாதகமாகப் பாவிக்கும் காலம் எழுந்துள்ளது.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் அப்போதைய இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடன் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையில் இனித் தாம் என்னென்ன செய்யவிருக்கின்றார்கள் என்பதை உலகறியச் சொன்னார்கள். அந்தக் கூட்டறிக்கையில் கூறியவை குறையின்றி எமக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதை நாம் ஆராய்ந்து பார்த்து இலங்கை அரசின் கடப்பாட்டை நாம் அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

அடுத்து இணக்க அடிப்படையில் ஜெனிவாவில் கொண்டு வந்து கைச்சாத்திட்ட பிரேரணையின் பிரிவுகளின்படி இலங்கை அரசு நடவடிக்கைகள் எடுத்து விட்டதா? இல்லை என்றால் ஏன் அவ்வாறு செய்யவில்லை? எப்பொழுது செய்யப் போகின்றீர்கள் என்று சட்டரீதியாகக் கேட்டு இலங்கை அரசின் கடப்பாடுகளை அதற்குணர்த்தி அது காலங் கடத்திச் செல்வதைக் கண்டித்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய கடமை எமக்குண்டு.

70ஆவது ஐ.நா பொதுச் சபையின் பரிந்துரைகளுக்கு அமைவாக 2030 ஆம் ஆண்டில் அடைய எதிர்பார்க்கப்படும் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி இலக்குகளை கவனத்திற் கொண்டு எமது அபிவிருத்திப் பாதையை நிர்ணயிக்க வேண்டிய கடப்பாடு எமக்குண்டு என்பதை நாம் இலங்கை அரசுக்கு எடுத்துரைக்கும் காலம் உருவாகியுள்ளது.

வடக்கில் ஒன்றரை லட்சம் இராணுவத்தினரை நிலைத்து நிற்க வைத்துவிட்டுச் சமாதானத்துடன் கூடிய, எல்லோரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்க முடியாது. நீதி கிடைக்கச் செய்ய முடியாது. மாகாணத்திற்குரிய உறுதியான அமைப்புக்களை உருவாக்க முடியாது. ஆகவே தகுந்த காரணங்கள் இன்றி தொடர்ந்து இராணுவத்தினரை இங்கு நிலை பெற வைக்கின்றமை மேற்படி நிலையான அபிவிருத்திக்கான இலக்குகளுக்கு முரண்பாடுடையதானது. இராணுவத்தினரை வெளியேற்றுவது அரசின் தலையாய கடப்பாடுகளில் ஒன்றாக அமைகின்றது.

பன்னாட்டுச் சமூகம் எதிர்பார்க்கும் சட்டப்படியான கடப்பாடுகள் அரசுக்கு இருந்தால் அவற்றை வெளிக்கொண்டு வந்து 'நீங்கள் உங்களின் கடமைகளைச் செய்யவில்லை' என்று குற்றம் சுமத்துவது அவர்களுக்கு நெருக்குதல்களைக் கொடுப்பதாக அமைவன. எமக்குச் சுயநிர்ணயத்தைத் தாருங்கள் என்பதிலும் பார்க்க சட்டம் உங்களிடம் இவற்றை எதிர்பார்க்கின்றது என்று எடுத்துக் காட்டுவது கூடிய பலன் மிக்கதாக அமையும்.

அரசுக்குச் சட்ட ரீதியான நெருக்குதல்களை ஏற்படுத்த தமிழ் மக்கள் பேரவை ஆயத்தமாக வேண்டும். அதுவும் வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அவ்வாறான நெருக்குதல்களை ஏற்படுத்துவது நல்லது என்று எனக்குப் படுகின்றது. மட்டக்களப்பில் நடைபெற இருக்கும் 'எழுக தமிழ்' கூட்டம் சரியான திசையிலேயே அமைந்திருக்கின்றது.

எமக்கேற்ற சாதகமான அரசியல் தீர்வொன்று எமக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமாக எனக்குப் படவில்லை. ஏதோ தந்ததை எடுப்போம் என்ற மனப்பாங்கு எமக்குப் பெரிய பின்னடைவுகளை வருங்காலத்தில் ஏற்படுத்தும். எமது நிலங்கள் பறிபோவன. எமது மொழி புறக்கணிக்கப்படும். தெற்கிலிருந்து வந்து வடக்குக் கிழக்கை ஆக்கிரமிக்கும் செயற்பாடு விரைவாக நடைபெறும். இதனால் தான் நாங்கள் வலுவான, நிலையான, நீதியான, பொறுப்பான அரசியல் தீர்வொன்றை எதிர் பார்த்திருக்கின்றோம் - என்றார்.

(த-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### 3000...

தறித்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு 50ற்கும் மேற்பட்டவர்கள் கடந்த இரண்டு நாள்களில் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பெருநிலப்பரப்பைக் கொண்ட வன்னி மாவட்டத்தில் முல்லைத்தீவு, வவுனியா, நெடுங்கேணி, பகுதிகளில் 32 வருடங்களின் பின்னர் மீண்டும் முரளிப்பழம் பழுத்தது. இந்தப் பழம் 1984ஆம் ஆண்டு பழுத்த போது, எவ்வளவு வரவேற்பை பெற்றிருந்ததோ அதை விட பன்மடங்கு வரவேற்பை நடப்பாண்டில் பெற்றது. ஒரு கிலோ பழம் 180 தொடக்கம் 200 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது. இந்தப் பழத்தைப் பறிப்பதற்குக் காடுகளில் மக்கள் குவிந்தனர். சிலர் குடும்பத்துடன் சென்று பழங்களைப் பறித்து வந்தனர்.

1984ஆம் ஆண்டு இந்தப் பழம் பழுத்தபோது வன்னியில் பெரும் வறட்சி ஏற்பட்டது, மழையில்லாமையினால் நெல் உள்ளிட்ட விவசாய உற்பத்திப் பொருள்கள் விளைச்சலின்றி போதியளவு வருமானம் இன்றியும் மக்கள் பெரும் துன்பங்களைச் சந்தித்ததாகவும் கூறப்பட்டது.

தற்போது முரளி மரங்கள் பெரும்பான்மை இனத்தவர்களால் அடியோடு தறிக்கப்படுகின்றன. முரளிப் பழங்களைப் பெறுவதற்காகவே இந்த மரங்களைச் சட்டவிரோதமாக அவர்கள் அடியோடு தறிப்பதாகக் கூறப்பட்டது.

'வவுனியா நெடுங்கேணி ஒலுமடு, காஞ்சிரமோட்டை, வெடிவைத்தகல். பட்டிக்குடியிருப்பு, பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுமார் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட முரளி மரங்களைத்தறித்து, அதன் பழங்களை விற்பனை செய்வதற்கு அவர்கள் பறித்துச் செல்கின்றனர். மரங்கள் சட்டவிரோதமான முறையில் தறிக்கப்படுவதாகக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து அந்தப்பகுதிக்குச் சென்ற வன இலாகா அதிகாரிகள், சிறப்பு அதிரடிப்படையினரின் உதவியுடன் 50ற்கும் மேற்பட்டவர்ளைக் கைது செய்தனர். இவர்கள் அனைவரும் நேற்றும், நேற்றுமுன்தினமும் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்கள் பதவியா, ஹெப்பிட்டிக்கொலாவ, நெடுங்கேணி போன்ற பகுதிகளைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவர்கள்' என்று வன இலாகா திணைக்கள தகவல்கள் தெரிவித்தன. (வ-21)

### ஜனவரி 20

வித்தார். ஈரானுடனான இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு செல்லவுள்ளார். இந்தப் பயணத்தின் போது 3 நாள்கள் ஈரானில், ஜனா திபதி தங்கியிருப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது வர்த்தக உடன்பாடுகள் பலவும் கைச்சாத்திடப்படவுள்ளன.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அடுத்த ஆண்டு நான்கு வெளி நாட்டுப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளார். (த-5)

### விபத்து...

தப்பட்டது. இந்த நிகழ்வில் பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டனர். இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்தும் ஹைஏஸ் வாகனமும் மோதியதில் சம்பவ இடத்திலேயே 10 பேர் கொல்லப்பட்டதோடு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஒருவருமாக 11 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் ஒருவரின் சடலம் உறவினர்களால் நேற்றுமுன்தினம் எடுத்துச் செல்லப்பட ஏனைய 10 பேரினதும் சடலங்களும் விமானம் மூலமாக அவர்களது இடமான களுத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4-9)





### வடக்கு...

தம் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமா கியது. அதன் தொடர்விவாதம் 15 ஆம் மற்றும் 16 ஆம் திகதிகளில் நடை பெறவிருந்த நிலையில், உறுப்பினர் களின் புறக்கணிப்பால் ஒத்திவைக்கப்பட்டது.

இன்றையதினம் வடக்கு அரசின் தலைமைச் செயலர் அலுவலகத்துக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் வடக்கு மாகாண விவசாய, கால்நடை, சுற்றுச்சூழல், கூட்டுறவு, நீர்ப்பாசன அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு என்பன தொடர்பில் விவாதம் நடைபெறவுள்ளது.

(த-5)

### நாரந்தனை...

நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

நாரந்தனைப் படுகொலைச் சம்பவத்துக்கும் ஈ.பி.டி.பிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள மதனராசா சம்பவம் இடம் பெறும்போது எனது கண்பார் வைக்குள் நின்றவர். நெப்போலியனுக்கு மக்கள் செல்வாக்கு அதிகம். அவர் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுபவர் அல்லர். அவரை அரசியல் நோக்கத் துக்காகவே இந்த வழக்கில் சிக்கவைத்துள்ளனர். இந்த வழக்கு விசாரணை யின்போது சாட்சியமளிப்பதற்கு நான் எனது சட்டத்தரணி ஊடாக விண்ணப்பித்திருந்தேன். ஆனால் மேல்நீதிமன்றம் அதற்கான வாய்ப்பை வழங்கவில்லை.

குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்ட இருவரும் வெளிநாடுகளில் இப் போதும் எமது கட்சிச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். யாழ். மேல் நீதிமன் றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது- என்றார்.

வெளிநாட்டில் உள்ள குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதே என்று செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு, பிடிக்கலாம். பிடித்தால் இங்கு கொண்டு வாருங்கள் என்று பதிலளித்தார் டக்ளஸ்.

இதேவேளை, வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கட்சியை விட்டு நீக்கப்படவும் இல்லை. அவர் விலகுவதாகத் தெரிவிக்கவும் இல்லை என்றும் டக்ளஸ் கூறினார்.

மேலும் 1983 ஆம் ஆண்டிலிருந்து சகல கொலை, கடத்தல் உள்ளிட்டவை விசாரணை செய்யப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

(த-5-37)

### கிணற்றுக்குள்...

யில் தரம் 2 இல் கல்விபயிலும் கஜரூபன் காயத்திரி (வயது 8) என்ற மாணவியே கிணற்றுக்குள் தவறி விழுந்து உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக [illegible] வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி ஆவணங்கள் தயாரித்து மகனின் மனைவி முறைகேடு

## தாய் ஒருவர் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 20

தனது மகன் வெளிநாட்டில் உயிருடன் இருக்கும்போதே அவர் உயிரிழந்துவிட்டார் எனக் கூறி போலி ஆவணங்களைத் தயாரித்து சொத்துக்களை விற்றும், தனது பெயருக்கு மாற்றியும் மருமகள் முறை கேட்டில் ஈடுபட்டுள்ளார் என்று தாயொருவர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

கிளிநொச்சி பகுதியில் வசித்த குடும்பஸ்தர் 2008 ஆம் ஆண்டளவில் போர் சுழல் காரணமாக மனைவி பிள்ளைகளை விட்டு வெளிநாடு சென்றுள்ளார். வெளிநாடு சென்ற கணவர் இறந்துவிட்டார் என்று தெரிவித்த மனைவி, கிளிநொச்சியில் உள்ள நொத்தாரிஸ் மூலமாகப் போலியான ஆவணங்களைத் தயாரித்து கணவனின் பெயரில் உள்ள வீடு, காணி என்பனவற்றை விற்பனை செய்தும் சில வற்றைத் தனது பெயரில் மாற்றம் செய்துமுள்ளார். பின்னர் இந்த வருட ஆரம்பத்தில் குறித்த குடும்பப்பெண் கணவன் உள்ள நாட்டுக்குப் பிள்ளைகளுடன் சென்றுள்ளார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

தனது மகன் உயிருன் வெளிநாட்டில் வசிப்பதாகவும் பொய்யான ஆவணங்களை வைத்து மகனின் சொத்துக்களை விற்றுள்ளார் என்றும் மகனின் மனைவி (மருமகள்) மீது குற்றஞ்சாட்டியுள்ளதுடன் பெண்ணுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு முறையிட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-4,6)

## வணிக வாய்ப்பு

* இலங்கையின் முன்னணி மென்பொருள் நிறுவனத்தின் வியாபார தரகர்/ முகவராக யாழ்ப்பாணத்தில் பணி புரிய அரிய வாய்ப்பு.
* இந்நிறுவனமானது கணக்கியலோடு சம்பந்தப்பட்ட மென்பொருளை சந்தைப்படுத்துதல் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளில் 17 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளது.
* கணக்கியல் மற்றும் மென்பொருளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும்.

விஜயகுமார்: 071 430 1512
சதீஸ்: 077 265 9277

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கழகத்தின் செயலாளர்
உயர்திரு . அன்ரன்யோகராசா இன்பராசா
அவர்கள் சங்கானை பிரதேசசெயலகப்பிரிவிலிருந்து இளைஞர் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமையைப் பெருமையுடன் பாராட்டி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
வாழ்த்துவோர்:
விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகம்
சுழிபுரம்.
(J 6980)
(14,17,18)

## பக்தரின் உடைமையை திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 20

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் வழிபாடு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒருவரின் உடைமைகளை திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

பக்தர் ஒருவரின் கைத் தொலைபேசி, பணம் என்பன கைது செய் யப்பட்டவரிடம் இருந்து மீட்கப்பட்டனஎன்றும் விசாரணைக்கு உட்படுத்தப்படும் சந்தேக நபர் விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் எனவும் பருத்தித் துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஆலயத்தில் வழிபட வந்த ஒருவரின் கைப்பை களவாடப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஆலயத்தில் பாதுகாப்பு கடமையில் நின்றிருந்த பொலிஸாருக்கும் தெரிவிக்கப்பட்டதையடுத்து குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் சந் தேகநபரைத் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்துக் கைது செய்தனர் என்று தெரி விக்கப் பட்டது.

சந்தேக நபர் வரணியைச் சேர்ந்த 48 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-109)

## WHITE LOTUS CAMPUS
154, A1 Navalar Road, Jaffna.

### சந்தைப்படுத்தல் முகாமையாளர்

பட்டப்படிப்பு தொழில்சார் கல்விகளை வழங்கும் எமது கல்லூரிக்கு தகைமையும் அனுபவமும் வாய்ந்த சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை.

வயதெல்லை : 24 - 42
தகைமை : சந்தைப்படுத்துதல் சார் பட்டம் / தொழிற்தகைமை.
அனுபவம் : குறைந்தது 3 வருடம்.

### IT,English விரிவுரையாளர்

பகுதிநேரம்/ முழு நேர அடிப்படையில் வேலை செய்யக்கூடிய IT,English விரிவுரையாளர்கள் தேவை.

வயதெல்லை : 24 - 42
தகைமை : HNDA IT / Eng. பட்டப்படிப்பு.
அனுபவம் : குறைந்தது 2 வருடம்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரரிற்கு கவர்ச்சிகரமான சம்பளமும் இதர நன்மைகளும் வழங்கப்படும்.

தொடர்பு: 021 722 3773/ 077 932 4255

## பண்டிகைக் காலத்து ஏசியன் தளபாடத்தின்
## மாபெரும் மலிவு விற்பனை


Table mat - ~~2400~~/= - 1550/=


Kitchen Rack - ~~2000~~/= - 1450/=


Iron Board - ~~1300~~/= - 990/=


மெத்தை
~~2600~~/=
2250/=


பிரம்பு செற்
~~16500~~/=
14750/=


லெதர் சோபா செற்
(டீபோ இலவசம்)
~~41400~~/=
36500/=


6 கதிரை ரீப்போ
~~5500~~/=
4000/=


ஸ்ரீல் அலுமாரி
~~10999~~/=
8750/=


6X4 கட்டில்
~~10500~~/=
8750/=


TV ஸ்டான்ட்
~~10750~~/=
8500/=

இல.230, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்
(இலுப்பையடி - ஆனைப்பந்தி
சந்திக்கு இடையில்)
021 791 6911, 076 821 9415,
077 358 3879

## பிறந்தநாள் வாழ்த்து




ஐம்பதாவது அகவையைக் காண்கின்ற
யூனியன் கல்லூரியின்
அதிபர்
திலலையம்பலம் வரதன்
(B.B.A. Hons. PEDE Merit,
MEd Merit. MATE)
அவர்கள் மேலும் பல நன்மைகளைப் பெற்று வாழ புவனேஸ்வரி அம்மன் ஆசிவேண்டி நிற்கின்றோம்

புண்ணியம் கோடி அமைந்ததென யூனியன் அன்னையைப் பேச வைத்தார்
மண்ணிலே உள்ளவர் மதிக்கின்ற மாண்புகள் யாவும் பெற்றவராம்
பொன்விழாக் காண்கின்ற அதிபரையாம் புவனத்தில் சிறப்புகள் அடைந்திடவே
என்றுமே வாழ்த்திப் பாடிடுவோம் ஏற்றமோடு இன்பமாய் வாழ்ந்திடவே!

வாழ்த்துவோர்:
ஆசிரியர்கள் மற்றும் யூனியன் கல்லூரி சமூகம்
(ஜே.1628) (13.18)

## மணிவிழா நாயகியை வாழ்த்துகிறோம்



யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி
வித்தியாசாலையில்
25 வருடகாலம் ஆசிரியராக
பகுதித் தலைவராக,
உப அதிபராக சிறப்பாகத்
தமது பணியை ஆற்றி இன்றுடன்
(20.12.2016) தனது
60 ஆவது வயதைப் பூர்த்திசெய்து,
ஓய்வுபெறும்
திருமதி லெஜினா குகதாசன்
அவர்களை நீடூழி காலம் சிறப்பாக வாழ
வாழ்த்துகிறோம்.
Best Wishes
வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
(ஜே.6985) (13.18.17)

## மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு

பேனிச்சஸ்(தம்ரோ கம்பனி) ஆண்கள் 30
கெல்ப்பேர்ஸ் RM 1,000 SR 40,000 + OT
85,000 (மட்டுமே) உணவு. தங்குமிட வசதி உண்டு.

டுபாயில் உடனடி வேலைவாய்ப்பு

| கிளீனிங் | அலுமினிய பிற்றிங் |
|---|---|
| விமான நிலையம். கொஸ்ப்பிற்றல் 20 ஆண்கள் 900 + OT உணவு + 300 SR 70,000 உணவு தங்குமிட வசதி உண்டு. | 1600 DHT SR 64,000 + OT 15 ஆண்கள் உணவு, தங்குமிட வசதி உண்டு. |

Phone No: 077 889 8752/ 077 889 8644
E-Mail: capitalcolombo@gmail.com

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம், சட்டநாதர் கோயிலுக்கு முன்பாக உள்ள இராச வீதியில் ஐந்து (05) அறைகளுடன் விசாலமான வரவேற்பறையும் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று அலுவலக பாவனைக்கும் மற்றும் தனியார் ஸ்தாபனங்களுக்கும் வாடகைக்கு விடப்படும். (J 5953) (12,18)

T.P : 077 586 1959

## European Language Centre Vavuniya

3ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு
சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், கிறிஸ்மஸ், புத்தாண்டு சிறப்பு நிகழ்வும்
காலம் : 20.12.2016 இன்று 9மணி முதல் பிற்பகல் 2மணி வரையும்.
இடம் : Koshy Food Hut ஹொறவப்பொத்தான வீதி, இறம்பைக்குளம், வவுனியா
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

European Language Training Centre
No - 105
Soosaipillayarkulam Road,
Nellistar Hotel Near,
Vavuniya.
G.K.Vincent
Managing Director
024 561 6556 / 075 520 2317
Email: europeanlanguage2015@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றம் நடைமுறைக்கு வராவிடின் ஆசிரியர்கள் போராட்டத்தில் குதிப்பர்

## ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

'ஆசிரியர்களின் இடமாற்றம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வராவிடின் ஆசிரியர்களான நாம் அனைவரும் ஒன்றிணைந்து பெருமளவில் போராட்டங்களை முன்னெடுப்போம். வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு இடமாற்றம் தொடர்பில் சரியான திட்டமிடல் இல்லை' இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்சினைகள் தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரிகள் சில ஆசிரியர்களை கஷ்டப் பிரதேசங்களுக்கு அனுப்பாமல் வைத்திருக்கின்றனர். அத்துடன் சிலரைக் கஷ்டப் பிரதேசங்களுக்கு அனுப்பிவிட்டு ஒருநாளில் திருப்பி எடுத்துள்ளனர்.

தீவகக் கல்வி வலயதிலிருந்து 59 பேர், கிளிநொச்சி கல்வி வலயத்திலிருந்து 100 பேர், துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து 47 பேர், முல்லைத்தீவு கல்வி வலயத்திலிருந்து 28 பேர், மன்னார் கல்வி வலயத்திலிருந்து 5 பேர், மடு கல்வி வலயத்திலிருந்து 55 பேர், வவுனியா வடக்கு கல்வி வலயத்திலிருந்து 29 பேர், வவுனியா தெற்கு கல்வி வலயத்திலிருந்து 21 பேர் என மொத்தமாக 344 ஆசிரியர்கள் இடமாற்றப்பட வேண்டியுள்ளனர். இருப்பினும் யாழ்ப்பாணத்திலிருந்து 53 பேர் மட்டுமே இடமாற்றம் செய்யப்பட்டுச் செல்லவுள்ளனர்.

இது வடக்கு மாகாண கல்வியமைச்சின் பக்கச்சார்பான செயல். இதனை நாம் கண்டிக்கின்றோம். கல்வி அமைச்சுக்கு இடமாற்றம் தொடர்பில் சரியான திட்டமிடல் இல்லை. இதைவிடப் புதிதாக ஆயிரத்து 80 பேர் நியமனம் பெறவுள்ளனர். எனவே புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர்களை கஷ்டப் பிரதேசங்களில் நியமனம் வழங்க வேண்டும். அங்கு நீண்டகாலம் சேவையாற்றும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யவேண்டும் என்பதே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடு. யாழ்.மாவட்டத்தில் இதுவரை கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றாத ஆசிரியர்களையும் இடமாற்றம் செய்யவேண்டும். கஷ்டப் பிரதேசங்களில் உள்ள மாணவர்களின் கல்விநிலையையும் நாம் கருத்தில் எடுக்க வேண்டும்.

வடமாகாண கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் நாங்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் கடிதங்கள் ஊடாக கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் நடவடிக்கையைக் கோரினோம்.

அதற்கு முதலமைச்சின் அதிகாரிகள் இது தொடர்பில் எங்களுடன் பேசியுள்ளனர். ஆனால் இன்றுவரை என்ன நடவடிக்கை எடுப்பேன் என முதலமைச்சரால் அறிவிக்கப்படவில்லை-என்றார். (வ-4,8)

# வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வுகள்

தென்மராட்சிது டிசெ. 20

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலக தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வும் பரிசில் வழங்கலும் இன்று பி.ப. 1.30 மணிக்கு பொதுநூலக மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பிரதேச சபைச் செயலாளர் திருமதி மு.கோடீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி தொழில் அதிபர் த.ஜெயந்தன் கலந்து சிறப்பிக்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீஸன், மக்கள் வங்கி கொடிகாமம் கிளை முகாமையாளர் ம.மாலவன், கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ.எம்.எஸ்.எதிரிசிங்க ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் பொது நூலக முன்றிலில் நிர்மாணிக்கப்பட்ட வள்ளுவர் சிலை திறப்பு, மூத்த குடிமக்கள் கௌரவிப்பு, தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி முன்பள்ளிகள் பாடசாலை மாணவர்கள், வாசகர்கள் ஆகியோரிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசில் வழங்கல் போன்றவையும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# மாணவர்களுக்கு சப்பாத்துகள்


தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மாதம் பெய்த பெருமழையால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 75 மாணவர்களுக்கு நேற்றுப் பிரதேச செயலகத்தில் வைத்து சப்பாத்துகள் வழங்கப்பட்டன. மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்ட சப்பாத்துக்களை பிரதேச செயலக இடர் முகாமைத்துவப் பிரிவினரால் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன. (வ-9)

# ஏ.ரி.எம். திறப்பு விழா

காரைநகர் டிசெ. 20

காரைநகர் இலங்கை வங்கி கிளையில் பொருத்தப்பட்டுள்ள ஏ.ரி. எம். இயந்திரத்தின் தொடக்க நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வங்கி முகாமையாளர் எஸ்.செல்வக்குமார் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளும் இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எம்.ஜே.பிரபாகரன் ஏ.ரி.எம் இயந் திரத்தினை சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கி வைப்பார் என்று தெரிவிக் கப்பட்டது. (வ-250)



# வடமாகாண சபையின் உறுப்பினராக புவனேஸ்வரன் நேற்றுப் பதவியேற்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதனின் மறைவால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு நியமிக்கப் பட்ட ஆ.புவனேஸ்வரன் நேற்று மாகாண சபை உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் ம.அன்ரனி ஜெகநாதன் கடந்த ஒக்ரோபர் மாதம் காலமானார். இவரது வெற்றிடத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்டிருந்த ஆ.புவனேஸ்வரன் நியமிக்கப்பட்டிருந்தார்.

அவரது நியமனம் வர்த்தமானியில் வெளிவந்திருந்தது. நேற்றைய தினம் வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் முன்னிலையில் அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (வ-5-10)

# தண்ணிமுறிப்புக் குளத்தில் மீன்பிடி அனுமதி; முல்லை. ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அமளி

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவினுள் வாழும் எமக்கும் தண்ணிமுறிப்புக் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதி தரவேண்டும் என்ற 20 சிங்கள மீனவர்களின் கோரிக்கையை அடுத்து நேற்றைய முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பெரும் அமளி ஏற்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று பகல் 10 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது மீன்பிடித்துறை தொடர்பில் ஆராயப்பட்டது.

'முல்லைத்தீவு மாவட்டம் தண்ணிமுறிப்புக் குளத்தில் ஆண்டான்டு காலமாக தமிழ் மீனவர்களும் முஸ்லிம் மீனவர்களுமே தொழில் புரிந்து வந்த நிலையில், தற்போது குடியேறியுள்ள 20 சிங்கள மீனவர்களும் எவரின் அனுமதியும் இன்றி குளத்தில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு அனுமதியின்றி தொழில்புரியும் மீனவர்களுக்கும் தமிழ் மீனவர்களுக்கும் இடையில் அடிக்கடி முரண்பாடுகள் ஏற்படும். அதன்போது பொலிஸில் முறையிட்டால் தமிழ் மக்களால் செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்வதே கிடையாது. எனவே எங்களின் குளம். நாங்கள் காலம் காலமாக மீன்பிடியில் ஈடுபட்டு வாழ்வாதாரத்தை நடத்தி வரும் குளம்' என்று தமிழ் மீனவர்கள் தெரிவித்தனர். அத்துடன், சிங்கள மீனவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினால் பொலிஸார் உடனடியாக செயற்படுவதாகவும் தமிழ் மீனவர்கள் சுட்டிக்காட்டினர்.

'கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் உள்ள குளத்தில் நாங்கள் 1983 ஆம் ஆண்டிலிருந்து மீன்பிடிக்கிறோம். எங்களுக்கும் இதில் பங்குண்டு. முல்லைத்தீவு மாவட்டம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் பல்லினமாக வாழும் மாவட்டம். நீங்களும், முஸ்லிம்களும் மட்டும் தண்ணிமுறிப்புக் குளத்தில் மீன்பிடிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது' என்று சிங்கள மீனவர்களும் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனால் கூட்டத்தில் சிறிது நேரம் அமளி ஏற்பட்டது.

இதை அடுத்து மாவட்டச்செயலாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் தமிழ், சிங்கள மீனவர்கள் தலா ஐவர் வீதம் குழு அமைக்கப்பட்டு இது தொடர்பில் ஆராய்ந்து இறுதி முடிவை எட்டுவதாக தீர்மானிக்கப்பட்டது. (வ-21,10)

# யானை தாக்கி குடும்பத்தலைவர் பரிதாபச் சாவு

வவுனியா, டிசெ.20

வவுனியா நீலியாமோட்டை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள காணியில் மாடு அடைக்கச்சென்ற குடும்பத் தலைவர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது. இதில் பனங்காமம் பகுதியைச் சேர்ந்த எஸ்.குணசிங்கம் (வயது-60) என்பவரே உயிரிழந்தவராவார்.

'இறந்த நிலையில் குடும்பத் தலைவரின் சடலம் காணப்பட்டதை அவதானித்த ஊர் மக்கள், பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்குச் சென்ற பறயனாலங்குளம் பொலிஸார் உடலத்தை மீட்டனர். விசாரணைகளின் போது அவர் யானை தாக்கி உயிரிழந்தார் என்பது தெரியவந்தது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன' என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-21)

# 3,270 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முல்லையில் அபிவிருத்தித் திட்டங்கள்

முல்லைத்தீவு, டிசெ. 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த வருடம் 3 ஆயிரத்து 270 மில்லியன் ரூபா நிதியில் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முற்பகல் முல்லைத்தீவு செயலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கான நிதி மூலங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. 3 ஆயிரத்து 270 மில்லியன் ரூபாவுக்கு மேல் நிதி கிடைத்துள்ளது. இதற்கான பல செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவை தொடர்பான ஒரு முன்னேற்ற ஆய்வுக் கூட்டமாக இந்தக் கூட்டம் அமையும் என நம்புகிறேன்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும், திணைக்கள உத்தியோகத்தர்கள் உங்களுடைய செயற்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்களை தெரியப்படுத்தும் அதே வேளையில், 2017 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்களும் முன்வைக்கப்படவுள்ளன' என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (வ-7)

# மூளைக் காய்ச்சலால் பாலகன் உயிரிழப்பு

கிளிநொச்சி, டிசெ.20

கிளிநொச்சியில் சில நாட்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த 5 வயது பாலகன் மூளைக் காய்ச்சலால் நேற்றுமுன்தினம் உயிரிழந்தான் என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த விஜயராஜ் விஸ்னுஜன் (வயது-5) என்ற பாலகனே மூளைக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தான் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21,35)

# வயோதிபருக்கு உதவிய கைதடி முதியோர் இல்லம்

யாழ்ப்பாணம், டிசெ.20

சந்நிதி முருகனுக்கு காவடி எடுத்துத் தனது நேர்த்தியை நிறைவு செய்ய வேண்டும் என்று ஆவலுடன் எதிர்பார்த்த முதியவரின் ஆசை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் 89 வயதான வாரித்தம்பி என்ற முதியவர் சந்நிதி முருகனின் பக்தன்.

சந்நிதி முருகனுக்கு காவடி எடுக்க வேண்டும் என்று நேர்த்தி வைத்துக் கொண்டார். இந்தத் தகவலை அவர் இல்ல நிர்வாகத்திடம் தெரிவித்தார்.

முதியவர்கள் ஆன்மீகச் சுற்றுலாவாக செல்வச்சந்நிதி ஆலயத்துக்குக் கடந்த வெள்ளிக்கிழமை கூட்டிச் செல்லப்பட்டனர்.

அப்போது முதியவர் காவடி எடுத்துத் தனது நேர்த்தியை நிறைவு செய்தார். இதற்கான சகல ஒழுங்குகளையும் இல்ல நிர்வாகம் மேற்கொண்டு உதவியதாக இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். (17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சியை நிறைவு செய்தோருக்கு தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி, டிசெ. 20

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் கிளிநொச்சியில் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சி நெறிகளை நிறைவு செய்தவர்களுக்கான தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று மு.ப. 9.30 மணிக்கு இடம்பெறும் என்று அறி விக்கப்பட்டது.

தையல், வீட்டு மின் உபகரணங்கள் திருத்தம், மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி திருத்தம் ஆகிய 3 பயிற்சி நெறிகளை நிறைவு செய்த தலா 10 பேர் வீதம் 30 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்படவுள் ளன.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக காவேரி கலாமன்ற இயக்குநர் வண. ரீ.எஸ்.யோசுவா அடிகள் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட சிறப்புத் தேவையுடையவர்களுக்கு அடுத்த வருடம் தொழிற் பயிற்சி களை வழங்க தொழிற்பயிற்சி அதிகார சபையினரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (வ-9)

# வட்டுவாகலில் முகாம் அமைக்க கடற்படைக்கு அனுமதி கிடையாது

### முல்லை. ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் உறுதிபடத் தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 20

'முல்லைத்தீவு, வட்டுவாகல் பகுதியில் உள்ள பொதுமக்களின் 617 ஏக்கர் பூர்வீக காணியை ஒருபோதும் கடற்படையின் தேவைக்காக வழங்குவதற்கு முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அனுமதி வழங்காது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முல்லைத்தீவு மாவட்ட இணைத்தலைவர்களுள் ஒருவருமான மருந்துவர் சிவமோகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் 617 ஏக்கர் காணிகளை கடற்படையினர் ஆக்கிரமித்து முகாம் அமைத்துள்ளனர். அதனைக் கடற்படையினருக்கு வழங்குமாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளருக்கும் பாதுகாப்பு அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பில் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடற்படையினருக்குக் காணி வழங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினரும் இணைத்தலைவர்களில் ஒருவருமான எஸ்.சிவமோகன், வடமாகண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

'முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் 617 ஏக்கர் காணிகளை கடற்படையினர் ஆக்கிரமித்து முகாம் அமைத்துள்ளனர். இந்த நிலையில் இதனைச் சுவீகரிக்கும் நோக்கில் இரண்டு தடவைகள் பொலிஸாரின் பாதுகாப்புடன் அளவீடு செய்வதற்கான முயற்சிகள் பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டன.

குறித்த காணியை கடற்படையினருக்கு சுவீகரிப்பதற்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்காக கடந்த ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், அன்றைய தினம் அதற்கான அனுமதிகள் வழங்கப்படாது எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன.

பொதுமக்களின் காணிகள் அதிகளவில் உள்ளன. அத்துடன் இதனைக் கடற்படையினருக்கு கொடுப்பது என்பது ஒட்டுமொத்த கடற்றொழில் வளத்தையும் கொடுப்பதற்குச் சமனாகும். எனவே தனியாருக்குச் சொந்தமான 358 ஏக்கர் காணிகள் அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவேண்டும்.

அதேவேளை இதில் உள்ள அரச காணிகள் கடற்றொழில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு ஒதுக்கப்படவேண்டும். கடற்படைமுகாம் வேறு இடத்துக்கு மாற்றப்படவேண்டும். கரைதுறைப்பற்று பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தெளிவாக சொல்லியிருக்கின்றோம். இப்போதும் சொல்கின்றோம். இந்த பிரதேசம் எங்கள் வாழ்வியலோடு சம்பந்தபட்ட இடம். இதனை கடற்படையிடமிருந்து விடுவிப்பதற்கு நாங்கள் தொடர்ந்து செயற்படுவோம். ஒருபோதும் முல்லைத்தீவு ஒருங்கிணைப்பு குழு இதற்கு அனுமதி வழங்காது என்றார். (வ-21,7)

### பேருந்து சடுதியாகத் திரும்பியதால்

## பயணிகள் நால்வர் வீதியில் வீழ்ந்தனர்

யாழ்ப்பாணம், டிசெ. 20

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து சடுதியாகத் திரும்பியதால், அதில் பயணித்த 4 பேர் வீதியில் விழுந்து உரசல் காயங்களுக்கு உள்ளாகினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த பேருந்தில் நல்லூர் குளிர்பான நிலையம் முன்பாகவுள்ள திருப்பத்தில் நேற்றுமுற்பகல் இடம்பெற்றது.

'பேருந்து திருப்பத்தில் திரும்பியவேளையில், அதில் பயணித்த நால்வர் வீதியில் வீழ்ந்தனர். பேருந்தின் முன் ஆசனத்தில் சிறு பிள்ளையுடன் அமர்ந்திருந்த இளம் தாயார் முதலில் வீதியில் விழுந்துள்ளார். அவ்வாறு அவர்கள் வீழ்வதனை அவதானித்த பெரிய தாயாரும் மற்றுமொருவரும் அவர்களை விழவிடாது பிடிக்க முற்பட்டபோது, அவர்களுடன் சேர்ந்து நால்வருமே வீதியில் வீழ்ந்தனர்.

இவ்வாறு பயணிகள் வீழ்ந்தமையை சாரதி கவனியாது பேருந்தைச் செலுத்திச் சென்றார். பயணிகள் எழுப்பிய குரலினால் பின்னர் பேருந்து நிறுத்தப்பட்டது. குழந்தையுடன் வீழ்ந்த தாயாருக்கு உரசல் காயம் ஏற்பட்டது. அவர் தொடர்ந்தும் பேருந்தில் பயணிக்காது மாற்று வாகனத்தில் தனது பயணத்தைத் தொடர்ந்தார்' என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (வ-4,101)

# மண்ணுக்காகப் போராடிய நாங்களே இன்று அதனைக் கொலை செய்கிறோம்

### வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

'இந்த மண் எங்களின் சொந்தமண் என்று மண் மீட்புக்காகவே நாம் போராடினோம். ஆனால், மண்ணுக்காகப் போராடிய நாங்களே இன்று அந்த மண்ணை அளவுக்கு அதிகமான விவசாய இரசாயனங்களால் கொலைசெய்து வருகிறோம்'

இவ்வாறு வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

வடக்கு விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் உலக மண் தினத்தை முன்னிட்டு மண்ணும் அவயங்களும் - உயிர் வாழ்வதற்கான ஒரு கூட்டு என்ற கருப்பொருளில் கருத்தமர்வு நேற்று திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இந்தக் கருத்தமர்வில் தலைமை உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மண்ணைப் பற்றி நாம் அதிகம் சிந்திப்பதில்லை. வீடுகளில் நுழையும் போது வாசற்கதவருகில் காற்பாதங்களில் உள்ள மண்ணைத் தட்டிவிட்டுச் செல்வதுதான் மண் பற்றிய பெரும்பாலானோரது கவனமாக உள்ளது. காலடியில் உள்ள அந்த மண் நாளுக்கு நாள் வளம் இழந்து போவது பற்றி நாம் அக்கறைப்படுவதில்லை.

மண்ணுக்கு உயிர் உள்ளது. உலகின் உயிர்ப் பல்வகைமையில் நான்கில் ஒரு பங்கு உயிரினங்கள் மண்ணுக்குள்ளேதான் வாழுகின்றன. ஒரு தேக்கரண்டி வளமான மண்ணில் மில்லியன் கணக்கான பக்ரீறியாக்களும் பல மீற்றர்கள் அளவுக்குப் பூஞ்சன இழைகளும் காணப்படுகின்றன. மண்ணின் வளத்துக்கு, கனியுப்புக்களின் சுழற்சிக்கு இவை அவசியம். ஆனால், அளவுக்கு அதிகமான விவசாய இரசாயனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நாம் மண் உயிரினங்களைச் சாகடித்து வருகிறோம்.

பக்ரீறியாக்களும் பங்கசுக்களும் இல்லாத மண்ணில் எவ்வளவுதான் இரசாயன உரங்களைப் போட்டாலும் பயிர்கள் செழிப்பாக வளராது. உரங்களைப் போடப் போட மண் மேலும் மேலும் தரமிழந்து கடைசியில் தரிசு நிலமாகவே மாறும். இதனால்தான் எங்களது விவசாய முறையில் மண்ணுக்குள் பக்ரீறியாக்களைச் சேர்க்கும் வகையில் சுழற்சிப் பயிராக நாம் சணல், பயறு, உழுந்து போன்றவற்றைப் பயிரிட்டு வந்திருக்கிறோம். இவற்றின் வேர்ச் சிறு கணுக்களில் வாழுகின்ற இறைசோபியம் பக்ரீறியாக்கள் வளியில் உள்ள நைதரசனைப் பயன்படுத்தி மண்ணை வளப்படுத்தி வந்துள்ளன.

எமது விவசாயிகளில் பெரும்பாலானோர் இப்போது ஒரு போகத்துடன் பயிர்ச்செய்கையை மட்டுப்படுத்தி விடுகிறார்கள். அவரை இனத்தாவரங்களை இடைப்பட்ட போகங்களில் சுழற்சியாகப் பயிரிடும் முறைமைக்கு விவசாயிகள் மீளவும் திரும்ப வேண்டும். உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கு மாத்திரம் அல்லாது காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தணிப்பதற்கும் மண்வளம் பாதுகாக்கப்பட வேண்டும்.

பூமி வெப்பம் அடைவதற்குக் காபனீரொக்சைட்டு வாயுவின் அளவு வளியில் அதிகரித்து வருவதே முதன்மைக் காரணம். காபனீரொக்சைட்டு வாயுவைத் தன்னில் கரைத்து, வளியில் அதன் சமநிலையைப்



பேணுவதில் முதலாவது இடத்தில் சமுத்திரங்கள் உள்ளன. இரண்டாவது மிகப் பெரும் காபன் தொட்டியாக மண்ணே உள்ளது. அந்தவகையிலும் மண்ணின் வளத்தை நாம் பாதுகாக்க வேண்டியவர்களாகவே உள்ளோம் - என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், யாழ். பல்கலைக்கழக பயிரியல் துறையின் தலைவர் கலாநிதி சிவமதி சிவச்சந்திரன், புவியியற்துறையின் முன்னாள் தலைவர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன், உலக உணவு நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் க.பத்மநாதன், கொழும்பு விவசாயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கே.எம்.ஏ.கேந்திரகம, பிராந்திய விவசாயு ஆராய்ச்சி நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி எம்.எஸ்.நிஜாமுடின், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் உதவி விவசாயப் பணிப்பாளர் கலாநிதி ரீ.கருணைநாதன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், பிரதி விவசாயப் பணிப்பாளர்களான அஞ்சனாதேவி சிறீரங்கன், பூ.உலகநாதன், அ.செல்வராஜா மற்றும் விவசாயிகளும் கலந்துகொண்டனர். (வ-10)

## வர்ண இரவு நிகழ்வு சாவகச்சேரியில் நாளை

தென்மராட்சி, டிசெ.20

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த வருடம் விளையாட்டுத் துறையில் சாதனை படைத்த வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வீர வீராங்கனைகளைக் கௌரவிக்கும் வர்ண இரவு நிகழ்வு நாளை பி.ப.3 மணிக்கு சாவகச்சேரி நகர சபையின் பொன் விழா மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு விடுமுறை நாள் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.20

நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பணியாளர்களுக்கான விடுமுறை நாள் கொடுப்பனவை வழங்கி வருகின்றது.

கடந்த 2012ஆம் ஆண்டிற்கான விடுமுறை நாள் கொடுப்பனவே தற்போது வழங்கப்பட்டு வருவதாக சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன் தெரிவித்தார்.

'பணியாளர்களுக்கு கடந்த காலங்களில் வழங்காமல் இருக்கும் கொடுப்பனவுகள் யாவும் படிப்படியாக வழங்கப்படும். அதனைவிட தைப் பொங்கலுக்கு முன்னரும் பணியாளர்களுக்கு வழங்க இருக்கும் கடந்த காலங்களுக்கான வருடாந்த இலாபத்தின் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேசமயம் எதிர்வரும் கிறிஸ்மஸ் தினத்துக்கு முன்பாக இந்த வாரக் கடைசியில் டிசெம்பர் மாதத்துக்கான சம்பளம் முன்கூட்டியே வழங்கி வைக்கப்படும்' என்று சங்கத்தின் தலைவர் கூறினார். (வ-17)

## துணையின்றி வாழ்ந்தவர்கள் முதியோர் இல்லத்தில் சேர்ப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

நீர்வேலி பன்னாலைப் பகுதியில் எவரது துணையும் இன்றி நோய்வாய்ப்பட்ட நிலையில் பெரும் சிரமப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்த தாயும் மகனும் அயலவர்களின் உதவியுடன் கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டனர்.

நடராசா கதிராசி (வயது-80) அவரின் மகனான நடராசா நவரத்தினராசா (வயது-60) ஆகிய இருவரும் எவரது துணையும் இன்றி நோய்வாய்ப்பட்ட நிலையில் சீரான உணவு இன்றி தனிமையில் வாழ்ந்து வந்தனர். அயலவர்களின் துணை இருந்தபோதும் அவர்கள் பராமரிப்பு வசதி இன்றி சிரமப்பட்டனர்.

சமூகசேவைகள் உத்தியோகத்தரின் உதவியுடன் தாயும் மகனும் கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த முதியவர்களின் உரித்தானவர்கள் உடனடியாக இல்லத்துடன் தொடர்புகொண்டு அவர்கள் தொடர்பான விவரத்தை தந்து உதவுமாறு இல்ல அத்தியட்சகர் கேட்டுள்ளார். (வ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பொது அறிவித்தல்-2017
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்தஅறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | ஆதனவரி | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கபிரதேசசபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 2017ஆம் ஆண்டுக்கான ஆதனவரி சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களுக்கான மீள் மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த பெறுமதியின் 14% ஆகவும் ஏழாலை உப அலுவலகத்திற்கான ஆதனவரி வருடாந்த பெறுமதியின் 15%ஆகவும் அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2017ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2017ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்த வரியில் 10% கழிவினைக் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தந்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5%கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியை செலுத்த தவறின் 15%விறாந்துக் கட்டணம் ஆதனவரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதன வரிகளை 31.01.2017ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 02 | ஆதனப்பதி வேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப்பதி வேட்டில் பெயர் மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக் காரர்கள் | பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர் மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். |
| 03 | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழங்கல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்டபொது மக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை திருத்துவதாயினும் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதிபெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும்.<br>2. புதியகட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒருவருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையா விடின் உரியகட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும்.<br>3. அத்துடன் கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டதும் பிரதேசசபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதிபெற்று அமைத்தல் வேண்டும். |

| தொ இல | அனுமதியற்று கட்டப்பட்ட கட்டட விபரம் | கீழ் தளத்தில் ஒவ்வொரு சதுர அடிக்குமான விதிப்பனவு (ரூபா) | மேல் மாடியில் ஒவ்வொரு சதுர அடிக்கு மானவிதிப்பனவு (ரூபா) |
|---|---|---|---|
| 01 | அத்திவார வேலைமட்டும் பூர்த்தியாக்கப்பட்டது | 5.00 | - |
| 02 | கூரைவரை நிர்மாணித்தல் (கூரை தவிர்ந்த) | 10.00 | 10.00 |
| 03 | கூரை உட்பட நிர்மாணித்தல் | 15.00 | 15.00 |
| 04 | முழுமையாக நிர்மாணித்தல் | 20.00 | 20.00 |
| 05 | மதில் அமைத்தல் | 5.00 (அடிக்கு) | - |

5. அனுமதியற்றகட்டடங்களுக்குபின்வருமாறுதண்டப்பணம் அறவீடுசெய்யப்படும்

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்தஅறிவித்தல் |
|---|---|---|---|
| 04 | காணி உப பிரிவிடுகை | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப் பட்ட ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்றுபலதுண்டுகளாகப் பிரிக்கப்பட்டுஉரியஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளல வேண்டும். |
| 05 | சூழல் பாதுகாப்பு உரிமம் | தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேச சபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ளவேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ"பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் / வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்ப படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தைச் செலுத்திசூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். |
| 06 | வியாபார அனுமதிப் பத்திரம் 2017 | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம் / தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப் படிவத்தை உடுவில், சுன்னாகம், ஏழாலை ஆகிய உப அலுவலகங்களில் 2017ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி அவ்அவ் உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2017ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப் பத்திரத்தை (Trade license) பெற்றுக் கொள்ளவும். 31.03.2017ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 07 | துவிச்சக்கர வண்டி உரிமம் | துவிச்சக்கர வண்டி உரிமையாளர்கள் | துவிச்சக்கரவண்டிகள் வைத்திருப்போர் 2017.03.31ஆம் திகதிக்குமுன் அவ்அவ் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2017ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும். |
| 08 | மிருகங் களுக்கான உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2017.03.31ஆம் திகதிக்குமுன் அவ்அவ் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2017ஆம் ஆண்டுக்கான மிருகஉரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும் |
| 09 | விளம்பரங் கள் அமைத் தல் அல் லது காட்சிப் படுத்தல் | விளம்பரங்களை காட்சிப் படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள் | பிரதேசசபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதியைப் பெற்றே, விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும்.<br>கட்டணவிபரம் பின்வருமாறு |

| தொ. இல | விபரம் | கட்டணம் ( 1 சதுர அடி) |
|---|---|---|
| 01 | பாதைகளில்/தனியார் வளவுகளில்/ உள்ளூராட்சி மன்றத்திற்கு சொந்தமான வளவுகளில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் / விளம்பர பலகைகள் | ரூபா 100.00 |

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்தஅறிவித்தல் |
|---|---|---|---|
| 10 | வீதி ஒழுங்கும் தெருவோர வியாபார மும் | பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள் | வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருள்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 1/2கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, முட்டை என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது |
| 12 | பொதுச்சுகா தாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையம் மற்றும் பொது மக்கள் | அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் உள்ள காணிகள் துப்பரவு செய்யப்படவேண்டும் என்பதுடன் உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 13 | பொது இடங்களில் கழிவு போடுதலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கு ஊக்கம் அளிப்பதும் | பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் | திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| 14 | பட வரைஞர் களை பதிவு செய்தல் | படவரைஞர்கள் | 2017ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்துள்ளவர்களும் 2017ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும்/ புதுப்பித்துக்- கொள்ளவும் மேலதிக விவரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும். |
| 15 | தரகர் முறை நீக்கல் | சந்தைக் குத்தகையாளர்கள் | எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர். |

மேற் கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில்புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீதுசட்ட நடவடிக்கைமேற் கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தி.சுதர்சன்,
செயலாளர்,
வலிகாமம் தெற்குபிரதேசசபை,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்வர்ண புரவர விருது வழங்கல் கொழும்பில்

யாழ்ப்பாணம், டிசெ.20

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகளிடையே கடந்த வருடம் நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகளுக்கான ஸ்வர்ண புரவர விருது வழங்கல் விழாவும் பரிசளிப்பும் இன்று பி.ப.2 மணிக்கு கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் நடைபெறும்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் நடத்தப்படும் இந்த நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எச்.ரி.கமல் பத்மசிறி தெரிவித்தார்.

நாடு முழுவதும் செயற்படும் உள்ளூராட்சி அதிகார சபைகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் மக்களின் ஒத்துழைப்பின் ஊடாக மக்கள் நேயத்தடன்கூடிய நிர்வாகத்தை எற்படுத்துவதற்கும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் இந் நிகழ்வு வருடாந்தம் நடத்தப்பட்டு விருதுகளும் பரிசில்களும் வழங்கப்படுகின்றது.

நிகழ்வில் கலந்து கொள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் நேற்று கொழும்புக்குச் சென்றுள்ளனர். (ற-9)

# பண்டிகையால் தளர்த்தப்பட்டது நேரக்கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 20

நத்தார் பண்டிகை மற்றும் புதுவருடத்தையும் முன்னிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதிவரை நேரக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்டச் சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியம் தெரிவித்தது. நேற்றுத் தொடக்கம் இது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதால் பாடசாலை மாணவர்களின் நலன்கருதி எதிர்வரும் முதலாம் திகதிவரை தொழில் நிலையங்களைத் திறந்து மக்களுக்குச் சேவையாற்றுமாறு சங்கங்களின் ஒன்றியம் கேட்டுள்ளது. (ற-4)

# சிகிச்சை முடிந்து திரும்பினர் விபத்தில் சிக்கிய பத்துப் பேர்

சாவகச்சேரி, டிசெ.20

சாவகச்சேரி சங்கத்தானையில் கடந்த சனிக்கிழமை நடந்த பேருந்து - ஹையேஸ் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்ற 12 பேரில் 10 பேர் சிகிச்சை முடிந்து நேற்று வைத்தியசாலை விடுதிகளில் இருந்து வெளியேறினர். கொழும்பு கடுவலையைச் சேர்ந்த 52 வயதுடைய ஒருவர் பற்கள் உடைந்த நிலை யிலும், தலையில் காயமடைந்த மற்றொரு வரும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (ற-9)

## பனை தறித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.20

கிளிநொச்சி, இயக்கச்சியில் அனுமதிப் பத்திரம் இன்றி பனை மரங்களைத் தறித்துத் துண்டுகளாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பளை பொலிஸ் நிலையப் பொலிஸ் பரிசோதகர் மினிப்புர தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அவர் கைது செய்யப்பட்டார் என்றும், தீராந்திகளாக்கப்பட்ட 20 பனைத் துண்டங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-6)

# நூல்களை வெளியிடுவதே யாழ். தமிழ்ச் சங்க நோக்கம்

### பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்தைப் பொறுத்த வரையில் நூல்களை வெளியீடு செய்வதுடன் அவற்றைப் புலம்பெயர் தமிழர்களுடைய கைகளில் கிடைக்கச் செய்வதற்கு உரிய திட்டங்களை வைத்திருக்கின்றோம்.

இவ்வாறு பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற கு.றஜீபனின் 'சீத்துவக் கேடு' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம் நூல்களைப் பதிப்பித்து வெளியீடு செய்வதை முக்கியதொரு திட்டமாகக் கொண்டுள்ளது. இந்த நூல் இரண்டாவது வெளியீடு.

தமிழ்ச் சங்கம் நூல்களை பதிப்பித்து வெளியிடுவது ஒரு தொலைநோக்குப் பணியாக அமைகின்றது.

தமிழ்மொழியிலே கட்டுரை, கவிதை, சிறுகதைகள், நாவல் எனப் பல்வேறு நூல்கள் வெளியிடப்படுகின்றது.

இவற்றை ஒரு நிறுவனத்தின் ஊடாக வெளியீடு செய்யும்போது, அந்த நூலினுடைய பயன்படும்- நோக்கமும் வெற்றியளிக்கும்.

தமிழ்ச் சங்கத்தை பொறுத்த வரையில் நூல்களை வெளியீடு செய்வதுடன் அவற்றைப் புலம்பெயர் தமிழர்களுடைய கைகளில் கிடைக்கச் செய்வதற்கான திட்டங்களையும் நாங்கள் வைத்திருக்கின்றோம் -என்றார்.

இந்த நிகழ்வு பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது. கவிதை நூலின் முதல் பிரதியை கருண்யா அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் தமிழழகன் வெளியிடப் புதிய உயர் கல்வி இயக்குநர் எஸ். அருள் நங்கை பெற்றுக்கொண்டார்.

நூல் வெளியீட்டு உரையைப் பேராசிரியர் சிவலிங்கராஜாவும், நூல் பற்றிய ஆய்வுரையை கவிஞர் சோ. பத்மநாதனும் வழங்கினார்.

(ந-7)



# நிலம் உண்டு: நிதி இல்லை திண்டாடும் விவசாயிகள்

யாழ்ப்பாணம், டிசெ.20

தோட்ட நிலங்கள் உள்ள போதும் அவற்றில் பயிர் செய்வதற்கான பொருளாதார வளம் எம்மிடம் இல்லை. அதிகாரிகள் இது தொடர்பில் ஆவன செய்து எமது வாழ்வாதாரத்துக்கு உதவ வேண்டும்.

இவ்வாறு வலி. வடக்கில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியமர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

வலி. வடக்கில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் விடுவிக்கப்பட்ட 640 ஏக்கர் நிலத்தில் பலாலி வடக்கு மற்றும் தெற்குப் பிரதேசங்கள் உள்ளடங்குகின்றன. விடுவிக்கப்பட்ட பலாலி வடக்கில் மீனவக் குடும்பங்கள் அருகில் உள்ள கடலை நம்பி வாழ்கின்றனர். தெற்கு மக்கள் அந்த பகுதியின் வளமான மண்ணை நம் பியே வாழ்கின்றனர்.

எமது நிலம் எம்மிடம் கையளிக்கப்பட்டபோது, வனப் பகுதியாகவே கையளிக்கப்பட்டது. பல லட்சம் ரூபா செலவு செய்து பல தோட்ட உரிமையாளர்கள் தமது நிலத்தைப் பண்படுத்தி தோட்டச் செய்கைக்கும் தயாராகி விட்டனர். தோட்டச் செய்கையில் ஈடுபடுவதற்காக மட்டும் சுமார் 80 தோட்ட உரிமையாளர்கள் தயார் நிலையில் உள்ளனர். பல நிலங்கள் தயார்படுத்தப்பட்டு வருகின்றன.

> நீண்டகாலம் இராணுவத்தால் கையக்கப்படுத்தப்பட்டிருந்த இந்த நிலங்கள் மக்களிடம் கையளிக்கப்படும்போது காடுகளாகவே காணப்பட்டன. அவற்றைத் துப்புரவாக்கிப் பண்படுத்தி தோட்டச் செய்கைக்கு விவசாயிகள் தயார்படுத்தியுள்ளனர். நீண்டகாலத்தின் பின்னர் அவை சீர் செய்யப்பட்டதால் அதிக செலவு ஏற்படுகின்றது.

நீண்டகாலத்துக்குப் பின்னர் சீர்செய்யப் படுவதால் அதிக செலவுகள் ஏற்படுகின்றன. எமக்கான உள்ளீடுகளைவழங்க அரச நிறுவனங்களோ அல்லது வெளிநாட்டு நிறுவனங்களோ முன் வரும் சந்தர்ப்பத்தில் இந்த மாவட்ட மக்களுக்கான மரக்கறித் தேவையை கணிசமான அளவு எம்மாலும் ஈடு செய்யமுடியும்.

எமது பகுதிக்கான வீதிகளில் கால்நடையாகக் கூட பயணிக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. அவற்றை செப்பனிட்டாலே நாம் அடுத்த கட்ட நகர்வுகளுக்குள் பயணிக்க முடியும். இங்கே சில வீதிகள் சீரமைக்கப்பட்டுள்ளன. இன்னமும் பல வீதிகள் சீர் செய்யப்படவேண்டிய நிலையிலேயே உள்ளன - என்றனர்.

(ந-101)

# மீண்டெழுந்து வரும் பலாலி வடக்குப் பகுதி

யாழ்ப்பாணம், டிசெ.20

தற்போதைய அரசின் இரண்டு ஆண்டு ஆட்சிக் கால நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ள பலாலி வடக்குக் கிராமத்தில் அபிவிருத்திப் பணிகள் வேகமாக நடைபெறுகின்றன.

அன்ரனிபுரத்திலும், புறநகர் பகுதிகளிலும் 160 வீடுகள் அமைக்கப்பட்டு முழுமைபெற்றுள்ள நிலையில், அந்தப் பகுதிகளின் உள்ள வீதிகளும் துரிதகதியில் அமைக்கப்படுகின்றன.

எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெறவுள்ள நிகழ்வுக்காக தொண்டமானாறுச் சந்தியில் இருந்து பலாலி வரையான 5 கிலோ மீற்றர் வீதி 197 மில்லியன் ரூபா செலவில் தார்ப்படுக்கை வீதியாக



அமைக்கப்படுகின்றது. உள்ளக வீதிகளும் தார் வீதிகளாக மாற்றப்படுகின்றன. இந்த வீட்டுத் திட்டத்துக்கு தண்ணீர் விநியோகத்தை நீர்த்தாங்கிகள் மூலம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரேயொரு கிணறு மட்டும் அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு குடியமரும் மக்களின் வாழ்வாதாரத் தொழிலாகக் கடற்றொழில் உள்ளது. கடற்கரையருகே அவர்களுக்கான தொழில் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கிராமத்தில் தற்போது அமைக்கப்பட்டு 160 வீடுகளைத் தவிர, மேலும் 120 பேர் குடியமர தயார் நிலையில் உள்ளனர் என்றும்-தெரிவிக்கப்பட்டது.

(ந-101)

# மறைக்கல்வி மாணவர் கிறிஸ்மஸ் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.20

மறைக்கல்வி மாணவர்களுக்கான கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் மு.ப 10 மணிக்கு தலைமன்னார் மேற்கு புனித லோறன்சியார் ஆலய வளாகத்தில் பங்குத் தந்தை நவரட்ணம் தலைமையில் இடம்பெற்றன. நிகழ்வில் தரம் ஒன்று மாணவர்கள் தொடக்கம் தரம் 10 வரையிலான மாணவர்கள் கலந்து கொண்டனர். வர்ணம் தீட்டுதல், அச்சுப் பதித்தல், மாலை கோர்த்தல், கழிவுப் பொருள்களைக் கொண்டு கிறிஸ்மஸ் சின்னம் (பெசி) செய்தல், பூச்செண்டு கட்டுதல், அபிநயக் கதை சொல்லுதல், கழிவுப் பொருள்களைக் கொண்டு கிறிஸ்மஸ் மரம் அமைத்தல், கிறிஸ்மஸ் காட் செய்தல், பாலன் கொட்டில் அமைத்தல், கோலம் போடுதல் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

(ந-7)



# வெங்காய செய்கையில் ஈடுபடத் தயக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.20

குடாநாட்டு விவசாயிகளை மழை ஏமாற்றி வரும் நிலையில் காலபோக வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

காலபோக வெய்காயச் செய்கைக்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும் விவசாயிகள் அதில் ஆர்வம் காட்டாதுள்ளனர். மழை திடீரென ஏற்பட்டால் வெங்காய செய்கை அழிந்து விடும் என்பதே அவர்களின் தயக்கத்துக்குக் காரணம்- விதை வெங்காயங்கள் தாராளமாகக் காணப்படுகின்றன- என்று யாழ்.மாவட்ட விவசாயத் திணைக் களத்தினர் தெரிவித்தனர்.

(ந-17)

# 2 வாரங்களுள் மழை பொய்த்தால் நெல் அழியும்

## மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

இரு வாரங்களுக்குள் மழை பெய்யாவிட்டால் வடக்கின் காலபோக நெற்செய்கை பாதிப்படையும்.

இவ்வாறு மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உவர்த்தன்மை கொண்ட வயல்களில் தண்ணீர் வற்றியுள்ளது. களித்தரை நில வயல்களில் தண்ணீர் ஓரளவு காணப்படுகின்றது. இரு வாரத்துக்குள் மழை பெய்ய வேண்டியது அவசியமாகியுள்ளது. இல்லாவிட்டால் நெற்பயிர்கள் பழுத்து, வாடி முழுமையாக அழிந்துவிடும். அநேக வயல்களில் களைகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. மழை பெய்தால் அவையும் கட்டுக்குள் வரும். அநேக வயல்களில் இரு வாரங்களுக்குப் போதுமான ஈரலிப்பே காணப்படுகின்றது - என்றார்.

அதேவேளை, வடக்கில் பல இடங்களிலும் மழை வேண்டி விசேட ஆலய வழிபாடுகள் இடம்பெற்றன.

பொங்கல், போர்த்தேங்காய் உடைத்து விவசாயிகள் வழிபாடுகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.

(ந-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடைகளைக் கடத்தி இறைச்சியாக்கும் கும்பல்

## தென்மராட்சி பிரதேச கால்நடை வளர்ப்போர் அச்சம்

தென்மராட்சி, டிசெ.20
தென்மராட்சியில் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருக்கும் கால்நடைகளைத் திருடுவோர் அவற்றை இறைச்சியாக்கி எச்சங்களைக் கைவிட்டுச் செல்கின்றனர் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.
கன்று ஈன்ற பசுக்களையும், கன்று ஈனுவதற்குத் தயார் நிலையில் உள்ள பசுக்களையும் கூடக் கடத்திச் சென்று பற்றைக் காடுகளில் கொலை செய்து இறைச்சியாக்குகின்றனர். கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடுவதற்கு அச்சம் கொண்டு வளவுக்குள் தொடர்ந்து கட்டி வைத்திருக்க வேண்டியுள்ளது.
கடந்த வாரம் கல்வயல் பகுதியில் மேய்ச்சலுக்கு குட்டியுடன் கட்டப்பட்டிருந்த ஆட்டை இரும்புப் பொருள்கள் வாங்குவது போல வாகனத்தில் வந்த கும்பல் குட்டியை விட்டு விட்டு ஆட்டைக் கடத்திச் சென்றுள்ளது. கடந்த புதன்கிழமை தனங்களப்பு பகுதியில் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த மாட்டைக் கடத்திச் சென்றவர்கள் அங்குள்ள பற்றைக் காட்டுக்குள் அதனைக் கொலை செய்து இறைச்சியை எடுத்துக் கொண்டு எச்சங்களை கைவிட்டுச் சென்றுள்ளனர். நேற்று முன்தினம் நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் பகுதியில் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த கன்றுத்தாச்சி மாட்டைக் கடத்திச் சென்றவர்கள் கொல்லங் கிராய் மயானத்தில் கொலை செய்து இறைச்சியாக்கி இறந்த நிலையில் கன்றையும் எச்சங்களையும் கைவிட்டுச் சென்றுள்ளனர்.இதுகுறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.(ற-9)



# பண்பாட்டு விழுமியங்களை போர் மோசமாக சிதைத்தது

## வடக்கு சுகாதார அமைச்சர் கருத்து

வவுனியா, டிசெ. 20
நாட்டில் இடம்பெற்ற நீண்ட கால போர் எங்களுடைய கலை கலாசாரம் பண்பாட்டு விழிமியங்களை மோசமாக பாதித்துள்ளது. எங்களுடைய சமுதாயத்திலே தமிழ் பேசுகின்ற மக்கள் ஆண்டாண்டு காலமாக பின்பற்றி வந்த பல கலாசார நிகழ்வுகள் எங்களுடைய விழுமியங்கள் காணாமல்போயுள்ளதை நாங்கள் எல்லோரும் அறிவோம்.
இவ்வாறு வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
வவுனியா பிரதேச கலாசார விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
தமிழ் பேசுகின்ற மக்களுடைய கலை கலாசாரத்தை எங்களுடைய பண்பாட்டு விழுமியங்களை நாங்கள் மீண்டும் கொண்டுவரவேண்டும். எங்களுடைய இளைய தலைமுறையினர் எங்களுடைய கலை கலாசாரத்தை பண்பாட்டு விழுமியங்களை அனுசரித்து அவற்றை மதித்து தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்க வேண்டும். அதற்கு இப்படியான விழாக்கள் மிகவும் உறுதுணையாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.
இப்போதுள்ள இளைஞர்களை காமன் கூத்து என்ன என்று கேட்டால் விழி பிதுங்கி நிற்பார்கள் என்று நான் நினைக்கின்றேன். எங்களுடைய கலாசாரத்தோடு பின்னிப் பிணைந்த பல விடயங்கள் எங்களுடைய சமுதாயத்தில் மறைந்த அல்லது மறைந்து கொண்டு போகின்றவிடயங்களாக இருக்கின்றது. இவ்வாறான விழாக்களூடாக நர்ங்கள் தொன்று தொட்டு எங்களுடைய கலாசாரத்தோடு பின்னிப் பிணைந்த அந்த விடயங்களை மீட்டு சமுதாயத்துக்கு கொண்டுவரவேண்டும்.
அவற்றைப் பேணிப் பாதுகாப் பதற்கு அரச உத்தியோகத்தர்கள், அவர்களுடன் இணைந்தவர்களாக இந்த மாவட்டத்திலே தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையிலே நிச்சயமாக நாங்களும் அவர்களுடன் இணைந்து செயலாற்றுவோம். எங்களுடைய சமுதாயத்தை தமிழ்பேசுகின்ற மக்கள் எங்களுடைய கலை கலாசாரத்தை மீண்டும் எங்களுடைய பிரதேசங்களிலே நிலைநிறுத்துவதற்கு நாங்கள் எல்லோரும் சேர்ந்து உழைப்போம் என்று உறுதி கொள்வோம் - என்றார். (ற-4)


# 70,000 வாழைகள் நடாவால் நாசம்

யாழ்ப்பாணம், டிசெ.20
நடாப் புயலின் தாக்கத்தால் குடாநாட்டில் குறைந்தது 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழைகள் முழுமையாக பாதிக்கப்பட்டன.
இவ்வாறு மாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பெரும்பாலான வாழைகள் குலைகளுடன் பாறி முறிந்துள்ளன.
சேதப்பட்ட வாழைகள் எல்லாவற்றையும் அகற்றிப் புதிதாக வாழைச் செய்கைக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.
இயற்கை அழிவால் செய்கையாளர் கள் பெரிதும் நட்டப்பட்டுள்ளனர் - என்றார்.
குடாநாட்டில் வாழைச் செய்கைக்கு பெயர் பெற்ற நீர்வேலியில் உள்ள வாழைக்குலை விற்பனைச் சந்தையில் கதலி வாழைப் பழம் கிலோ 50 ரூபாவைத் தாண்டியுள்ளது. அடுத்து வரும் நாள்களில் வாழைப் பழத்தின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று வாழைக்குலை வியாபாரிகள் தெரிவித்தனர்.
தென்பகுதியில் இருந்தும் வாழைக்குலை வியாபாரிகள் வாழைக்குலைகளை கூடு தலாகக் கொள்வனவு செய்து எடுத்துச் செல்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.
(ற-17)

# இராணுவத்துக்குக் காப்பெற் எங்களுக்கோ மண் வீதிகள்

## பாலாலி கிழக்கு மக்கள் விரக்தி





யாழ்ப்பாணம், டிசெ.20
வலி.வடக்கில் இராணுவத்தின் பிடியில் இருந்து மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வீதிகளில் பாதசாரிகளே செல்ல முடியாத நிலமை காணப்படுகின்றது. அதேநேரம் இராணுவத்தின் பிடியில் தற்போதும் உள்ள பகுதிகளில் காப்பெற் வீதிகள் அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.
இவ்வாறு பலாலி கிழக்கு மக்கள் விரக்தியோடு தெரிவித்தனர்.
பலாலியில் இருந்து 1990 ஆம் ஆண்டில் நாம் விரட்டப்பட்டோம். அதன்பின்னர் கடந்த டிசெம்பர் மாதமே எம்மை எமது நிலத்தில் குடியமர அனுமதித்தனர். அன்றுமுதல் எமது காணிகளில் உள்ள இராணுவ எச்சங்கள், பற்றைகள், கற்கள் என்பவற்றை துப்புரவு செய்வதிலும், வாழ்வாதார நிலங்களைப் பண்படுத்துவதிலும் எமது காலம் போகின்றது. எமது பகுதியில் வீதிகள் சீர் செய்யப்படவில்லை. நாம் அடுத்த கட்டம் நோக்கி நகர வேண்டுமானால் எமக்கு வீதிகள் சீர் செய்து தரப்பட வேண்டும். பலாலி வடக்கு மற்றும் கிழக்கை இணைக்கும் வீதியில் எந்த வாகனமோ - சைக்கிள் கூடப் பயணிக்க முடியாதுள் ளது. பாதசாரிகள் பகலில் கூட வீதியால் நடந்து செல்லச் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.
அதேவேளை பலாலி, பருத்தித்துறை வீதி தார்ப்படுக்கை வீதியாக மிக வேகமாக சீரமைக்கப்படுகின்றது. மக்கள் குடியமர அனுமதிக்கப்பட்ட வீதி வரையே இந்த சீரமைப்பு இடம்பெறும் என்று எண்ணினோம். ஆனால் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள பகுதிக்குள்ளும் சுமார் 900 மீற்றர் வரையில் தார்ப்படுக்கை வீதி நீண்டு செல்கின்றது. இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதி வீதிகளைச் சீரமைப்பில் அக்கறை எடுப்போர் மக்கள் வாழ்விடங்களில் உள்ள வீதிகளையும் சீரமைத்து, உட்கட்டுமான அபிவிருத்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். (ற-101)

# சனசமூக நிலையம் மீது இரவு தாக்குதல்



கொக்குவில் இந்திரா சனசமூக நிலையம் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
நேற்று முன்தினம் இரவு இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சனசமூக நிலையத்தின் யன்னல் கண்ணாடிகள் நொருக்கப்பட்டுள்ளன. சனசமூக நிலையத்தின் சுவர்களும் இடிக்கப்பட்டுள்ளன. தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ற-106)

# தொண்டர் ஆசிரியர் நியமனம்: அங்கீகாரம் கிடைக்கவில்லை

## மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20
வடக்கு மாகாணத்தில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனத்துக்கான அமைச்சரவை அங்கீகாரம் இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிவித்தார் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன்.
வடக்கில் நீண்ட காலமாகப் பணிபுரியும் சுமார் 700 தொண்டராசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிப் பலமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர். இறுதியாக வட மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக 3 நாள் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அவர்களிடமிருந்து விவரங்களைப் பெற்றுக் கொண்ட ஆளுநர் 6 மாதகால அவகாசம் தேவைப்படுவதால் [illegible] நியமனம் வழங்கப்படும் என உறுதியளித்து உணவு தவிர்ப்பை நிறைவுக்கு கொண்டுவந்தார்.
இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே கல்வி அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொண்டராசிரியர்களிற்கான நியமனம் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து தரவுகளும் திரட்டப்பட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்காக எம்மால் அனுப்பப்பட்டுள்ளது.
இந்த விவரங்கள் அண்மையில் அமைச்சரவையின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. இந்த விடயம் அமைச்சரவையில் ஆராயப்பட்டு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை. அங்கீகாரம் கிடைக்கும் சந்தர்ப்பத்திலேயே உடன் நியமனம் வழங்க முடியும். அவர்களுக்கான நியமனம் இந்த ஆண்டு நிறைவுக்குள் கிடைப்பதற்கான சந்தர்ப்பம் குறைவாகவுள்ளது. பெப்ரவரி மாதத்துக்குள் நிறைவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 மாதங்களில் நாட்டில் 7,592 பெருங்குற்றங்கள்

## கூறுகிறது பொலிஸ் தலைமையகம்

கொழும்பு, டிசெ 20

இந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரையிலான 11 மாத காலப் பகுதியில் நாடு முழுவதிலும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தாக்குதல் உட்பட்ட 7,592 பெருங் குற்றச்செயல்கள் நடந்திருப்பதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

நவம்பர் மாதத்தில் மாத்திரம் 575 கிரிமினல் குற்றச்செயல்கள் நடந்துள்ளன. 2015 நவம்பருடன் ஒப்பிடும்போது இம்முறை 90 குற்றச்செயல்கள் குறைந்துள்ளன. இவ் வருடம் நவம்பரில் 39 கொலை கள், 198 கற்பழிப்புகள், 153 வீடுடைப்புகள், 64 கொள்ளைகள், 121 திருட்டுகள் ஆகிய நடந்துள்ளன. இவற்றுள் பெருமளவான 170 கிரிமினல் குற்றச் செயல்கள் மேல் மாகாணத்திலேயே நடந்துள்ளன. அவற்றுள் 33 குற்றச்செயல்கள் நுகேகொடையில் நடந்துள்ளன.

2016 நவம்பர் மாதத்தில் மாத்திரம் பிரதேச ரீதியில் நடந்துள்ள குற்றச்செயல்கள்:

தங்காலை 30, அநுராதபுரம் 28, காலி மற்றும் கண்டி 26, இரத்தினபுரி 23, கம்பகா 22, மாத்தறை மற்றும் மொனராகலை 20.

இந்த 11 மாதங்களில் 198 கற்பழிப்புச் சம்பவங்களும், 125 பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்களும் நடந்திருப்பதாகவும், இந்தக் குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களில் 16 வயதுக்குக் குறைந்த சிறுமிகளே பெருமளவில் உள்ளதாகவும் பொலிஸ் தலைமையகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



# உலக வங்கிப் பிரதிநிதிகள் கிழக்கு முதல்வருடன் பேச்சு

மட்டக்களப்பு, டிசெ 20

கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டுக்கும் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்குமிடையில் சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போது உலக வங்கியின் தெற்காசியாவுக்கான நடவடிக்கை அதிகாரியரிஸ்ஸா லிங்டோஹ் சொம்மர், உலக வங்கியின் நகர அபிவிருத்தி தொடர்பான நிபுணர் ஜெசிக்கா ரேசல் மற்றும் பொருளாதார பேராசிரியர் ப்ரையன் எச் ரொபர்ட்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் கிழக்கு மாகாண அமைச்சர்களாக எஸ். தண்டாயுதபாணி, க.துரைராஜசிங்கம், ஆரியவதி கலப்பத்தி, மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இதன்போது ஆஸ்திரேலிய மற்றும் அமெரிக்க நிதியுதவியுடன் உலக வங்கி ஊடாக வடக்கு-கிழக்கில் நெல்சிப் திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சரினால் தெளிவுபடுத்தப்பட்டது.

அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களை மேலும் வலுப்படுத்துவதற்காக வருமானங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் அதனூடாக, உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணித் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் தொடர்பிலும் கிழக்கு மாகாண முதலமைச்சர் இதன்போது உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கு எடுத்துரைத்தார்.

கிழக்கில் தொழிற்பேட்டைகளை அமைத்து அதனூடாகவும் பிராந்தியத்தின் அபிவிருத்திக்கான ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பான யோசனையொன்றையும் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இதன்போது முன்வைத்தார்.

அத்துடன் மாகாணங்களுக்கான அதிகாரப்பகிர்வு மற்றும் காணி அதிகாரம் ஆகியவை வழங்கப்படாமையினால் பல மக்கள் நலத் திட்டங்களை முன்னெடுக்கும் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இதன் போது கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் சுட்டிக்காட்டினார். (த)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த மாத்திரைகள் இந்தியாவில் மீட்பு

சுமார் 123,000 சட்டவிரோத மாத்திரைகளை இராமநாதபுரம் பொலிஸார் மீட்டுள்ளதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வலி நிவாரணி மற்றும் கர்ப்ப தடை மாத்திரைகளே சென்னையிலிருந்து பஸ் மூலம் கொண்டுசெல்லப்படும் போது இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இந்த மாத்திரைகள் கடல் மார்க்கமாக இலங்கைக்கு கடந்தப்படவிருந்ததாக விசரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே மேற்படி சட்டவிரோத மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளமை குருதிப்பிடத்தக்கது. (த)

# டீ.ஐ.ஜீயின் சாரதி வெட்டிக் கொலை

கொழும்பு, டிசெ 20

ஜனாதிபதி பாதுகாப்புப் படைக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம்.விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ சாரதியான பொலிஸ் சார்ஜண்ட் டீ.ஜே.விஜேநாயக்க பொலனறுவை புதிய நகரிலுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை மர்மமான முறையில் வெட்டியும், குத்தியும் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக பொலநறுவைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மெதிரிகிரிய, திவுலன்கடவல பிரதேசவாசியான இவர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொழும்பிலிருந்து வந்து பொலனறுவை புதிய நகரிலுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபரின் உத்தியோகபூர்வ இல்லத் தொகுதியில் தங்கியிருந்த போதே இவ்வாறு கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

வெட்டுக் காயங்களுடன் இந்த இல்லத்தின் பின்பக்க அறையொன்றில் கிடந்த இவரது சடலம் பொலனறுவைப் பொலிஸாரால் அன்றைய தினம் இரவு 7 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது. கொலையாளிகள் பயன்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் மோட்டார்சைக்கிள் கடந்த சனிக்கிழமை மின்னேரிய நீர்த்தேக்கத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

கொலையாளிகள் பற்றிய எவ்விதத் தகவலோ கொலைக்கான காரணமோ இதுவரை தெரியவரவில்லை எனவும், இது தொடர்பில் தீவிர விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலநறுவை தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எஸ்.எம்.ஜரூல் தெரிவித்துள்ளார். (த)

# சம்பாவை விட நாட்டரிசியின் விலை உயர்வு

கொழும்பு, டிசெ 20

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவில் இப்போது நாட்டரிசியின் விலை சம்பாவை விட உயர்ந்திருப்பதாக மரந்தகஹ முல ஐக்கிய அரிசி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் ரஞ்சித் கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

நாடு நெல்லுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டின் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டிருப்பதாகவும், முன்னர் நாட்டரிசி சம்பாவை விட கிலோவொன்றுக்கு 10 ரூபா குறைவாக இருந்த போதிலும் இப்போது நிலமை நேர்மாறாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெள்ளை நாடு நெல்லே பாவிக்கப்படுவதால் அந்த நெல்லுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும், தங்களைப் பொறுத்த மட்டில் தற்போது சிவப்புப் பச்சை அரிசி மட்டுமே விலை குறைவாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த)

# வைத்தியசாலை மாடியிலிருந்து விழுந்ததால் நோயாளி படுகாயம்

கொழும்பு, டிசெ 20

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் இரண்டாம் மாடியிலிருந்து கீழே விழுந்த 36 வயதுடைய நபர், பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கல்லீரல் கோளாறு காரணமாக, கடந்த சனிக்கிழமை, அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளி ஒருவரே இவ்வாறு கீழே விழுந்து காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இவர் அனுமதிக்கப்பட்ட தினத்திலிருந்து, சிகிச்சை பெற்றுக் கொள் வதற்கு மறுப்புத் தெரிவித்து வந்ததாகவும், அவர் மனநோயாளியா என்பது தொடர்பில் பரிசீலிக்கவுள்ளதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன. (த)



# பஸ் விபத்தில் 20 பேர் காயம்

கொழும்பு, டிசெ 20

யாத்திரை சென்றவர்களை ஏற்றிய பஸ் ஒன்று சூங்காவில் வனவிலங்கு அலுவலகத்துக்கு அருகில் நேற்று விபத்துக்குள்ளாகியதில் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

கேகாலை அரநாயக்க பிரதேசத்தில் இருந்து சோமாவதி விகாரைக்கு யாத்திரை சென்றவர்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் பொலனறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதிக வேகமே விபத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# தந்தையிடம் கப்பம் பெற முயற்சித்த மாணவனுக்கு உதவிய இருவருக்கு பிணை

கொழும்பு, டிசெ 20

தனது தந்தையிடம் 8 கோடி ரூபா கப்பம் பெற முயற்சித்த தங்கொட்டுவ, கெடெல்ல பிரதேச மாணவனுக்கு உதவி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரு மாணவர்களையும் மாரவில மாவட்ட நீதிவான் பஸன் சமரகோன் பிணையில் செல்ல அனுமதித்தார்.

மொருக்குனிய பிரதேசவாசியான கொன் சாமர (வயது-19) மற்றும் மெதிகெல பிரதேசவாசியான னொல் தாருக (வயது-19) ஆகிய இருவருக்குமே பிணை விடுதலை வழங்கப்பட்டது.

கடந்த 14ஆம் திகதி இனந்தெரியாத கும்பலொன்றால் தான் வெள்ளை வானொன்றின் மூலம் கடத்தப்பட்டிருப்பதாகவும் தன்னை விடுதலை செய்ய கடத்தல் காரர்கள் 7 கோடியே 75 இலட்சம் ரூபாவை கப்பமாகக் கேட்டதாகவும் இந்த மாணவன் தனது தந்தைக்கு தொலைபேசி மூலம் தெரிவித்திருக்கிறார்.

தந்தை இந்தச் சம்பவம் தொடர்பில் தங்கொட்டுவ பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததையடுத்து அவர்கள் மேற்கொண்ட தேடுதலின் பின் அப்பிரதேசத்திலுள்ள கைவிடப்பட்ட ஆலையொன்றிலிருந்து இந்த மாணவன் மீட்கப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் அவரது இரு நண்பர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் கடந்த 15ஆம் திகதி மாரவில நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின் முதலாவது சந்தேக நபரான மாணவன் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அன்றைய தினமே விடுதலை செய்யப்பட்டதுடன் ஏனைய இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்களுக்கே தற்போது பிணை வழங்கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு நாணயத் தாள் கடத்த முயன்ற மூவர் கைது

கொழும்பு, டிசெ 20
கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் வைத்து வெளிநாட்டு குடிமக்கள் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

வெளிநாட்டு நாணயத் தாள்களைக் கடத்த முயற்சித்த குற்றத்துக்காகவே, இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடத்த முற்பட்ட நாணயத் தாள்களின் பெறுமதி 11.6 மில்லியன் ரூபா எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, சந்தேக நபர்கள் கட்டார் நாட்டுக்கே நாணயத்தாள்களை கடத்த முயற்சித்துள்ளனர் என்றும், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (கு)

# நிஷாந்தவுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, டிசெ 20
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேனவை ஏற்றுக்கொள்ள முடியாதென பகிரங்கக் கூட்டமொன்றில் தெரிவித்த புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த பெரேராவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையொன்றை மேற்கொள்ள சுதந்திரக் கட்சி தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்த ஒழுக்காற்று விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குச் சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளதாக நிஷாந்த பெரேராவுக்குக் கடிதமூலம் அறிவிக்கப்பட்டிருப்பதாகக் கட்சியின் நிறைவேற்றுக்குழு தெரிவித்துள்ளது.

நிஷாந்த பெரேராவின் இந்த விமர்சனம் தொடர்பாக அவரிடம் தன்னிலை விளக்கம் ஏற்கனவே கோரப்பட்டது எனவும், அவர் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்ததாலேயே இந்த ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (கு)

# ஆஸியிக்கு ஆள் கடத்திய கடற்படை அதிகாரிக்கு சிறப்புப் பாதுகாப்பு

## முன்னாள் தளபதி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ 20
சட்டவிரோத ஆள்கடத்தல்களுடன் தொடர்புடையவர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள கடற்படை உயரதிகாரி ஒருவருக்குச் சிறப்புப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

ஆஸ்திரேலிய சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாகக் குற்றம் சுமத்தப்பட்ட கடற்படை லெப்டினன்ட் கொமாண்டர் ஒருவருக்கே இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் 123 படகுகளை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைத்தார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடற்படையின் லெப்டினன்ட் கொமாண்டர் நிலை வகிக்கும் அதிகாரிகளுக்குப் பிரத்தியேகப் பாதுகாப்பு மற்றும் வாகனங்கள் வழங்கப்படுவதில்லை. எனினும் இந்த அதிகாரி கடற்படைக்கு எதிரான வழக்கு ஒன்றில் அரச சாட்சியாளராக முன்னிலையாகிய காரணத்தால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் சித்திரவதைக் கூடங் கள் காணப்பட்டதாகக் கூறி ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகளுக்கு அந்த இடங்களை இந்த அதிகாரியே காண்பித்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் கடற்படைத் தளபதி மற்றும் கடற்படைச் சிப்பாய்களால் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இந்த அதிகாரி கடந்த 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் மூன்று ஆண்டுகளின் பின்னர் இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரியின் பாதுகாப்புக்காக இரண்டு கடற்படைச் சிப்பாய்கள் கடமையில் அமர்த் தப்பட்டுள்ளதுடன், ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டு, கைத்துப்பாக்கிகள் இரண்டு ஆகி யனவும் கடற்படையினால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அதிகாரி பொய்யான குற்றச்சாட்டைச் சுமத்தி வருவதாக முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாடு குறித்து குழு ஒன்றின் ஊடாக விசாரணை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு)



# கால்டன் விகாரைக்கு வர்ணம் பூசும் நாமல்

கொழும்பு, டிசெ 20
தங்காலை, கால்டன் வீட்டில் உள்ள பௌத்த விகாரையைச் சீரமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கான அனைத்து வேலைகளும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜப க்சவின் மகன் நாமல் ராஜபக்சவின் தலைமையில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த இடத்தில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் ராஜபக்ச குடும்பத்தினர் இணைந்து பூசை வழிபாடுகளில் ஈடுபடுவது வழக்கம். இந்த நிலையில் நாமல் குறித்த விகாரைக்கு வெள்ளை வர்ணம் பூசும் ஒளிப்படங்கள் சில இணையத்தளங்க்ளில் வெளியாகியுள்ளன. (கு)

# முஸ்லிம் தனியார் சட்டம் குர்ஆனுக்கு முரணாகக்கூடாது

## பள்ளிவாசல்கள் சம்மேளனம் வலியுறுத்து

கொழும்பு, டிசெ 20
முஸ்லிம் தனியார் சட்டத்தில் குர்ஆன் மற்றும் ஹதீஸுக்கு முரணான எந்தவொரு திருத்தமும் மேற்கொள்ளக்கூடாது என அரசை வலியுறுத்தும் தீர்மானமொன்றைக் கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு கொழும்பு மருதானை ஸாரா பள்ளிவாசலில் நடைபெற்ற கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் கூட்டத்திலே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகச் சம்மேளனத்தின் தலைவர் அஸ்லம் ஒத்மான் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தில் 12 பள்ளிவாசல்களின் சம்மேளனங்கள் அங்கம் வகிப்பதுடன் இவற்றில் சுமார் 175 பள்ளிவாசல்கள் உள்ளடங்குகின்றன.

இந்தக் கூட்டத்தில் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தைச் சேர்ந்த சுமார் 300 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (கு)

# 5,000 ரூபா அறிவிப்பு; விசாரணை வேண்டும்

## கூறுகிறது கூட்டு எதிர்க் கட்சி

கொழும்பு, டிசெ 20
நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் 5 ஆயிரம் ரூபா அறிவிப்பு தொடர்பில் அரசு விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என கூட்டு எதிர்க் கட்சி அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு 2 தினங்களுக்கு முன்னர் மத்திய வங்கியிலிருந்து இரகசியமான முறையில் 1300 கோடி ரூபா பணத்தை திருட்டுத்தனமாக வெளியேற்றியுள்ளதாகச் செய்துள்ள அறிவிப்பு பயங்கரமான ஒன்று எனவும், ரூபா தாள் நாணயத்தின் மீது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்காகவும் நிதி அமைச்சரின் இந்தக் கருத்துத் தொடர்பில் விசாரணை அவசியம் எனவும் கூட்டு எதிர்க் கட்சி கோரியுள்ளது. (கு)

# ஆங்கிலப் பாடப் பரீட்சைக்கு தோற்றிய 35 சிறைக் கைதிகள்

கொழும்பு, டிசெ 20
சிறைச்சாலைகளுக்குள் இருந்தவாறே ஆங்கிலம் கற்றுக்கொண்ட 35 கைதிகள் கடந்த சனிக்கிழமை நடந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்துக்குத் தோற்றியதாக சிறைச்சாலைத் திணைக்களம் தெரி வித்திருக்கிறது.

இவர்களுள் இரண்டு சாவுத் தண்டனைக் கைதிகளும் உள்ளடங்குவதாகவும் சிறை களில் உள்ள ஆங்கி லப் புலமை பெற்ற கைதிகள் சக கைதிகளுக்காக இலவசமாக நடத்தும் ஆங்கில வகுப்புகள் அவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருப்பதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உயரதிகாரி யொருவர் தெரிவித்தார். (கு)

# ஒரு தொழிற்சாலையைக்கூட நிர்மாணிக்க முடியாத மகிந்த

## சாடுகிறார் லக்ஸ்மன் கிரியெல்ல

கொழும்பு, டிசெ 20
தமிழீழ விடுதலை புலிகளுடனான போரை நிறைவுக்குக் கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு நாட்டில் - ஒரு தொழிற் சாலையை நிர்மாணிக் க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றம் சுமத்தியுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்சவின் ஆட்சியின் போது போர் நிறைவுக் கொண்டாட்டங்கள் மாத் திரமே முன்னெடுக்கப்பட்டன.

நாட் டின் எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு எந்தவொரு திட்டங் களும் முன்னெடுக்கப்படவில்லை.

அத்துடன் கடந்த ஆட்சிக் காலத்தில் நாட்டில் முதலீட்டாளர்கள் அவர்களின்



முதலீடுகளைக் கைவிட்டு சென்ற சந்தர்ப்பங்களே அதிகம்-என்றார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணை மருத்துவ சேவையினரின் விடுமுறைகளால் அசௌகரியம்

## சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோர் தெரிவிப்பு

சாவகச்சேரி, டிசெ.20

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் துணை மருத்துவ சேவையில் கடமையாற்றுபவர்கள் விடுமுறையில் செல்லும்போது மாற்று ஒழுங்கு இல்லாததால் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று நோயாளர்கள் தெரிவித்தனர்.

வைத்தியசாலை ஆய்வுகூட உதவியாளர், எக்ஸ்-றே பிரிவு போன்றவற்றுக்கு தென் பகுதியைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமது வசிப்பிடங்களுக்குச்சென்று திரும்பும் காலப்பகுதி வரை அந்தப் பிரிவுகள் மூடப்படுகின்றன. நோயாளர்கள் தனியார் ஆய்வுகூடங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது.

அண்மையில் சங்கத்தானையில் இடம்பெற்றவாகன விபத்தில் காயமடைந்தவர்கள் அனைவருக்கும் தலை மற்றும் கை கால்களில் பாதிப்பு ஏற்பட்டிருந்தபோதும் எக்ஸ் - றே பிரிவு அலுவலர் இன்றி மூடப்பட்டிருந்ததால் பாதிக்கப்பட்டவர்கள் வேறு வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மழையின் பின்னரான காலப்பகுதியில் காய்ச்சல் போன்ற தொற்று நோய்களின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் ஆய்வுகூட அலுவலர் விடுமுறையில் சென்றுள்ளார். நோயாளர்கள் குருதிப் பரிசோதனைக்காக தனியார் ஆய்வுகூடத்தை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.- என்று அவர்கள் தெரிவித்தனர்.

அலுவலர்கள் விடுமுறைகள் கோரும்வேளையில் பதில் கடமை அலுவலர்களை வழங்குமாறு உயர் அதிகாரிக்கு விண்ணப்பம் பரிந்துரையுடன் அனுப்பிவைக்கப்படுகிறது. அங்கு விடுமுறையை அனுமதிக்கும் அதிகாரி பதில் கடமைக்காக மந்திகை தெல்லிப்பழை ஆகிய வைத்தியசாலைகளில் கடயைாற்றுவோரை விடுவிக்குமாறு அறிவிக்கின்றபோதும் அவர்கள் வராததால் பிரிவுகளை மூடி வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது- என்று வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ற-9)

# சிகிச்சை வசதிகள் இன்மையால் அநியாயமான உயிரிழப்புக்கள்

## சாவகச்சேரி, சங்கத்தானை விபத்தில் இறந்தோரின் உறவினர்கள் கண்ணீர்

தென்மராட்சி, டிசெ.20

ஏ-9 வீதியின் அருகில் உள்ள வைத்தியசாலைகளில் விபத்துக்கள் தொடர்பில் சிகிச்சை வழங்குவதற்கான ஏற்பாடுகள் எப்போதும் இல்லை. சாவகச்சேரி வைத்தியசாலையில் உரிய வசதிகள் இருக்கவில்லை. அதனாலேயே விபத்தில் உயிரிழப்பு அதிகரித்தது.

இவ்வாறு சாவகச்சேரி, சங்கத்தானையில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது-

வடக்கு மாகாணத்தில் வவுனியா பொது வைத்தியசாலை, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்தியசாலை என்பன 9 வீதியருகே உள்ளன. தென்பகுதி மக்கள் மட்டுமல்ல வடக்கு மக்களும் ஏ-9 வீதியைப் பயன் படுத்துகின்றனர். விபத்துக்கள் எதிர்பார்த்து வருவதில்லை. அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் உடனடியாகச் செயற்படக்கூடிய நிலையில் வைத்தியசாலைகள் சகல வளங்களையும் கொண்டிருக்க வேண்டும். வைத்தியர்கள் உள்ள போதிலும் நோயாளியைக் காப்பாற்றக்கூடிய வசதிகள் உருவாக்கப்படாதுள்ளது வேதனையளிக்கிறது.

விபத்தில் உயிரிழந்தவர்கள் இருவர் வைத்தியசாலைகளில் பிஸியோதொரபி மற்றும் தலைமை தாதி போன்ற பதவிகளில் அரும்பணியாற்றியவர்கள். அவர்கள் விபத்தில் காயமடைந்தபோது உரிய சிகிச்சை வழங்கக்கூடிய நிலையில் வைத்தியசாலை இல்லாததால் அநியாயமாக உயிரிழந்தனர்.

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு காயமடைந்தவரைக் கொண்டு செல்லும் நேரத்தில் உரிய வசதிகள் இந்த வைத்தியசாலையில் காணப்பட்டிருப்பின் நிச்சயம் அவர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். சிகிச்சை வசதிகள் காணப்பட்டிருப்பின் அரைவாசிக்கு மேற்பட்டோரைக் காப்பாற்றியிருக்கமுடியும். ஏனைய வைத்தியசாலைகளுக்கு இவ்வாறான வசதிகளை உருவாக்கத் தாமதித்தாலும் ஏ-9 வீதியுடன் இணைந்துள்ள வைத்தியசாலைகளுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். மாகாண சுகாதார அதிகாரிகள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்- என்றனர். (ற-21,9)

# மக்கள் ஒத்துழைத்தால் பாதீனியம் கட்டுக்குள் வரும்

## அனைவரும் முன்வரவேண்டும் என்று வடக்கு விவசாய அமைச்சு அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

பருவ மழையை அடுத்து யாழ். மாவட்டத்தில் பாதீனியச் செடி வேகமாக பெருகுகின்றது. விவசாய நடவடிக்கைகளில் அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது என்று விவசாயிகளும், பொதுமக்களும் கூறுகின்றனர். இது தனியே விவசாயத் திணைக்களத்துக்குரியதோ அல்லது விவசாய அமைச்சுக்குரியதோ அல்ல. பாதீனியத்தை அழிப்பதற்கு பொதுமக்களும் முன்வரவேண்டும். இவ்வாறு வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஜங்கரநேசன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

பாதீனியச் செடி விவசாயத்துக்கும், உடல் நலத்துக்கும், சுற்றுச்சூழலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் அந்நியக் களை. யாழ். மாவட்டத்தில் இந்தச் செடியின் வளர்ச்சி பரவலாக ஆதிக்கம் செலுத்துகின்றது. பாதீனியச் செடியை அழித்தல் தொடர்பான அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ள இடங்களிலும் இந்தச் செடியின் வளர்ச்சி காணப்படுகிறது.

பாதீனியம் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும், பாதீனியத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் வடக்கு மாகாண விவசாய அமைச்சு பல செயற்பாடுகளை முன்னெடுத்தது. பொதுமக்களின் போதிய ஒத்துழைப்பு இல்லாமையால் பாதீனியச் செடி பரவுதலை முற்றாகக் கட்டுப்படுத்த இயலவில்லை.

பாதீனியச் செடியை அழிக்கத் தவறுபவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், கமநலசேவைத் திணைக்களம் ஆகிய திணைக்களங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கு மத்திய விவசாயத் திணைக்களத்தின் செயலாளர் நாயகத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டு, அவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வடமாகாண விவசாய அமைச்சால் வழங்கப்பட்டன.

பாதீனியச் செடியை அழிப்பது தொடர்பாக அறிவித்தல்கள் வாய் மூலமாகவும் கடிதங்கள் மூலமாகவும் 2 வார கால அவகாசம் வழங்கப்பட்டு மூன்று தரம் அறிவிக்கப்படும். அதையும் மீறி இந்தக் களைகளை அழிக்கத் தவறுபவர்களுக்கு, தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டனைகளையும் விதிக்கமுடியும் எனவும் சட்ட விதியும் கூறப்பட்டிருந்தது.

இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக இறுதியான அனுமதி கிடைக்கப்பட வேண்டும். தாவரப் பாதுகாப்புப் பிரிவால் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இது தொடர்பான அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் அதற்குரிய பதிலைப் பெற்றுத்தரவேண்டும் என தாவரப் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்தது.

பாதீனியத்தை அழிப்பதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டாமையாலேயே சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பாதீனியம் விளைநிலங்களில் அல்லது வீட்டு வளவுகளில் காணப்படின் அதனை அழிப்பது உரிமையாளர்களின் கடமை. தவறின் ஆறுமாதங்கள் சிறையும் ஒரு லட்சம் ரூபா தண்டப் பணமும் அறவிட சட்டம் உள்ளது.

இந்த அந்நியக் களையை அழிப்பதற்கு விவசாயத் திணைக்களமும், அமைச்சும் போராடிவருகின்றன. அவற்றை அழிப்பதற்கான பொறுப்பில் திணைக்களங்களுக்கு மட்டுமன்றி பொதுமக்களுக்கும் பங்கு உண்டு -என்றார். (ற-10)




# மாற்றாற்றல் உடையோர் தின விழா வவுனியாவில்

வவுனியா, டிசெ. 20

சிறப்புத் திறனாளிகளின் உணர்வுகளை வென்றெடுக்கும் மாற்றாற்றல் உடையோர் தின விழா வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் கவனவீர்ப்புப் பேரணி ஒன்று வவனியா பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமானது. பேருந்துகளில் ஆசன ஒதுக்கீட்டு ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வு இடம்பெற்றது. பின்னர் ஏ-9 வீதி வழியாக பேரணி இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட சமூகசேவைகள் அலுவலகத்துடன் சீட், ஓகன், வரோ, உயிரிழை போன்ற நிறுவனங்கள் இணைந்து பேரணி மற்றும் நிகழ்வை நடத்தின. பேரணி வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தை வந்தடைந்தது. நிகழ்வுகள் மாவட்ட சமூகசேவைகள் அலுவலகத்தின் உத்தியோகத்தர் செ. சிறீநிவாசன் தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கமும், கௌரவ விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், ஓகன் நிறுவனத் தலைவர் திரு. வே. சுப்பிரமணியம், வரோட் நிறுவனப் பணிப்பாளர் அருட்தந்தை ஜேண் கிறிஸ்ரி, உயிரிழை நிறுவன தலைவர் திரு. வி. ஜெயகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள், சமயத்தலைவர்கள், அரச, அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்ட நிகழ்வில் மாற்றாற்றல் உடையோர்களின் நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன. (ற-4)

# மல கூடங்களை துப்புரவாக்க நடவடிக்கை

மன்னார், டிசெ.20

நோயாளர்களுடைய நலன் கருதி மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகளில் காணப்படுகின்ற மலசலகூடங்களை துப்பரவு செய்து சீரமைக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும், வைத்தியசாலைப் பணிப்பாளருமான திருமதி யூ.ர.தனி தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் நோயாளர் விடுதி 4 அமைந்துள்ள பகுதியில் உள்ள மலசலக்கூடங்களில் உள்ள மனிதக் கழிவுகள் நோயாளர் விடுதிக்கு வெளியே பாதையோரங்களில் தேங்கிக் கிடப்பதாக மக்கள் விசனம் தெரிவித்தனர். அந்தப் பகுதியூடாக நோயாளர் விடுதிக்கு செல்வதில் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் தெரிவித்தனர்.

வைத்தியசாலையின் பின்புறம் உள்ள மலசலகூடங்களில் கழிவு நீரும் சேருவதால் இவ்வாறான பிரச்சினை ஏற்பட்டது. இது தொடர்பாக எமக்கு அறியத் தந்ததை அடுத்து இன்று (நேற்று முன்தினம்) பிரதேச சபையினர், மற்றும் நகர சபையினருடைய உதவியுடன் மலசல கூடங்களை துப்புரவு செய்து வெறுமையாக்கும் செய்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (ற-21)

# வாகனம் செலுத்திய இருவருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 20

சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி ஆகியவற்றை செலுத்திய இருவருக்கு தலா 3 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது யாழ்ப்பாண நீதிவான் மன்று.

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி ஓட்டோ செலுத்தியவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத் தப்பட்டார். அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்தியதுடன் வீதி ஒழுங்குகளை மீறி வாகனத்தை செலுத்தியவருக்கு முதலாவது குற்றச்சாட்டிற்கு 3500 ரூபா தண்டமும் இரண்டாவது குற்றச்சாட்டுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா என மொத்தமாக 7000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ற-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில்வேயை தனியாருக்கு விற்பதற்கு இடமளியேன்

### அமைச்சர் நிமால் திட்டவட்டம்



கொழும்பு, டிசெ 20
சுதந்திரக் கட்சியின் அமைச்சர் என்ற வகையில் இலங்கை ரயில்வேயை தனியாருக்கு விற்க ஒருபோதும் தான் இடமளிக்கப் போவதில்லை என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இலங்கை ரயில்வே தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் ரயில்வே கேட்போர் கூடத்தில் நடந்த கலந்துரையாடலொன்றின் போதே இவ் வாறு தெரிவித்தார் அமைச் சர்.

அவர் தெரிவித்ததாவது:

இன்று அர்த்தமற்ற விடயங்களுக்கெல்லாம் வேலை நிறுத்தம் செய்வது வாடிக்கையாகிப் போய் விட்டது. ஒருசில தொழிற் சங்கப் பிரதிநிதிகள் எதற் கெடுத்தாலும் வேலைநிறுத்தம் என்று போர்க்கொடியைத் தூக்கிக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

அரச கொள்கைத் திட்டங்களுக்கு எதிராகச் செயற்பட எனக்கு அதிகாரமில்லை. எமக்குச் சலுகை அடிப்படையில் கடன் வழங்க இந்தியா மட்டும் எப்போதும் தயாராக இருக்கிறது.

அதன் காரணமாகவே நாங்கள் ரயில் எஞ்சின்களையும் பெட்டிகளையும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்கிறோம். அவ்வாறே சீனாவும் எங்களுக்கு உதவி செய்யத் தயாராக உள்ளதால் செய்யமுயல்கிறோம்-என்றார். (த)

## 2/3 பெரும்பான்மையுடன் எட்டும் தீர்வே சிறந்தது

### கூறுகிறார் அமைச்சர் டிலான்



கொழும்பு, டிசெ 20
இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்வதே சிறந்ததென குறிப்பிட்டுள்ள சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா, அதனை விடுத்துப் பொதுவாக்கெடுப்புக்குச் சென்றால் பிரிட்டனில் நடைபெற்ற பொது வாக்கெடுப்பு போன்று தோல்வியிலேயே முடிவடையும் எனக் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் தேர்தல் முறை மாற்றத்தை யும் ஏற்படுத்திக்கொள்ள லாம்.

ஆனால் தேர்தல் முறை மாற்றம், இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையில் மாற்றம் ஆகிய மூன்று விடயங்களையும் ஒரே தடவையில் புதிய அரசமைப்புக்குள் மாற்றியமைக்க முற்பட்டால் அதற்குப் பொது வாக்கெடுப்பு அவசியம். அவ்வாறு நடத்தப்பட்டால் அது தோல்வியிலேயே முடிவடையும்.

அதிகாரப் பகிர்வை விரும்பும் தாங்கள்கூறும்இவ்விடயத்தை கூட்டமைப்பினர் புரிந்து கொள்வது அவசியமாகும்.

எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் இருக்கும் இந்தக் காலகட்டத்திலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பது அவசியமானதொன்று. தற்போதைய நிலமைகளை வைத்து நோக்கும்போது சம்பந்தன் இன்றி இனப்பிரச்சி னைக்கான தீர்வைக் காண்பது உசிதமல்ல-என்றார். (த)

# அரிசி விலையை கட்டுக்குள் வைக்க உடன் நடவடிக்கை

### களஞ்சியங்களில் உள்ள நெல்லை சந்தைக்குவிட அரசு தீர்மானம்

கொழும்பு, டிசெ 20
அதிகரித்துள்ள அரிசி விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக நெல் விநியோகச் சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல்லைச் சீரான கட்டமைப்பின் கீழ் அரிசி ஆலையாளர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அந்தச் சபை மேலும் கூறியுள்ளது.

எதிர்வரும் காலங்களில் களஞ்சியத்திலுள்ள 2 லட்சத்து 90 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லின் ஒரு தொகையை அரிசி ஆலையாளர்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நெல் விநியோக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கான பேச்சுக்கள் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அந்த சபை, அரிசி விலையைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கையை மேற்கொள்ளக் காலம் தாழ்த்தாது செயற்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. (த)

## கருணாவின் சொகுசு வாகனம் ஜனாதிபதி செயலகத்துக்கு

கொழும்பு, டிசெ 20
முன்னாள் பிரதி அமைச்சரான விநாயகமூர்த்தி முரளிதரன் அல்லது கருணா அம்மானிடமிருந்து கைப்பற்றப்பட்ட அதிசொகுசு வாகனம் நாளைமறுதினம் ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைக்கப்படும் எனப் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

போர்ட் எவரெஸ்ட்' எனும் ரகத்தைச் சேர்ந்த குண்டு துளைக்காத இந்த அதிசொகுசு வாகனம் பத்து கோடி ரூபா பெறுமதி வாய்ந்தது. இது மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட சமயத்தில் வாகனம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமல் இருந்ததாகவும் இதை ஜனாதிபதி செயலகத்துக்கு ஒப்படைப்பதற்கான நீதிமன்ற உத்தரவொன்று பெறப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் தெரிவித்தனர். (த)

## பெண்ணை விபசாரத்தில் ஈடுபடுத்திய இருவருக்குச் சிறை

கொழும்பு, டிசெ 20
26 வயதான விவாகமான இலங்கைப் பெண்ணொருவரை ஏமாற்றி வெளிநாட்டுக்கு அனுப்பி அங்கு அவரைப் பலவந்தமாக விபசாரத்தில் ஈடுபடுத்தினர் என்ற குற்றச்சாட்டின்பேரில் வழக்குத் தொடரப்பட்டிருந்த இருவருக்கு தலா ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்த அவிசாவளை மேல் நீதிமன்ற நீதியரசர் அமல் திலகரத்ன பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 140, 000 ரூபா நட்டஈடு வழங்குவதுடன் 2 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்த வேண்டுமென உத்தரவிட்டார்.

இப்பாகமுவ, வேவல்யாய பிரதேசத்தைச் சேர்ந்த ரஞ்சித் பாலசூரிய மற்றும் சுகத் பண்டார பாலசூரிய எனும் இரு சந்தேகநபர்களும் எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் வசித்த விவாகமான பெண்ணொருவருக்கு வெளிநாடொன்றில் தொழில் பெற்றுத் தருவதாக ஏமாற்றி அங்கு அனுப்பிய பின் அவரைப் பலவந்தமாக விபசாரத்தில் ஈடுபடுத்தினர் என்ற குற்றச்சாட்டின்கீழ் 2004 ஜனவரி 15ஆம் திகதி இந்த வழக்கு கடுவெல நீதிவான் மன்றத்தில் தொடரப்பட்டிருந்த ஆரம்ப விசாரணைகளின் பின் அவிசாவளை மேல் நீதிமன்றத்துக்கு ஒப்படைக்கப்பட்ட இந்த வழக்கு விசாரணை முடிவில் மேற்கூறிய தீர்ப்புகள் வழங்கப்பட்டன. (த)

## வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

திருமலை, டிசெ 20
திருகோணமலை - கோமரங்கடவெல பிரதேசத்தில் இயங்கிவந்த ஹோட்டல்கள் உட்பட ஏழு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை - கோமரங்கடவெல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் மொறவெவ பிரதேசத்திலுள்ள ஹோட்டல்கள், சில்லறைக் கடைகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் சோதனையிடப்பட்டன.

இந்தப் பரிசோதனையின் போது 7 கடை உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ரொட்டவெவ பகுதியில் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த மாட்டிறைச்சி, கோழி இறைச்சி மற்றும் காலாவதியான பொருள்கள் மீட்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

திருகோணமலை பிராந்திய சுகாதார பணிப்பாளர் அனுசியா ராஜ்மோகனின் வேண்டுகோளின்படி இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த-ய-45)

## பொலிஸ் அதிகாரியின் சாவுக்கு காரணமான நபர் கைதானார்

கொழும்பு, டிசெ 20
காசோலை மோசடியொன்று தொடர்பாக தன்னைக் கைது செய்ய வந்த கண்டி தலை மையகப் பொலிஸ் நிலை யத்தின் விசேட குற்றங்கள் விசாரணைப் பிரிவின் சப் இன்ஸ்பெக்டர் குலசேகர வுடன் முரண்டு பிடித்ததால் அவர் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் தொடர்பில் குறிப் பிட்ட சந்தேகநபர் பிலிமத் தலாவ கடலாதெனிய பிரதேசத் தில் கைது செய் யப்பட்டுள்ளார்.

பொலிஸ் பணிகளுக்கு இடையூறு விளைவித்ததால் சப்இன்ஸ்பெக்டர் ஒருவரின் சாவுக்குக் காரணமாகவிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு கண்டி பிரதம நீதிவான் புத்திக்க சீ. ராகல முன்னிலையில் முற்படுத்தப்பட்ட சிசிர விக்கிரமசேகர எனும் சந்தேகநபரை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கண்டி தலைமையகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (த)

## பல்கலை அனுமதி கைநூல் ஜனவரியில்

கொழும்பு, டிசெ 20
2016/ 2017ஆம் ஆண்டு கல்வியாண்டு, பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூல், 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதற் பகுதியில் வெளியிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று, பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் சில்வா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், கைநூலானது மிகவும் தெளிவான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கான கைநூலை, இணையத் தளத்திலும் பார்வையிட முடியும். பல்கலைக் கழக அனுமதிக்காக இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும்.

2015-2016 கல்வியாண்டுக்காக, இந்த புதிய முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம், பெரும் வெற்றி அடைந் துள்ளது. பல்கலைக்கழக அனுமதி தொடர்பில் தெளிவுபடுத்தும் நடவடிக்கையை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், இந்தப் புதிய திட்டம் குறித்து ஆசிரியர்களுக்கும் தெளிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைவாக, தெரிவு செய்யப்பட்ட 300 ஆசிரியர்களுக்கான செயலமர்வு, ஜனவரி முற்பகுதியில் நடத்தப்படும்-என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முகப்புத்தக மெசஞ்சர் செயலியில் கமெரா அறிமுகம்



பிரபல சமூக வலைத்தளமான முகப்புத்தக நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்காக செய்தி பரிமாற்றச் செயலியாக விளங்கும் மெசஞ்சரில் கமராவை அறிமுகப் படுத்தியுள்ளது.

இதன்பிரகாரம் தினமும் 250 கோடி பேர் மெசஞ்சர் செயலியை பயன் படுத்தி வருகின்றமை நோக்கத்தக்கது. அந்த வகையிலே மெசஞ்சர் செயலியில் தகவல் பரிமாற்றத்தில் ஈடுபடும் போது புகைப்படங்களை பதிவு செய்வதற்கென சினாப் சற் வடிவமைப்பிலான கமராவினை முகப் புத்தகம் செயல்நிலைப்படுத்தியுள்ளது.

இதன்படி வட்ஸ் அப் செயலி, டெலிகிராம் போன்ற எந்த கதையாடல் செயலியிலும் இல்லாத மேற்படி வசதியானது தற்போது முகப்புத்தக மெசஞ்சரில் தரவேற்றப்பட்டுள்ளது.

இந்தநிலையிலே முகப்புத்தக மெசஞ்சரில் காணப்படும் இமேஜ், புகைப் படம், ஸ்ரிக்கர் மற்றும் வீடியோக்கள் போன்றவை வாடிக்கையாளர்களிடம் அதிகம் வரவேற்பைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எமது செய்கைகளை எழுத்து வடிவத்தில் அல்லாது கமரா மூலம் இமேஜாக தெரிவிக்க முடிகிறது.

மேலும் மெசஞ்சரில் கமரா வேகமாக இயங்குவதுடன் புகைப்படங்களை எடிட் செய்ய பல்வேறு புதிய அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நுட்பம்

# 2016 இல் அதிக வருவாய் ஈட்டியது சுற்றுலாத்துறை

### ஒக்ரோபர் மாதத்தில் 250 மில்லியன் ரூபா இலாபமாகப் பதிவாகியுள்ளது



இலங்கை சுற்றுலாத்துறையானது நடப்பாண்டின் ஒக்ரோபர் மாதத்தில் 250 மில்லியன் அமெரிக்க டொலரினை இலாபமாக பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் கடந்த ஜனவரி மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையான பத்து மாத காலப் பகுதியில் வெளிநாடுகளில் இருந்து 14.6 வீதமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்ததான தகவல் வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையிலே மேற்படி வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை என்பது 2.75 அமெரிக்க பில்லியன் வருமானத்தை பெற்றுத்தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா சபை அறிவித்துள்ளது.

மேலும் இந்த தொகை மதிப்பீடுகளுக்கு மேலதிகமாக கடந்த ஒக்ரோபர் மாதத்தில் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களால் 607.5மில்லியன்அமெரிக்க டொலர்கள் வருமானமாககிடைத்துள்ளமை நோக்கத்தக்கது.

வணிகம்



பங்குதாரர்கள் [illegible] இடைக்கால பங்குலாபப் பங்கிலாபமாக [illegible] மில்லியன் ரூபா செலுத்த வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் நிறுவனத்துக்கு தங்க விருது

### பெருமளவான உற்பத்திப் பிரிவில் பெற்றுக்கொண்டுள்ளது

தொழிலாளர் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 2016 ஆம் ஆண்டுக்கான சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பு தொடர்பிலான நாடளாவிய விருதுகள் வழங்கும் வைபவத்தில் பெருமளவிலான உற்பத்திப் பிரிவிலே சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் நிறுவனம் தங்க விருதை பெற்றுக்கொண்டுள்ளது.


தொழிலாளர் திணைக்களத்தின் சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்புப் பிரிவின் வகி பாகம் என்பது தொழில் தருநர்கள், முகாமையாளர்கள், ஊழியர் நிறுவனம், தொழிற் சங்கங்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் நிறுவன மற்றும் திணைக்கள மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது. அதேபோன்று கூட்டிணைந்த அரச, தனியார் நிறுவனங்களில் எழுகின்ற தொழிற்துறைப் பிணக்குகளைத் தீர்த்துவைப்பதில் தொழிலாளர் சட்டங்கள் மூலமாகவும் இருதரப் பினருக்கிடையேயான ஒத்துழைப்புச் செயற்பாட்டுடனும் தொழிலாளர்களிடையே மனோ பாவரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஒரு சூழலை ஏற்படுத்தி வருகின்றது.



மேற்குறிப்பிட்ட நோக்கத்தின் முன்னி லைப்படுத்தலாக சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத் துழைப்புத் தொடர்பான செய்தியைப் பரப்பும்விதமான நாடளாவிய போட்டி நடத்தப்பட்டு வருகின்றது. உள்நாட்டு உற்பத்தித்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மத்தியில் சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பை ஊக்குவித்து, சமூக உரையாடலின் மூலமாக சிறந்த தொழிற்துறை உறவு முறையொன்றைத் தோற்றுவிப்பது மேற்படி செயற்பாடுகளின் தூர நோக்காக காணப்படுகிறது. இதன்படி தொழில்தருநர்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறப்பான தரத்திலான பணிச் சூழலைத் தோற்றுவிப்பதுடன், படைப்பாக்கத்திறன்களை மேம்படுத்துவதன் மூலமாக இவை முன்னெடுக்கப்படுகின்றமை நோக்கத்தக்கது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் குழும பொது முகாமையாளரான (மனித வளங்கள்) சஜித் விக்கிரமாராச்சி, "நாம் கட்டியெழுப்பியுள்ள பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஒற்றுமை தொடர்பான மிகச் சிறந்த நடைமுறைகளுக்கு கிடைக்கப்பெற்ற மகத்தான ஓர் ஆசீர்வாதமாகவே இவ்விருது அமையப்பெற்றுள்ளது. நிறுவனம் மற்றும் அதன் பணியாளர்களின் மேம்பாடு தொடர்பான ஒரு பொதுவான நோக்கத்தின் வழியே எமது தொழிற்சங்கங்கள் மற்றும் அனைத்து ஊழியர்களுடனும் இணைந்து எமது பயணத்தை முன்னெடுப்பதற்கு இந்த விருதானது பக்கபலமாக அமைந்துள்ளது" - என்றார்.

# அலெப்போ விவாதம் தேவை அற்றதாம் பிரான்ஸுக்கு எதிராக பாயலாம் வீட்டோ



## கருணாநிதியின் உடல்நிலையில் முன்னேற்றம்

சென்னை, டிசெ. 20
தி.மு. கழகத் தலைவர் மு. கருணாநிதி உடல்நலக் குறைவு காரணமாக கடந்த 15 ஆம் திகதி சென்னை காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவரது உடல்நிலையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று குறித்த மருத்துவமனை அறிக்கை சமர்ப்பித்தது.
தொண்டை மற்றும் நுரையீரல் தொற்று காரணமாக கருணாநிதி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார். நோய்த் தொற்றால் மூச்சுவிடுவதில் சிரமம் ஏற்பட்டது. நோய்த்தொற்றை குணப்படுத்த மருத்துவர்கள் குழு அவருக்கு தீவிர சிகிச்சை வழங்கி வருகின்றனர் என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் அவர் மருத்துவ உபகரணங்களின்றி இயல்பாக சுவாசிக்கிறார் என்றும் அவரது உடநிலையில் சொல்லிக் கொள்ளும் படியான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் காவேரி மருத்துவமனை நேற்று முன்தினம் தெரிவித்தது. (ம-எ)

மொஸ்கோ, டிசெ. 20
அலெப்போ போர் கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துள்ள நிலையில் அங்கு ஐக்கிய நாடுகள் சபையின் அதிகளவான அவதானிப்புக் குழுவை அனுப்புவதற்காக காட்டப்படும் ஆர்வமும் அது தொடர்பான விவாதமும் தேவை அற்றது என்று ரஷ்யா தெரிவித்தது.
சிரிய ஜனாதிபதி அல் அசாத்தை பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்திவந்த குழு படிப்படியாக அரசுக்கு எதிரான ஆயுதக் குழுவாகவும் மாற்றம் பெற்றது. சிரியாவின் இரண்டாவது பெரியதும் முக்கிய நகரமுமான அலெப்போ கடந்த சில வருடங்களாக அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவின் பிடியிலிருந்தது. நகரை மீட்கும் போரில் சிரியாவுக்கு ரஷ்யா பெரும் ஆதரவை வழங்கியது. ஈரானும் ஆதரவு வழங்கியது. அலெப்போ நகர் தற்போது அரச படையால் மீட்கப்பட்டுள்ளது. கடந்த ஆறு வருடங்களாக இடம்பெற்ற போரில் 3 லட்சத்து 10 ஆயிரம் மக்கள் உயிரிழந்துள்ளனர். அலெப்போ நகர் மீட்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்ட பிற்பாடும், அங்கு அவ்வப்போது பொதுமக்களுக்கு எதிரான கொடூரமான தாக்குதல்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ரஷ்யாவின் ஆதரவு பெற்ற சிரியப்படை அதைநிகழ்த்துகிறது என்றுபன்னாட்டு ஊடகங்களும் குற்றஞ்சுமத்தின.



அலெப்போ விவகாரத்தில் ரஷ்யா, சிரியா, ஈரான் அரசுகளின் கைகளில் குருதிக்கறை படிந்துள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பகிரங்கமாக சாடினார். அலெப்போ நகர்மீட்புப்போரில்போர்க்குற்றங்கள் இடம்பெறுகின்றன என்று உலக நாடுகள் பலவும் இணைந்து குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளன. இதனால் அலெப்போ விவகாரத்தை கையாள பிரான்ஸ் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்த முன்வந்தது.
அலெப்போ நகரின் பரந்த நிலப்பரப்பை கருத்தில் கொண்டு அங்கு போர்க்குற்றங்களை அவதானிக்க ஐக்கிய நாடுகள் சபையின் பல அவதானிப்புக் குழுக்களை அங்கு அனுப்ப வேண்டும் என்பதே அந்தத் திட்டம்.
ஐக்கிய நாடுகள் சபைக்கு பிரான்ஸ் செய்துள்ள இந்தப் பரிந்துரைக்கு உலக நாடுகள் பலவும் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், ரஷ்யா அதை எதிர்த்துள்ளது. இந்தப் பொறிமுறை தேவையற்றது அத்துடன் ஆபத்தானது என ரஷ்யா எச்சரித்துள்ளது.
இதனால் தனது இருப்பைத் தக்க வைக்கவும் தன்மீது வரவிருக்கும் தேவையற்ற அழுத்தங்களை தவிர்ப்பதற்காகவும் ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தை இந்தத் திட்டத்தின் மீது பிரயோகிக்கவும் அதிக வாய்ப்புக்கள் உள்ளன. (ம-எ)

## விபத்துக்குள்ளானது ரஷ்யாவின் விமானம்

மொஸ்கோ, டிசெ.20
ரஷ்ய விமானப் படைக்குச் சொந்தமான விமானம் ஒன்று சைபீரியாவில் நேற்று விபத்துக்கு உள்ளானது.
32 பேர் விமானத்தில் பயணித்தனர். அத்தனைபேரும் காயமடைந்துள்ளனர்.
அவர்களில் 16 பேரின் உடல் நிலை கவலைக்கடமாக உள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
நேற்று மதியம் வரை உயிரிழப்புக்கள் எவையும் ஏற்படவில்லை. விமானம் தரையிறங்கும் வேளையிலேயே குறித்த விபத்து இடம்பெற்றது என்று ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்டையில் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)



தென் கிழக்கு ஆசியக் காடுகளில் இந்த வருடத்தில் மாத்திரம் 163 புதிய தாவர, விலங்கு இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் விசித்திரமான தோற்றத்தை உடைய பல்லியும், மினுமினுப்பான பாம்பும் பலரது கவனத்தை வெகுவாக ஈர்த்தன. (ம-எ)

## ஜெயாவின் சாதனை... வருகின்றன நாற்ப...

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது சாதனைகளையும் எடுத்தியம்பி 40 குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
ஜெயாவின் சாவுக்கு பின்னால் மர்மம் இருக்கிறது என்றும் தமிழ்நாட்டு அரசின் ஆட்சிப்பீடத்திலும் அ.தி.மு. கழகத்தின் ஆட்சிப் பீடத்திலும் இனிவரும் காலங்களில் தளம்பல் நிலைகள் இருக்கும் என்றும் சமூக வலைத்தளங்களில் கருத்துக்கள் பரப்பப்பட்டுவரும் நிலையில், அவ்வாறான தகவல்களைப் பரப்புபவர்



களுக்குப் பதிலடியாகவே இந்தக் குறும்படங்கள் தயாரிக்கப்படுகின்றன என்று அதி.மு.கழகத் தரப்பால் தெரிவிக்கப்பட்டது.
குறித்த விடயம் தொடர்பாக அ.தி.மு. கழகத்தின் செயலாளர் ராஜல் ராஜா, "முன்னாள் முதல்வர் ஜெயலலிதா

## ஏமனில் தற்கொலைத் தாக்குதல்; 52 சிப்பாய்கள் உடல் சிதறிச் சாவு

சனா, டிசெ. 20
ஏமனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தற்கொலைப்படைத் தாக்குதலில் 52 சிப்பாய்கள் உடல் சிதறிச் சாவடைந்தனர்.எடன் நகரிலேயே இந்தத் துயரம் நடந்துள்ளது.
தமது சம்பளத்தைப் பெறுவதற்காகச் சிப்பாய்கள் ஒன்று கூடிய போது குறித்த தாக்குதல்



நடத்தப்பட்டது என்று முதல் கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்தது. உயிரிழந்தவர்களைவிட 50 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில்சேர்க்கப்பட்டனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு குறித்த தாக்குதலுக்குபொறுப்பேற்றது. (ம-எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மீட்புப் பணியில் ஈடுபட்ட பஸ்கள் எரியூட்டப்பட்டன

டமஸ்கஸ், டிசெ. 20
சிரியாவின் அலெப்போ மக்களை வெளியேற்றுவதற்காக சென்ற 5 பஸ்கள் அலெப்போவுடன் எல்லையைப் பகிர்ந்துள்ள நகரான இட்லிப்பில் வைத்து எரியூட்டப்பட்டன.

அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவின் பிடியிலிருந்த அலெப்போ நகரம் சில வாரங்களுக்கு முன்னர் சிரிய அரசால் மீண்டும் கைப்பற்றப்பட்டது. இதனையடுத்து அலெப்போ மக்களை வெளியேற்றும் பணிகள் மந்தகதியில் நடைபெற்று வருகிறது என்று குற்றஞ்சாட்டப்பட்டது. போர்க்குற்றங்களும் அங்கு அரங்கேறுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. பல்வேறு அழுத்தங்களைச் சந்தித்த சிரிய அரசு அலெப்போ நகர மக்களை வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்காக பஸ்களை ஏற்பாடு செய்தது. அவ்வாறு சென்ற பஸ்கள் இட்லிப் நகர எல்லையில் வைத்துத் தீயிடப்பட்டன.

சிரியாவில் சன்னி இஸ்லாமியரும் ஷியா இஸ்லாமியரும் தமக்குள் பகிரங்கமாகவே முரண்படுகின்றனர். அலப்போவில் இருப்பவர்கள் சன்னி இஸ்லாமியர்கள். இட்லிப்பில் வசிப்பவர்கள் ஷியாப் பிரிவினர். மதத்துவேசமே பஸ்கள் எரியூட்டப்படக் காரணம் என்று-ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அல்கொய்தாவுக்கு நெருங்கிய குழுவொன்று பின்னர் பொறுப்பேற்றது. (ம-எ)

## நடப்பு வருடத்தின் உலக அழகியாக போர்ட்டோ ரிக்கோவைச் சேர்ந்தவர்

நடப்பு வருடத்தின் உலக அழகியாக போர்ட்டோ ரிக்கோ நாட்டைச் சேர்ந்த ஸ்டெபானி டெல்வாலே என்ற 19 வயது யுவதி தெரிவானார்.

அமெரிக்காவில் போட்டிகள் நடைபெற்று வந்தன. உலகெங்கிலும் இருந்து 50 இற்கும் மேற்பட்ட அழகிகள் கலந்து கொண்டனர். பல சுற்றுக்களாக நடைபெற்ற போட்டிகளின் இறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது. அதில் கென்யா, பிலிப்பைன்ஸ், போர்ட்டோரிக்கோ, டொமிகன் குடியரசு மற்றும் இந்தோனேசியா ஆகிய 5 நாடுகளின் உலக அழகியாகத் தெரிவானார். கல்லூரி மாணவியான இவர்-ஸ்பெயின், ஆங்கிலம், பிரெஞ்ச் ஆகிய மொழிகளை சரளமாக பேசக் கூடியவர்.

உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட இவருக்கு கடந்த வருடம் பட்டம் வென்ற ஸ்பெயின் அழகி மிரேயா லலாகுணா கிரீடம் சூட்டினார். 2 ஆவது இடத்தை டொமினிகள் குடியரசைச் சேர்ந்த யரீட்சா மிகுலெனா ரெயஸ் ரமிரெஸ் மற்றும் இந்தோனேசியாவை சேர்ந்த நடாசா மனுலா இருவரும் பகிர்ந்துகொண்டனர்.



அழகிகள் கலந்து கொண்டனர். போர்ட்டோரிக்கோ நாட்டைச் சேர்ந்த ஸ்டெபானி டெல்வாலே என்ற 19 வயது இளம்பெண் நடப்பு வருடத்தின் கென்யா மற்றும் பிலிப்பைன்ஸ் நா... களைச் சேர்ந்த அழகிகள் முறை... 4 ஆவது மற்றும் 5 ஆவது இட... களைப் பெற்றனர். (ம-...

## ...னைகள் தொடர்பாக ...து குறும்படங்கள்

...வின் வாழ்க்கை வரலாறு, அவருடைய அரசியல் சாதனைகள், அவர் செயற்படுத்திய மக்கள் நலத்திட்டங்கள், பெண்கள் முன்னேற்றத்துக்கான திட்டங்கள் குறித்து குறும்படங்களைத் தயாரித்து வருகிறோம். ஏற்கெனவே எங்களிடம் இருக்கும் நூற்றுக் கணக்கான பழைய கோப்புகளில் இருந்து முக்கியமான பதிவுகளை வைத்து குறும்படங்களை தயாரித்து, சமூக வலைத் தளங்களில் தெளிவாகக் காணும் வகையில் வெளியிட உள்ளோம்.

எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த சிலர் சமூக வலைத் தளங்களில் திட்டமிட்டு




நடத்தி வரும் பொய்ப் பரப்புரைகளுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலும், அ.தி.மு. கழகத் தொண்டர்கள் மத்தியில் ஏற்படும் குழப்பங்களுக்கு தீர்வு அளிக்கும் வகையிலும் குறித்த குறும்படங்கள் அமையும்" எனத் தெரிவித்தார். (ம-எ)



## தங்கச் சுரங்க விபத்து; 20 பேர் உயிரிழந்தனர்

கின்சாசா, டிசெ. 20
கொங்கோவில் நேற்றுமுன்தினம் தங்கச் சுரங்கமொன்று இடிந்து விழுந்ததில் 20 தொழிலாளர்கள் உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

பிசி மாவட்டத்தில் இரவு வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. விபத்து இடம்பெற்ற சுரங்கம் அரச பாதுகாப்பு விதிகளுக்கு உட்படாத சுரங்கமாகும். தங்கக் கடத்தல் காரர்களுடன் இவ்வாறான சுரங்க உரிமையாளர்கள் தொடர்புகளைப் பேணி வருகின்றனர். கொங்கோவில் பல்வேறு சுரங்கங்கள் இந்த வகையில் இயங்குகின்றன என உள்துறை அமைச்சகம் மேலும் தெரிவித்தது. (ம-எ)

# தடுப்பைத் தகர்க்கும் ஆர்ப்பாட்டம்

சிட்னி, டிசெ. 20
ஆஸ்திரேலிய நாடாளுமன்ற வளாகத்தில் சுவர் எழுப்புவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் விநோத ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாதுகாப்புக் காரணங்கள் கருதி 2.6 மீற்றர் உயர அளவில் நாடாளுமன்றத்தைச் சுற்றி சுவர் எழுப்பப்படும் என்ற அறிவிப்பு அண்மையில் விடுக்கப்பட்டது. குறித்த அறிவிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்கள் பரந்த புல்



வெளியில் படுத்து உரு... தமது ஆர்ப்பாட்டத்தை நட... னர். பெரிய அளவிலான... வெளியில் மக்கள் தமது நேர... செலவு செய்வது வழ... கட்டப்படவுள்ள சுவரால் கு... அமைப்பு சிதைக்கப்ப... என்பதை அடுத்து இ... ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது... கள் உருவாக்கிய அர... அதன் வளாகத்தில் பொது... களுக்கான அனைத்து... மையும் உண்டு என ... பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்... வித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சந்தேகத்துக்கு இடமான சீனநபரின் கைது ஏற்படுத்தியுள்ள பரபரப்பு

குறிபார்த்துச் சுடுவதில் வலுதேர்ச்சி பெற்றவரும், மாபியா குழுக்களுடன் நெருக்கத்தைப் பேணியவருமான சீனக் குடிமகன் ஒருவர் தலைநகர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த நபர் குற்றச் செயல்கள் எதிலும் ஈடுபட்டிருந்துள்ளார் என்பதற்கான தகவல்கள் எதுவும் உடனடியாகத் தெரிய வராவிட்டாலும், முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றில் பணியாற்ற வந்ததாகக் கூறிக்கொள்ளும் அவர், சீன சூதாட்டக்காரர்களால் நடத்தப்படும் கசினோ நிலையம் ஒன்றிலேயே பணியாற்றியுள்ளார். அவரது சுற்றுலா விசா காலாவதியான பிறகும், நாட்டில் தங்கியிருந்துள்ளார். இவர் சூட்டுப் பயிற்சி பெற்றவர். முக்கிய பிரமுகர்களை இலக்கு வைக்கும் மாபியா குழுக்களுடன் தொடர்புகளைப் பேணியவர் என்று கருதப்படுவதாலும், புலனாய்வுத்துறையினருக்கு இவர் மீது பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அது மாத்திரமல்லாமல், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வீடு, அலரிமாளிகை போன்ற முக்கிய கட்டடங்கள் அமைந்துள்ள பகுதியில் ஓர் இடத்திலே வாசம் செய்துள்ளார் என்பதும், சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. நிமாசிரேன் என்ற பெயரைக் கொண்ட இந்நபர், இலங்கையின் முக்கிய அரசுத்தலைவர் அல்லது பிரமுகரை குறிவைக்கும் சதித்திட்டத்தில் ஈடுபட்டிருந்தாரா என்பது பற்றி புலனாய்வாளர்கள் இவரை விசாரணைக்கு உட்படுத்தி உள்ளார்கள்.

வாழ்நாள் முழுதுமே இந்நாட்டின் அரசு பீடத்தில் அமர்ந்திருக்கவும், தமக்குப் பின்னர் தனது வாரிசுகளை அரசு கட்டில் ஏற்றவும் திட்டம் போட்டிருந்தவரான மகிந்த ராஜபக்ச, கடைசியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தியபோது அதில் எதிர்பாராத விதமாகத் தலையிட்டு போட்டியிட்டவரான இப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வாக்களிப்பு இடம்பெற்ற அன்று, தனது வழமையான வாழ்விடத்தை மாற்றி பத்திரமான ஓர் இடத்தில் இரவைக் கழித்தார் என்று அவரே கூறியிருக்கிறார். அந்த அளவுக்கு அவருக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்துள்ளது. எனவே மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்று ஜனாதிபதியாகப் பதவியில் அமர்ந்தாலும், அவருக்கான உயிர் அச்சுறுத்தல் நீங்கி விட்டது என்று ஆகிவிடாது.

இப்பொழுது அரசமைப்பு மாற்றம், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்பவை மட்டுமல்ல, ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் மீதான சட்டநடவடிக்கை,கொலை கொள்ளைகளில் சம்பந்தப்பட்டவர்கள் மீதான விசாரணைகள், முன்னைய அரசு ஏற்படுத்திவிட்டுச் சென்றுள்ள கடன் சுமைகள் என்று பல்வேறு விடயங்களில் தன்னை முழுமூச்சில் ஈடுபடுத்தியுள்ள ரணில் – சிறிசேன அரசு, அவைகளில் படிப்படியாக முன்னேற்றங்களைக் கண்டு வரும் நிலையில், பதவியைக் கைப்பற்றிக் கொள்ள எங்கே, எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று ஆவலோடு அங்கலாய்ப்பில் தவித்துக் கொண்டிருப்பவர்கள், அதற்காக என்ன விலை கொடுக்கவும் தயங்கமாட்டார்கள்.

சீன நபர் மீது வெறும் சந்தேகம் மட்டுமே கிளப்பப்பட்டுள்ளது. சந்தேகம் தீர்ந்தால் அவர் விடுபட்டு விடுவார் அதுவல்ல பிரச்சினை. பிள்ளைப் பூச்சியை மடியில் கட்டிக் கொண்டது போல், எங்கோவிருக்கும் சீனாவை அழைத்துவந்து உள்நாட்டு விவகாரங்களில் சம்பந்தப்படுத்திக் கொண்டதன் விளைவுகளில் ஒன்றே, இவ்வாறு சந்தேகத்துக்குரிய நபர்கள் விசாமுடிந்தும் நாட்டில் தங்கியிருக்கும் பிரச்சினை.

இன்றுள்ள நிலையில் நாட்டின் முக்கிய தலைவர்கள் எவர் மீதாவது, எவராவது கைவைப்பார்களானால், நிச்சயமாக நாடு சின்னாபின்னமாவது சந்தேகமில்லை. அராஜகம் தலைதூக்கும் பட்சத்தில், அமைதியை நிலைநாட்டவென சீனா தலையிடுவதற்கு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாமல் இருக்கும் என்பது என்ன நிச்சயம்? அவ்வாறாயின், இலங்கையில் வம்சாவளிகளையும் தொப்புள்கொடி உறவினர்களையும், கொண்ட இந்தியா மௌனம் காக்கும் என்றும் எதிர்பார்க்கமுடியாது.

இவையெல்லாம் வெறும் ஊகங்களே. ஆனால் ஒன்றைமட்டும் அரசும் அதிகாரிகளும் மறந்துவிடலாகாது. இன்றைய முக்கிய தலைவர்கள் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர், சபாநாயகர், அமைச்சர்கள் போன்ற அரச கட்டமைப்பின் முக்கிய பிரமுகர்களதும் பாதுகாப்பு பல மடங்கு பலப்படுத்தப்பட வேண்டும் அதையே குறித்த சீன நபரின் கைதும், அவர் தொடர்பில் எழுந்துள்ள சந்தேகங்களும் வலியுறுத்துகின்றன என்று கூறிவைக்கின்றோம்.

# கூட்டமைப்புடன் சிங்கப்பூரில் ரகசியப் பேச்சு; அதன் விளைவே புதிய அரசமைப்பு

எம்.ஐ.முபாறக்



“2013 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் வைத்து புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் ரணில் தரப்பினர் நடத்திய ரகசியப் பேச்சின் விளைவாகவே புதிய அரசமைப்பு கொண்டு வரப்படவுள்ளது. மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்து புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.”

"அந்த இணக்கத்தை அடிப்படையாகக் கொண்டே- கூட்டமைப்பின் தேவையை நிறைவேற்றும் நோக்கிலேயே அவசர அவசரமாக புதிய அரசமைப்பு தயாரிக்கப்படுகின்றது.சிங்கள மக்களை ஏமாற்றுவதற்காக அரசமைப்பில் எவ்வாறான சொற்பதங்களை பயன்படுத்தினாலும் பரவாயில்லை.உள்ளடக்கம் தமக்கு சாதகமாக அமைய வேண்டும் என்ற கூட்டமைப்பின் அழுத்தத்துக்கு ஏற்ப ஒற்றை ஆட்சி என்ற சொல் அரசால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.” -இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், மேல் மாகாண முன்னாள் முதலமைச்சருமான பிரசன்ன ரணதுங்க சிங்களத் தொலைகாட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார். அந்தச் செவ்வியின் முழு விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

கே: சுதந்திர கட்சிக்குள் பிளவை ஏற்படுத்துவதற்காக, பஸில் ராஜபக்ச, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இரகசிய இணக்கப்பாடொன்றை மேற்கொண்டுள்ளார் என்று சொல்லப்படுகிறதே?

ப: அப்படியொரு இரகசிய இணக்கப்பாடு மேற்கொண்டிருந்தால், அவருக்கு எதிராக தொடுக்கப்பட்டிருக்கும் வழக்குகளில் இருந்து அவரால் இலகுவாகத் தப்பித்துக்கொள்ள முடியுமே? திருடர்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டோர் இப்போது அமைச்சுப் பதவியை பெற்றுக் கொண்டு அரசுடன் ஐக்கியமாகியதுபோல், பசிலும் செய்ய முடியுமே? இந்தக் குற்றச் சாட்டை நான் நம்பமாட்டேன்.

கே: உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை பழைய முறையின் கீழ் நடத்துவதற்காக பசில் அமைச்சர்கள் பலருடன் பேசவில்லையா?

ப:இதை நீங்கள் அவரிடம்தான் கேட்க வேண்டும்.ஆனால், உள்ளூராட்சி சபைத் தேர்தல் நான்கு வருட கால ஆயுளைக் கொண்டது.இரண்டு வருடங்களாக தேர்தலை நடத்த முடியாமல் இந்த அரசு தடுமாறுகிறது. அடுத்த வருடம் மார்ச் மாதம் ஆகும்போது தேர்தல் ஒத்திப் போடப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகின்றன. இது மக்களின் உரிமையை மீறும் செயலாகும். மார்ச் மாதத்துக்குள் பழைய முறைமையின் கீழாவது தேர்தலை நடத்தியே ஆக வேண்டும். தொகுதிவாரித் தேர்தலை நடத்தும் யோசனையை நாடாளுமன்றுக்குக் கொண்டு வந்தவர் தினேஷ் குணவர்தன.அவர்கூட பழைய முறைமையின்கீழாவது நடத்துங்கள் என்றே கூறுகின்றார்.

கே:இது உங்களின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைத்தானே காட்டுகின்றது?

ப:இல்லை.தொகுதிவாரி முறையைக் கொண்டு வந்தால் அது எங்களுக்குதான் நன்மை பயக்கும்.ஆனால்,தொகுதிவாரி முறைமையின் கீழ் நடத்த முடியாவிட்டால், இப்போதுள்ள முறைமையின் கீழாவது நடத்துங்கள் என்றே நாங்கள் கூறுகின்றோம். நாம் எந்த முறைமைக்கும் தயார்.

> “அரசு இப்போது இருக்கும் நிலையில் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல முடியாது. அவ்வாறு சென்றால் நிச்சயம் தோல்வியையே சந்திக்கும்.இந்த உண்மையை உணர்ந்ததாலேயே இவர்கள் தேர்தலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே: எல்லை நிர்ணயம் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாலேயே இது தாமதமாகின்றது என்று அரசு சொல்கிறதே?

ப: இரண்டு வருடங்களில் இதைச் செய்ய முடியாதா? எல்லை நிர்ணயம் ஒரு சிறிய விடயம். அரசு இதைப் பெரிதுபடுத்திக் காட்டுகின்றது. இரண்டு வருடங்களைக் கடத்தியுள்ளது.

கே: அப்படியென்றால் இதற்கான உண்மையான காரணம் என்ன?

ப: அரசு இப்போது இருக்கும் நிலையில் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல முடியாது. அவ்வாறு சென்றால் நிச்சயம் தோல்வியையே சந்திக்கும். இந்த உண்மையை உணர்ந்ததாலேயே இவர்கள் தேர்தலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.

மார்ச் மாதம் புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து அதை நிறைவேற்றும் திட்டம் ஐக்கிய தேசிய கட்சியிடம் உண்டு. அவ்வாறு நிறைவேற்றப்பட்டதும் ஏப்ரல் மாதமளவில் சுதந்திரக் கட்சியில் அமைச்சர்களாக உள்ள பத்துப் பதினைந்து பேரை இணைத்துக்கொண்டு தனி ஆட்சியை ஐக்கிய தேசிய கட்சி அமைக்கும். கூட்டாட்சி முடிவுக்கு வரும். இவ்வாறான திட்டம் ஒன்று பிரதமர் ரணிலிடம் இருப்பதாகத் தெரிகின்றது. 2017ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்குள் அரசுக்குள் மாற்றம் ஒன்று ஏற்படும் வாய்ப்பு உண்டு. அரசமைப்பு நிறைவேற்றம் அந்த நிலைமையை உருவாக்கும்.

மக்கள் கேட்பது புதிய அரசமைப்பை அல்ல. நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்கி நாடாளுமன்றுக்குப் பொறுப்புக் கூறும் ஒருவரை நியமித்தல் மற்றும் 13 ஆம் திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்கள் தொடர்பிலான பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வருதல் போன்றவற்றையே மக்கள் விரும்புகின்றனர். அனால், இவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேவைக்காக முழு அரசமைப்பையும் மாற்ற முயற்சிக்கின்றனர்.

2013 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ரணில் தரப்பினர் மேற்கொண்ட பேச்சின் விளைவாகவே புதிய அரசமைப்பு கொண்டு வரப்படவுள்ளது. மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்து, புதிய அரசமைப்பு கொண்டு வரப்பட வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது. அந்த இணக்கத்தை அடிப்படையாகக் கொண்டே அரசமைப்பு தயாரிக்கப்படுகின்றது. சிங்கள மக்களை ஏமாற்றுவதற்காக அரசமைப்பில் எவ்வாறான சொற்பதங்களைப் பயன்படுத்தினாலும் பரவாயில்லை. உள்ளடக்கம் தமக்கு சாதகமாக அமைய வேண் டும் என்ற கூட்டமைப்பின் அழுத்தத்துக்கு ஏற்ப ஒற்றை ஆட்சி என்ற சொல் அரசால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கே: புதிய அரசமைப்பு தேவை இல்லை என்று சொல்கிறீர்கள். ஆனால், புதிய அரசமைப்பை உருவாக்கும் குழுவில் உறுப்பினராக இருக்கிறீர்கள். இது முரண்பாடாக உள்ளதே?

ப : நானும் தினேஷ் குணவர்தனவும் அந்தக் குழுவில் உள்ளோம். நாம் அந்த இடத்தில் இல்லாவிட்டால் அரசு தனக்குத் தேவையானவற்றைப் புகுத்திவிடும். அரசமைப்பின் 14 விடயங்கள் தொடர்பில் எமது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளோம்.

அதுமட்டுமன்றி, இரண்டு கோடிக்கும் அதிகமான மக்கள் உள்ள நிலையில் வெறும் 3500 பேரிடம் மாத்திரம் புதிய அரசமைப்புத் தொடர்பான கருத்துக்களை அறிந்து, அவை முழு நாட்டு மக்களின் கருத்துக்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? அதனால்தான் நாம் அரசமைப்பின் ஒவ்வொரு பிரிவும் பொதுக் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புக்கு விடப்படவேண்டும் என்று கோருகின்றோம்.

அந்த வகையில், ஒற்றை ஆட்சி என்று அரசு கூறினாலும் உள்ளடக்கத்தில் என்ன இருக்கின்றது என்றே பார்க்க வேண்டும். அதிகாரப் பகிர்வு என்பது 13 ஆம் திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டே அமைய வேண்டும்.

கே : மகிந்த 13+ தருவதாகக் கூறி னாரே. இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப: மகிந்தவின் 13+ இற்கு பிழையான அர்த்தம் அல்லவா கொடுக்கப்படுகின்றது. 13 என்பது ஜே.ஆர்.ஜயவர்தன விரும்பி உருவாக்கியது அல்ல. இந்தியாவைத் திருப்திப்படுத்துவதற்காகவே அதை உருவாக்கினார். அதனால் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வும் கிட்டவில்லை.

அதன் பிறகு ஆட்சிக்கு வந்த ஆர்.பிரேமதாசா பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதற்கு முன்வரவில்லை. அதன் ஆபத்தை உணர்ந்ததால்தான் அவர் அதை வழங்கவில்லை. அவர் மாத்திரமல்ல, அவருக்குப் பின்பு வந்த டி.பீ.விஜயதுங்க, சந்திரிகா மற் றும் மகிந்த போன்றோரும் அதை வழங்கவில்லை.

வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் நடந்துகொள்கின்ற முறையைப் பார்க்கும்போது இந்த அதிகாரத்தைக் கொடுத்தால் சமஷ்டியை அடிப்படையாகக் கொண்ட ஒரு இராச்சியத்தையே அவர் உருவாக்கிவிடுவார். இதனால்தான் இந்த புதிய அரசமைப்பை எல்லோரும் எதிர்க்கின்றனர்.

நாம் வடக்கு-கிழக்கு இணைப்பை மாத்திரமன்றி எந்தவொரு மாவட்டமும் ஒன்றோடொன்று இணைவதையும் எதிர்க்கின்றோம்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை ஒழித்தால் 13 ஆவது திருத்தச் சட்டம் 13 + ஆக மாற முடியாது. நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை இப்போதுபோல் இருக்கின்ற நிலையில் வடக்கு- கிழக்கிற்கு 13+ வழங்குவதில் பிரச் சினை இல்லை. பொலிஸ் அதிகாரம் தேசிய மட்டத்தில்தான் இருக்க வேண்டும்.

கே: புதிய அரசமைப்பபை எப்படியாவது நிறைவேற்றிக்கொள்வதற்காக அரசு இப்போது எவ்வாறான தந்திரோபாயங்களை கையாளுகின்றது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

ப : புதிய அரசமைப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேவை உள்ளடக்கப்படாவிட்டால், அவர்கள் அரசுக்கு எதிராக செயற்படுவார்கள். மறுபுறம், அவர்களின் தேவை உள்ளடக்கப்பட்டால், இந்த நாட்டின் பெரும்பான்மை சக்தி அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழும்.

> புதிய அரசமைப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேவை உள்ளடக்கப்படாவிட்டால், அவர்கள் அரசுக்கு எதிராக செயற்படுவார்கள். மறுபுறம், அவர்களின் தேவை உள்ளடக்கப் பட்டால், இந்த நாட்டின் பெரும் பான்மை சக்தி அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழும்.


அரசமைப்பை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக அரசு அமைச்சர்களுக்கு-நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைகளை வழங்குகின்றது. 58 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் வழங்குவதற்குத் தீர்மானித்திருப்பதும் அந்த வகையில்தான்.

கே: இந்தக் குழப்பத்துக்கு மத்தியில் நாட்டின் எதிர்காலம் எப்படி அமையும்?

ப: இந்த நாட்டு மக்கள் மகிந்த மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். போர் என்ற ஒரு விடயத்தை வெற்றிகரமாக முடித்துக் காட்டியுள்ளார். பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளார். அதிவேக பாதைகளை அமைத்துள்ளார். இதனால் மகிந்தமீது மக்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதனால் மகிந்தவைத் தலைவராகக் கொண்டு நாம் மீண்டும் ஆட்சியைப் பிடிப்போம்.

கே: தமிழர்களின் செல்வாக்கை இழந்துள்ளதுபோல் முஸ்லிம்களின் செல்வாக்கையும் மகிந்த இழந்துள்ளாரே. இந்த நிலையில் ஆட்சியை மீளக் கைப்பற்றுவது எப்படிச் சாத்தியம்?

ப: ஆரம்பத்தில் முஸ்லிம் மக்களின் செல்வாக்கு எங்களுக்கு இருந்தது. பேருவளை சம்பவம் காரணமாக அவர்களின் செல்வாக்கை நாங்கள் இழந்தோம். ஆனால், இப்போது முஸ்லிம்கள் எங்களின் பக்கம் வரத்தொடங்கியுள்ளனர். ஆகவே, அனைத்து மக்களின் ஆதரவுடன் மகிந்த தலைமையில் மீண்டும் ஆட்சி அமைக்கக் கூடிய நிலைமை இப்போது ஏற்பட்டுள்ளது.



# வாசகர் திருமுகம்

## யாழ். மாநகரசபை நிர்வாகம் கவனம் செலுத்துமா?

யாழ். போதனாவைத்தியசாலை வெளிப்புற வடிகால் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. தாதிகள் பயிற்சி நிலையத்துக்கு முன்புறமுள்ள அந்த வடிகாலுக்குள் பழைய பொலிஸ் நிலையம் வரை சேறு நிரம்பியும், புல் வளர்ந்தும் இருக்கின்றன.

இது குறித்து யாழ். மாநகரசபை ஆணையாளர் கவனமெடுத்து, வடிகாலைச் சுத்தம் செய்ய உரியநடவடிக்கை எடுத்தல் வேண்டும். பள்ளிவாசல், கம்சியா கிளினிக், சிங்கர் பலஸ் ஆகிய நிலையங்களுக்கு அண்மையில் வடிகால் சுவர்களில் ஆலம் வேர், ஜாம் மரம், அரசு முதலியவை வளர்ந்து வருகின்றன. "பாரைக்கு நெக்குவிடா பாறை, பசு மரத்து ஆணிக்கு நெக்குவிடும்." ஆகவே, அந்த மரங்களை அழிக்காவிட்டால் வடிகால் சுவர் உடைந்து சிரமத்தை ஏற்படுத்தும். முற்றாக வாய்க்கால் அழிந்து விடும் நிலை வரும். இதனையும் யாழ் மாநகரசபை நிர்வாகம் கவனத்தில் எடுக்க வேண்டுகிறேன்.


*செல்வம் ஆஸ்பத்திரிவீதி*
*யாழ்ப்பாணம்.*

## திண்மக் கழிவகற்றல் செயற்பாட்டுக்கு ஊக்கம் அழிக்கப்படுமா?

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அதிக அளவில் குவியும் திண்மக் கழிவுப் பொருள்களை கிரமமாகவும், விரைவாகவும் அகற்ற வேண்டிய தேவை ஒரு முக்கிய தேவையாக ஆகியுள்ளது. குறித்த பணியை முறைப்படி சிறப்பாக மேற்கொண்டு நகர்ப்பகுதியின் சுகாதார நிலைமையைப் பேண யாழ். மாநகரசபையின் கழிவகற்றல் பிரிவு நகர எல்லைக்குள் முக்கிய இடங்களில் பிளாஸ்ரிக் கொள்கலங்களை வைத்து, அவற்றுள் திண்மக்கழிவுகளை இடுவதற்கு பொதுமக்களை அறிவுறுத்தி, கிரமப்படி அவற்றை அகற்றி நகரைச் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்க முடியும். அதற்குத் தேவையான நிதியை வடமாகாணசபை, மாநகர சபையின் கழிவகற்றல் பிரிவுக்கு ஒதுக்கிக் கொடுத்தால் குறித்த பணியை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த இயலும். இது குறித்து வடமாகாண சபை தீவிர கவனம் செலுத்திச் செயற்பட முன்வர வேண்டும்.

*பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா*
*வண்ணார்பண்ணை*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## நேரம் வீணாகிறதே...?

ஒரு நேரத்தில் ஒன்றை மட்டுமே சொல்லித் தந்த குருநாதர் மேல் சீடனுக்குக் கடுங்கோபம்.

தன் நேரம் வீணாகிறது என்று நினைத்து அவன் வருந்தினான்.

இதையறிந்த குருநாதர், அங்கு கூண்டில் அடைக்கப்பட்டிருந்த பத்துக் கோழிகளைத் திறந்து விட்டுப் பத்து கோழிகளையும் பிடிக்கச் சொன்னார்.

கூண்டிலிருந்து வெளியேறிய பத்து கோழிகளும் பத்துத் திசைகளில் ஓடின.

அவன் அனைத்துக் கோழிகளையும் துரத்தித் துரத்திக் களைத்தான்.

இதைக் கண்ட குருநாதர் அவனிடம், கழுத்தில் சிவப்பு நாடா கட்டப்பட்ட கோழியை மட்டும் பிடி-என்றார்.

சில நிமிடங்களில் அவன் அந்த சிகப்பு நாடா கட்டிய கோழியைப் பிடித்தான். குருநாதர் சொன்னார், ஒரு நேரத்தில் ஒன்றை மட்டும் பின்பற்றினால் எளிதில் அதைப் பிடித்து விடலாம். பலவற்றையும் பிடிக்க நினைத்தால் எல்லாவற்றையும் இழந்துதான் நிற்க வேண்டியிருக்கும்-என்றார்.

அப்போதுதான் அந்தச் சீடனுக்கு தனது நினைப்பு தவறு என்பது புரிந்தது.

## வெற்றி உனக்குள்ளே!

*-ஹிப்னோ ஜி.கெ கட்டுரையிலிருந்து..*

தனி மனிதர்கள் அடைந்த வெற்றிக்குப் பின்னால் இந்த 5 சங்கதிகளே காரணமாக இருக்கின்றன.

1. சாதிக்க வேண்டும் என்கிற வெறி
2. வரையறுக்கப்பட்ட இலக்கு
3. விளைவுகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளுதல்
4. சரியான கண்ணோட்டம்
5. தன் மீதான முழு நம்பிக்கை

## தாத்தா! தாத்தா!



தாத்தா நீங்க என்னைப் போல
பாப்பாவாக இருந்தப்போ
எப்படியெல்லாம் இருந்தீங்க
என்னவெல்லாம் செஞ்சீங்க.
உங்க தாத்தா உங்களுக்கு
கதைகள் எல்லாம் சொன்னாரா?
சொன்ன கதையை எங்களுக்கு
சொல்லித் தாங்க இப்போது
தாத்தாவாக நானும் ஆனா
சொல்லித் தருவேன் பாப்பாவுக்கு

## இன்பமும் துன்பமும்

இன்பமும் துன்பமும் உனது மனதிலிருந்து உண்டாகின்றன; மனமே பந்தத்துக்கும் முத்திக்கும் காரணமாகிறது.

தீயமனம் நரகத்தைத் தருகிறது. நன்மனம் பரகதியைத் தருகிறது. மனத்தழுக்கு அற்றவரே பெரியார். மனத்துக்கண் மாசில்லாமல் இருந்தால் எல்லா அறங்களும் உண்டாகும். ஆதலினால் உன் மனம் பளிங்குபோல் இருக்கட்டும்.



ஒருவனுக்கு அமையும் நட்பைப் பொறுத்தே அவனுக்கு அறிவும் நடத்தையும் அமைகிறது. நல்லவர்களுடன் சேர்வதால் மனம் சுத்தமாகவும் செயல்கள் நல்லதாகவும் இருக்கும். ஒருவன் தான் செய்த நற்செயல்களால் மட்டுமே இறந்த பின்பும் புகழ்பெற முடியும். அப்படிபட்ட செயல்கள் புரிவதற்கு நல்ல குணமும் நல்லோர்களின் நட்பும் அவசியம் வேண்டும்.

*திருவள்ளுவர்*



## விடுகதை

1. கடல் நீரில் வளர்ந்து , மழை நீரில் மடிவது என்ன ?
   உப்பு
2. ஆடும் வரை ஆட்டம் , ஆடிய பின் ஓட்டம் அது என்ன ?
   இதயம்
3. கொம்பு நிறைய முத்து அது என்ன ?
   மாதுளம்பழம்
4. மண்ணுக்குள்ளே கிடப்பான் மங்களகரமானவன் அவன் யார் ?
   மஞ்சள்

## வர்ணம் தீட்டுவோம் வாங்க...





## வரலாற்றில் இன்றைய தினம்

1917 - சோவியத்தின் முதலாவது இரகசிய பொலிஸ் படை சேகா உருவாக்கப்பட்டது.

1924 - லான்ஸ்பேர்க் சிறையிலிருந்து அடொல்ப் ஹிட்லர் விடுவிக்கப்பட்டார்.

1942 - இந்தியாவின் கல்கத்தா ஜப்பானிய விமானப் படையின் தாக்குதலுக்கு உள்ளாகியது.

1952 - அமெரிக்காவின் விமானப் படை விமானம் C-124 வொஷிங்கடன் மோஸஸ் ஏரியில் வீழ்ந்து 87 பேர் உயிரிழந்தனர்.

1993 - வதிரியில் சோழர்கால மண்பாண்டத் தொகுதி மீட்பு.

- மத்திய மாகாண சபையில் அங்கம் வகிக்கும் 7 இ.தொ.கா உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்கக் கடத்தப்பட்டனர்.

1999 - மருத்துவமனையிலிருந்து ஜனாதிபதி அலரி மாளிகை திரும்பினார். பிளாஸ்டரால் ஒரு கண் ஒட்டப்பட்ட நிலையில் தொலைக்காட்சி ஒளிப்பரப்பில் உரை.

- மயிலங்காடு ஈவினைப் பகுதியில் 67 பேருக்கு வீட்டுச் சேத இழப்பீடு.

2005 - துணைப்படைகளின் செயற்பாடும் அனுமதி நிலை மோசமடையக் காரணமென இணைத் தலைமை நாடுகள் பிரஸல்ஸ் கூட்டத்தின் பின் அறிக்கை.

- புங்குடுத்வு யுவதி கொலை: பாலியல் வல்லுறவின் பின் கழுத்து நெரித்துக் கொலையெனத் தீர்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் 2017 - 2020

சுப ஸ்ரீ துன்முகி வரும் தை மாதம் (26.01.2017) 13ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7:29 மணியளவில் சனிபகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுசுராசிக்குள் பிரவேசிக்கிறார். இங்கு அவர் 24.01.2020 வரை 3 ஆண்டுகள் சஞ்சாரம் செய்கிறார்.




(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)
(ஹி ஹு ஹே ஹோ ட டி டு டெ டோ கொ கௌ மெ மை போன்ற எழுத்துக்களில் பெயரை முதல் எழுத்தாக கொண்டவர்கள், ஆடி மாதத்தில் பிறந்தவர்களுக்கு இந்தப் பலன்கள் பொருந்தி வரும்)
வான மண்டலத்தில் 4 ஆவது ராசியாக வலம் வரும் உங்கள் ராசிநாதன் சந்திரன் ஆவார். ஊரோடு சேர்ந்து வாழ்ந்து பழகும் இயல்புடைய நீங்கள் சிந்தனை சக்தியும் அதைச் செயற்படுத்துவதில் ஆர்வமும் திறமையும் உடையவர்கள். அதற்காக முயன்று முயற்சி அடைந்து வெற்றி பெறுவீர்கள். எதற்கும் ஆசைப்படாத உங்களுக்கு ஏதாவது ஒரு துறையில் மிகவும் சிறந்து விளங்கவேண்டும் என்ற தணியாத ஆர்வம் உடையவர்கள்.

புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம் நட்சத்திரத்தை உடைய உங்கள் கடகராசிக்கு இதுவரை 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் உங்கள் ராசிக்கு 6 ஆம் இடமான வெற்றி, ருண, ரோக, சத்குரு எதிரி கடன் ஸ்தானத்தில் சஞ்சரிக்க போகிறார். இதுவரை போராட்டமாக இருந்து வந்த வாழ்க்கையில் வெற்றியின் அருமையை உணர வேண்டிய தருணம் வந்து விட்டது. இதுவரை நடைபெறாமல் தள்ளிப் போன விடயங்கள் எளிதில் வெற்றி பெற சந்தர்ப்பம் அமையும்.

6 ஆம் இடமான தனுசு ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான் வேலை இல்லாமல் இருந்தவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புகள் உருவாக்குவார். வேலையில் முன்னேற்றமும் அதனால் மகிழ்ச்சியும் ஏற்படுத்துவார். இதுவரை அடிக்கடி வேலை மாறிய அல்லது பார்த்த வேலையை விட்டுவிடக் கூடிய சூழ்நிலையில் இருந்த நீங்கள் இனிமேல் உங்களுக்கு பிடித்த வேலையில் அமரும் வாய்ப்பு அமையும். அதிக மகிழ்ச்சியுடன் வேலையில் ஈடுபடுவீர்கள். எப்பொழுதும் சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் உங்களைச் செயற்பட வைப்பார். செய்யும் வேலையில் மாற்றம் ஒரு சிலருக்கு ஏற்படும். உங்களுடைய கௌரவம் அந்தஸ்து, புகழ் அதிகரிக்கும். எடுக்கும் காரியங்களில் முழு மனதுடன் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். எதிர்பார்த்த செய்திகள் உங்களுக்கு சாதகமாகவும் சகாயமாகவும் வந்து சேரும். புதிய விடயங்களில் ஈடுபட்டு வெற்றி பெறப் பாடுபடுவீர்கள். பேச்சு வார்த்தைகளில் எதிர்பாராத லாபம் ஏற்படும். பணப்புழக்கம் தாராளமாக இருந்து வரும்.

சகோதர சகோதரிகளால் எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். அவர்களுக்கு வேலை மற்றும் சுப காரியம் நடக்க வாய்ப்புகள் அமையும். குடும்பத்தில் புதிய உறுப்பினர்கள் வருகை நன்மையாகவும் மகிழ்ச்சிகரமாகவும் வந்து சேரும். தாயாரால் எதிர்பாராத உதவிகள் கிட்டும். அதே சமயம் தாயாரின் உடல் நலத்தில் அதிக கவனம் தேவை.

குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் ஏற்பட வாய்ப்பு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள், சுப நிகழ்வுகள் நடக்க வாய்ப்புகள் தானாக வந்து சேரும். உங்களது உழைப்பு மற்றவர்களுக்கு லாபகரமாக அமையும். வேலையாள்களால் நன்மை ஏற்படும். தாய் மாமன்களின் அன்பும் ஆதரவும் நிறைந்து காணப்படும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக அமையும். வழக்குகளால் எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். கேட்ட இடத்தில் கடன் கிடைக்கும். கடன்கள் அதிகரிக்கும், எதிரிகள் தலையெடுத்த வண்ணம் இருப்பார்கள். புதிய புதிய பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டி வரும். உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. உடலில் தேமல், அரிப்பு, கட்டி போன்ற நோய்கள் ஏற்படும். ஒரு சிலருக்கு அறுவைச் சிகிச்சை செய்யும் சூழ்நிலை அமையும். போக்குவரத்து வண்டி வாகனங்களில் அதிக கவனம் தேவை. எப்பொழுதும் எச்சரிக்கையுடன் சென்று வருதல் வேண்டும்.

காதல் விடயங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும் சாதகமாகவும் இருந்து வரும். காதல் கனிந்து ஒரு சிலருக்கு திருமணத்தில் முடியும். புதிய தொழில்கள் தொடங்க சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அமையும். கூட்டுத்தொழில் சாதகமாக இருந்து வரும். முன்னோர்கள் சொத்து அல்லது எதிர்பாராத தனவரவு பொருள் வரவு அமையும். தந்தையாரின் அன்பும் ஆதரவும் எப்பொழுதும் போல் இருந்து வரும். அரசால் எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். வெளிநாடு செல்ல சந்தர்ப்பமும் சூழ்நிலையும் ஒரு சிலருக்கு அமையும்.

**பெண்களுக்கு**

வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பும் சந்தர்ப்பமும் அமையும். வேலையின் காரணமாக ஒரு சிலருக்கு வெளிநாடு வெளியூர் செல்ல வாய்ப்புக் கிட்டும். கையில் பணப்புழக்கம் சரளமாக இருந்து வரும். பேச்சில் சாமர்த்தியம் கூடும். குடும்பத்தில் புது வரவால் மகிழ்ச்சி ஏற்படும். பொன், பொருள்கள், ஆடை, ஆபரணங்கள் தானாகவே வந்து சேரும். அக்கம் பக்கத்தில் உங்கள் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். திருமணம் நடக்காதவர்களுக்கு திருமணம் நடக்க வாய்ப்புகள் வந்து சேரும். விருந்து கேளிக்கைகளில் கலந்து கொள்ள வாய்ப்புகள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. காதல் விடயங்கள் மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணவன் மனைவி உறவு சற்று சுமாராக இருந்து வரும். புத்திரபாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் ஏற்படும். வேலையாள்களால் எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். உயர்கல்வி பயில ஒரு சிலருக்கு வாய்ப்பு அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து காணப்படும்.

சுயதொழில் விடயத்தில் சற்று நிதானம் தேவை. முதலீட்டில் அதிக கவனம் தேவை. கூட்டாளிகளால் தேவையற்ற மன வருத்தங்கள் ஏற்படும். கூட்டாளிகள் பிரிய நேரிடும். புதிய தொழில் தொடங்குவதிலும் தொழிலை மாற்றிச் செய்வதிலும் அதிக கவனம் தேவை. இதுவரை வெளிவராமல்போன உங்கள் திறமையை வெளிபடுத்தும் சரியான காலம் ஆகும். ஓய்வின்றி எப்பொழுதும் வேலை இருக்கும் காலமாகும். இசை, ஓவியம், நடனம், நாட்டியம், நாடகம் ஆகியவை பரபரப்பாக இருந்து வரும். பரிசும் பாராட்டும் எதிர்பாராத வகையில் வந்து சேரும். புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். பணப்புழக்கம் தாராளமாக இருந்து வரும்.

உடம்பில் சளித் தொல்லைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும். உடலின் மேல் தேமல், கட்டி, போன்ற நோய்கள் வராமல் கவனித்தல் நலம். கண், அடிவயிறு பிரச்சினைகள் வராமல் பார்ப்பது நலம். அத்துடன் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய காலமிது. எனவே உடலில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் நல்ல மருத்துவரை அணுகுதல் வேண்டும்.

## நாளை

**மார்கழி-06**

புதன்கிழமை -21.12.2016
திதி: அட்டமி பி.இ.12.23
நட்சத்திரம்: உத்தரம் மு.இ.08.28
ராகுகாலம்:12.24-01.54 வரை
சுபநேரம்:04.54-06.24 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்று தணியும் சிரியாப் போர்?

சிரியாவின் உள்நாட்டுப் போரும், எமது நாட்டில் இடம்பெற்ற போரும் ஒப்பீட்டு அளவில் ஒரே மாதிரி இருப்பதாகப் பரவலான கருத்துக்கள் நிலவி வருகின்றன. மக்கள் முகம் கொடுத்த பிரச்சினைகள் அரசின் நடவடிக்கைகள் எனப் பல விடயங்கள் எம்மவர்கள் முகம் கொடுத்த பிரச்சினைகளுக்கு நிகராக உள்ளன. சிரிய விவகாரத்தில் அந்த நாட்டு ஜனாதிபதிக்கு ரஷ்யாவின் பலத்த ஆதரவு உண்டு. சிரிய ஜனாதிபதிக்கும், அவருக்கு எதிரான கிளர்ச்சிப் படையினருக்கும் தான் போர் இடம்பெற்று வருகின்றது. போரைக் கட்டுப்படுத்த ஆட்சி மாற்றம் மட்டுமே தீர்வாக அமையும் என அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. இதனால் ரஷ்யா- சிரியா ஆகிய தரப்புக்கள் அமெரிக்காவின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்த நிலையில் போராளிகளைக் குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்களில் கொல்லப்படுவது பொதுமக்கள்தான். கடந்த வாரத்தில் இருந்து இன்றுவரை ஆயுதக்குழுவினரின் பகுதிகளுக்குள் வசிக்கும் மக்களை வெளியேற்றுவதற்கு கடும் முயற்சி நடைபெற்று வருகிறது. ஆனால் அரச தரப்பு முனைப்புடன் செயற்படுவதாகத் தெரியவில்லை என்ற பன்னாட்டுக் குற்றச்சாட்டுகள் உள்ளன. கிழக்கு அலெப்போவில் அகப்பட்டுள்ள 40 ஆயிரம் மக்களின் உயிர்கள் ஊசலாடிய படி உள்ளன.

இதனை உணர்ந்த பிரான்ஸ் ஐ.நாவுக்கு பிரேரணை ஒன்றை முன்வைத்தது. மக்களுக்கான அத்தியாவசிய உதவிகளை வழங்குவதுடன், மீட்பு பணிகளை மேற்கொள்வது தொடர்பாகவும் ஆதரவு திரட்டும் வாக்குப்பதிவு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தப் பிரேரணைக்கு ரஷ்யா தனது எதிர்ப்பையும் தெரிவித்தது. முன்னதாக பிரான்ஸ், ரஷ்யாவின் கண்மூடித்தனமான தாக்குதல்களைப் பல தடவைகள் கண்டித்திருந்தது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையில் முறுகல் நிலையும் ஏற்பட்டது. தற்போது அலப்போ மக்களின் குரலாக பிரான்ஸ் செயற்படுகிறது.

இதற்கிடையில் எமது நாட்டில் இடம்பெற்ற போரையும் அதன் வடுக்களையும் எவராலும் மறக்கவும் இயலாது, மறுக்கவும் இயலாது. போர் முடிவடைந்த போதும் இன்னமும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் எட்டப்படவில்லை என்பதுதான் உண்மை.

ஆனால், சிரிய விவகாரம் அவ்வாறு அல்ல. சிரியா செல்வந்த நாடு. தற்போது தலைமைத்துவ பிரச்சினைகளால் உருக்குலைந்த நிலையில் உள்ளது. போர் முடிந்தால், துரித வளர்ச்சி அடைவதற்கான அனைத்துச் சாத்தியங்களும் உண்டு. ஒரு சிலரின் முரணான உணர்வுகள் ஒரு நாட்டையே புரட்டிப் போட்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. ஜனநாயகத்தை நாம் முற்றாக எட்டிவிட்டோமா என்ற கேள்வியும் இன்னமும் நிலவத்தான் செய்கிறது. மக்களால் மக்களுக்காக தெரிவு செய்யப்படும் தலைவர்கள், இறுதியில் அவர்களை மறந்து மிகச் சாதாரணமாக போர் என்றால் உயிரிழப்புகள் சாதாரணம் எனக் கருத்துப் பகிர்வது வேதனைக்குரியது. பன்னாட்டுச் சூழலில் இருந்து எமக்குக் கிடைக்கும் படிப்பினை எமக்கான ஜனநாயகத்தை நாம் முற்றாக பயன்படுத்த வேண்டும் என்பதுதான்.

ஜே.கே.வாசன்



# வடக்கு மாகாணத்தில் 2017ஆம் ஆண்டிலிருந்து பாடசாலைகளில் நடைமுறையாகும் நேர மாற்றம் சாதிக்கப் போவது என்ன?

அடுத்தவருடம் ஆரம்பத்திலிருந்து வடக்கு மாகாணப் பாடசாலைகள் அனைத்தும் காலை 7.30 மணிக்கு ஆரம்பித்து பி.ப.1.30 மணிக்கு மூடப்படவேண்டுமென வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளரால் சகல பாடசாலைகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. வரலாற்றில் முதல் தடவையாக ஏற்படுத்தப்படும் இந்த மாற்றம் வடக்கு மாகாணத்தில் எத்தகைய பிரச்சினைகளை உருவாக்கப் போகின்றது? என்பதை ஆராய் வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையில் மாகாணசபை நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் அதாவது 1988 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை முழுவதும் இரு நேரப் பாடசாலை முறைமை நடைமுறையில் இருந்தது. அந்தக் காலத்தில் மாணவர்களுக்கு ஒருமணிநேரம் மதிய போசன இடைவேளை வழங்கப்பட்டது. அன்றைய அனுபவங்களைப் பொறுத்தமட்டில் சில நகர்ப்புறப் பாடசாலைகளில் மாணவர்கள் வீடுகள் அருகிலிருப்பின் வீடுகளுக்கு சென்று மதிய உணவு அருந்திவிட்டுப் பாடசாலைக்கு வருவர். வரவு இடாப்பு காலையும் மாலையும் பதியப்படும். இந்த நடைமுறை பின்னர் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாகக் கைவிடப்பட்டது. எனினும் தற்போது மீண்டும் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கல்வியமைச்சு சிந்திக்கும் வேளையில் தென்னிலங்கையில் பெரும்பாலான பெற்றோர் அதனை விரும்பாத காரணத்தால் அந்தயோசனை கிடப்பில் போடப்பட்டுள்ளது.

### திடீரென்ற அறிவித்தல்

நிலைமை இவ்வாறிருக்கை யில் வடமாகாணக் கல்வி அமைச்சு திடீரென அறிவித்துள்ள இந்த முடிவானது ஆச்சரியம்மிக்க ஒன்றாகவுள்ளது. முன்னர் வடமாகாணம் முழுவதும் 8.30 மணிக்கே பாடசாலைகள் ஆரம்பமாகின என்பது இங்கு குறிப்பிட வேண்டியதொன்றாகும். ஏனெனில் சமூகவியலாளர்களின் கருத்துப்படி ஒருமாணவன் பாடசாலைக்கு வரும் போது தனது சமூகத்தையும் அழைத்து வருகின்றான் என்பர். எனவே பாடசாலைகள் என்பவை அது இமைந்துள்ள சமூகத்தின் அபிலாசைகளைப்பிரதிபலிப்பனவாக அமைய வேண்டும். அதேவேளை பாடசாலையின் தடைமுறைகள் பாடசாலை சமூகத்தைப் பாதிக்காத வகையில் ஏற்படுத்தப்படவேண்டும். அந்த வகையில் வடமாகாணக் கல்வி அமைச்சின் இந்தத் தீர்மனம் சமூகத்தின் நன்மை கருதி ஏற்படுத்தப்பட்டதா? என்பதில் சில ஐயப்பாடுகள் உள்ளன.

மிக அண்மைக் காலமாக பாடசாலையின் புறக்கிருத்திய செயற்பாடுகளில் (Codcurricular Activities) மாணவர்கள் பெரிதாக ஆர்வம் காட்டுவதில்லை எனப்பல அதிபர்கள் குறைபாட்டுக் கொள்கின்றனர். ஏனெனில் மாணவர்கள் பாடசாலை முடிந்த கையுடன் தமது புத்தகப்பைகளுடன் (சில வேளைகளில் சீருடையையும் மாற்றாது) தனியார் வகுப்புக்களுக்குச் செல்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதைப் பெரிய தவறாகக் கருத முடியாது. ஏனெனில் எமது நாட்டுக் கல்விமுறை அப்படியானதே.

சுமையான பாடவிதான அமைப்பு போட்டிப் பரீட்சைமுறை என்பன மாணவர்களை விரும்பியோ விரும்பாமலோ இந்த நிலமைக்குத்தள்ளிவிட்டது. இவ்வாறான இயந்திர வாழ்க்கை முறைக்கு மாணவர்கள் பழக்கப்பட்டுவிட்டதால் அவர்களது உணவுமுறையும் மாற்றமடைந்துவிட்டது. பெரும்பாலான மாணவர்கள் காலை உணவை உண்ணாமலேயே பாடசாலைக்கு வருகின்றனர். காலை 7.30 மணிக்கு பாடசாலை ஆரம்பிக்கும் போது இந்த நிலைமை மேலும் மோசமடையக் கூடும். புதிய நடைமுறையில் 1.30 மணிக்கு பாடசாலை விடப்படுமாயின் இவ்வாறு கிடைக்கும் நேரத்தைத் தனியார் வகுப்பு நடத்துபவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வர். இது கிணறு வெட்டப் பூதம் வெளிவந்த கதையாகி விடும்.

தற்போது 7.30 மணிக்கு பாடசாலைகள் ஆரம்பிக்குமாயின் குறைந்தது 7.15 மணிக்கு மாணவர்கள் பாடசாலையை அடையவேண்டும். அதற்கு முன்னர் அதிபர், ஆசிரியர்கள் செல்ல வேண்டும். வன்னி மற்றும் தீவகம் போன்ற பகுதிகளில் இயங்கும் பாடசாலைகளுக்கு இந்தத் தொடங்கும் நேரம் எவ்வளவு தூரம் சாத்தியமானது? இந்தப் பிரதேசங்கள் புவியியல் ரீதியாக பரந்துபட்ட பிரதேசங்கள் என்பதுடன் போரால் பெரும் பாதிப்படைந்த பிரதேசங்களும் கூட. பெரும்பாலான ஊர்கள் பிரதான வீதிகளிலிருந்து ஒருசில கிலோ மீற்றர்கள் உட் புறமாகவே அமைந்துள்ளன. இந்தப்பகுதியிலிருந்து புறப்படும் மாணவர்கள் சில இடங்களில் பல கிலோமீற்றர் பயணித்தே பிரதான வீதியை அடைகின்றனர்.

### மாணவர்களுக்குத் திண்டாட்டம்

இந்தப்புதிய நேரம் நடைமுறைக்குவரும் பட்சத்தில் இவர்கள் காலை 6 மணிக்குத் தமது வீடுகளிலிருந்து புறப்படவேண்டும். இதிலும் மழைகாலமென்றால் இவ்வாறான மாணவர்கள் படும்பாடு சொற்களால் விவரிக்க முடியாதவை. மேலும் இந்தப் பிரதேசங்களில் கடமைபுரியும் பெரும்பாலான ஆசிரியர்கள் நகர்ப்புறங்களிலிருந்து தினமும் சென்று வருபவர்களே. அவர்களும் அதிகாலை 6மணிக்கு அல்லது அதற்கு முதல் தமது பயணத்தை ஆரம்பிக்கும்போது தமது கற்பித்தல் பணியில் எவ்வளவு தூரம் திருப்தியுடனும் வினைத்திறனுடனும் கடமை புரிவர் என்பதும் சந்தேகமே. அதிகாரிகள் சில வேளைகளில் ஏன் அவர்கள் கடமைபுரியும் நிலையங்களுக்கு அண்மையில் தங்கிக் கொள்ளலாம் அல்லவா? எனக் கேட்கலாம். அப்படியாயின் இவ்வாறான பிரதேசங்களில் கடமைக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு போதுமான தங்குமிட விடுதிகளை எனைய அரச திணைக்களங்கள் வழங்குவது போல் வழங்க முடியுமா? அப்படியாயின் இவ்வாறான கேள்விகளுக்கு கல்வி அமைச்சு மட்டத்தில் என்ன பதில்கள் உள்ளன. ஆணும் பெண்ணும் தொழில் பார்த்து பிள்ளைகளையும் பராமரிக்க வேண்டிய தற்காலக் குடும்ப அமைப்புக்களிலே இந்த விடயம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

நாட்டில் பெரும்பாலான மாகாணங்களில் பாடசாலை தொடங்கும் நேரம் 7.30 என இருக்கும்போது வடமாகாணம் அதை அப்படியே பின்பற்ற வேண்டும் என்ற தேவை மிக அவசியமானதா? இதனால் பெறுபேற்றை அதிகரிக்க முடியுமா?

### கொழும்பைப் பின்பற்ற முடியாது

ஏனெனில் கொழும்பு போன்ற நகர்களை முன்னுதாரணமாகக் கொண்டு நாம் கண்மூடித்தனமாகப் பின்பற்ற முடியாது. கொழும்பு போன்ற உயர்தர வாழ்க்கை வசதிகள் கொண்ட சமூகம் ஒன்றுக்கு இது பொருத்தமானதாக அமையலாம். ஏனெனில் அந்தப் பிரதேச பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலை வசதிகள் உண்டு. மாணவர்களும் ஆசிரியர்களும் காலை உணவை வீட்டில் தவறவிட்டால் இப்படியான வசதிவாய்ப்பு அவர்களது உணவுப் பிரச்சினையைத் தீர்த்துவிடும். ஆனால் எமது பிரதேசங்களில் மாணவர்களது எண்ணிக்கைக்குப் போதுமான மல சலகூட வசதிகளே அற்றநிலையில் சிற்றுண்டிச்சாலை பற்றிப் பேச்சுக்கே இடமில்லை. பாண் விற்கும் கடைகள்கூட 7மணிக்குப் பின்புதான் திறக்கப்படும் என்கின்ற நிலையில், அவசரமாகப் புறப்படும் மாணவர்கள் எங்கே சென்று இந்த உணவுத்தேவையைப் முழுமை செய்வது? இன்று வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான உத்தியோகத்தர்கள் தமது பிள்ளைகளை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு பாடசாலைக்குச் சென்று அவர்களைப் பாதுகாப்பாக இறக்கி விட்டுத் தாம் 8.30 மணிக்கு அலுவலகத்துக்குச் செல்வதற்குத் தற்போதுள்ள பாடசாலை 8மணிக்கு ஆரம்பமாகும் நேரம் வாய்ப்பாக உள்ளது. இந்த நிலை பாடசாலை நேரம் 7.30 என மாற்றப்படுமாயின் அவர்களது செயற்பாடும் பாதிக்கப்படும்.அவர்களது பயனுள்ள மணித்தியாலம் வீதிகளில் வீணடிக்கப்படும்.

இவ்வாறான பல நடைமுறைச் சிக்கல்களை ஆராயாமல் இந்த நேரமாற்றம் அவசியமானதென உரிய தரப்பினர் கூறுவார்களாயின் அதனால் விளையும் நன்மைகளை அவர்கள் பட்டியலிடவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக வடமாகாணத்தின் கல்விப் பெறுபேற்றை இது உயர்த்துமா? விளையாட்டுத் துறைப் பெறுபேற்றை உயர்த்துமா? இணை பாடவிதானச் செயற்பாடுகள் அதிகரிக்குமா? பெரும்பாலும் எதிர்விளைவையே இந்த 7.30 பாடசாலை ஏற்படுத்தப் போகின்றது.

இறுதியாக வடமாகாணக் கல்வியமைச்சிடம் இரண்டு பகிரங்க வினாக்களை முன்வைத்து இந்தக் கட்டுரையைப் முழுமை செய்கின்றேன்.

வடபுலக் கல்விப் பிரச்சினைகளைப் பட்டியல் போட்டால் நீண்டு செல்லும் பட்டியலில் முன்னுரிமைப்படுத்திச் செய்யவேண்டிய எத்தனை விடயங்கள் தீர்க்கப்பட்டுள்ளன? அந்தப் பிரச்சினைகளுடன் ஒப்பிடுகையில் இந்த நேரமாற்றம் பிரச்சினைகளுக்கான தீர்வா? அல்லது ஒரு புதிய பிரச்சினையின் ஆரம்பமா?

நாடு முழுவதும் ஒரே வகையில் நேரம் பின்பற்றப்பட வேண்டும்மெனின் கல்வி சார்பான எல்லா விடயங்களிலும் இதைப்போல் ஏன் பின்பற்றித் தீர்வு காணமுடியாது.

“ காலை 7.30 மணிக்கு பாடசாலை ஆரம்பிக் கும் போது இந்த நிலமை மேலும் மோசமடையக் கூடும். புதிய நடைமுறையில் 1.30 மணிக்கு பாடசாலை விடப்படுமாயின் இவ்வாறு கிடைக்கும் நேரத்தைத் தனியார் வகுப்பு நடத்துபவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வர். இது கிணறு வெட்டப் பூதம் வெளிவந்த கதையாகி விடும். தற்போது 7.30 மணிக்கு பாடசாலைகள் ஆரம்பிக்குமாயின் குறைந்தது 7.15 மணிக்கு மாணவர்கள் பாடசாலையை அடைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 1 | 7 | | | | 8 |
| | 1 | | 5 | | | | 3 | |
| | | | | | | | 6 | 1 |
| | | 5 | | 4 | | | 7 | 9 |
| | | 8 | | | | 4 | | |
| 2 | 4 | | | 3 | | 8 | | |
| 9 | 2 | | | | | | | |
| | 7 | | | | 5 | | 8 | |
| 5 | | | | 1 | 6 | | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 4 | 9 | 2 | 6 | 5 | 3 | 1 |
| 3 | 1 | 9 | 5 | 7 | 8 | 2 | 4 | 6 |
| 2 | 5 | 6 | 3 | 1 | 4 | 9 | 7 | 8 |
| 9 | 4 | 1 | 6 | 8 | 7 | 3 | 2 | 5 |
| 5 | 6 | 3 | 4 | 9 | 2 | 1 | 8 | 7 |
| 8 | 2 | 7 | 1 | 5 | 3 | 6 | 9 | 4 |
| 1 | 3 | 5 | 7 | 4 | 9 | 8 | 6 | 2 |
| 4 | 9 | 8 | 2 | 6 | 5 | 7 | 1 | 3 |
| 6 | 7 | 2 | 8 | 3 | 1 | 4 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதி கள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரை யான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# தொழில் அதிபருடன் ரகசிய திருமணம்: நடிகை பூஜா



தமிழில் ஜே ஜே படத்தில் அறிமுகமான நடிகை பூஜா. அவரது தாய் இலங்கையைச் சேர்ந்தவர். தந்தை கர்நாடகாவை சேர்ந்தவர். பெங்களூரில் படித்த பூஜா தமிழ் தவிர மலையாளம், தெலுங்கு, சிங்கள மொழிப் படங்களில் நடித்துள்ளார். பூஜா தமிழில் தல அஜித், ஆர்யா உள்ளிட்டோருக்கு ஜோடியாக நடித்துள்ளார்.

இந்த நிலையில் அவருக்கும் இலங்கையைச் சேர்ந்த தொழில் அதிபர் தீபக் சண்முகநாதனுக்கும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. ஆனால் தங்களுக்குள் சில காரணங்களுக்காக ஒத்துப் போகாது என்று கூறி பிரிந்துவிட்டனர். இதனைத் தொடர்ந்து தற்போது பூஜாவுக்கும், தீபக்கிற்கும் கொழும்பில் ரகசியமாக திரு மணம் நடந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஓட்டப் பந்தயத்தில கலந்துக்கப் போறேன்... வாழ்த்தி ஆசீர்வாதம் பண்ணு தாத்தா



பார்த்து மெதுவா ஓடிப்போ, வேகமாக ஓடி கைய, கால உடைச்சுக்காதே

"அண்ணே! பத்துக் கிலோ வெங்காயம் வேண்டும். பொடியா சின்ன சின்னதாகப் பார்த்து வாங்கப் போறேன்."



"ஏன்டா?"

"பெரிசா வாங்கினா அதிக கனமா இருக்கும். என்னால தூக்கிட்டுப் போக முடியாதண்ணே.... அதுதான்...."

5 வருஷம் கழிச்சு... உன்ன இந்த கம்பெனில எங்க பார்க்க விரும்புற?



கண்ணாடில சார்...

மாடர்ன் தமிழன்

இருக்கும் போதே அன்பு செலுத்துங்கள். இறந்த பின் நீங்கள் விடும் கண்ணீரும், ஊற்றப்போகும் பாலும் எனக்கு ஒரு போதும் தெரியப்போவதில்லை!

"தம்பி தம்பி! இங்க வாயேன். இந்தத் தெருவில பஞ்சர் எங்க ஒட்டுவாங்க தெரியுமா?"

"ரியூப்ல எங்க ஓட்டை இருக்கோ அங்கதான் ஒட்டுவாங்க!"

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** திட்டமிட்ட பணியில் திடீர் மாற்றம் ஏற்படலாம். தொழிலில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திக்க நேரிடலாம். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.



**இடபம்:** மனதில் அதிக எதிர்பார்ப்பு உருவாகலாம். தொழில் வியாபாரம் தாமத கதியில் இயங்கும். மிதமான ஆதாயம் கிடைக்கும். உறவினர் வருகையால் செலவு கூடும். பிறருக்காக நகை, பணம் பாதுகாக்கும் பொறுப்பு ஏற்பது கூடாது.



**மிதுனம்:** அனைவரிடமும் அன்பு பாராட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் விற்பனை அதிகரிப்பால் ஆதாயம் கூடும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டு.



**கடகம்:** நண்பரின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சீராக இருக்கும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.



**சிங்கம்:** லட்சிய மனதுடன் பணிபுரிவீர்கள். தொழிலில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். லாபம் அதிகரிக்கும். பணக்கடனில் ஒருபகுதி அடைபடும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.



**கன்னி:** பேசுவதில் நிதானம் பின்பற்ற வேண்டும். தொழிலில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். பிராணிகளிடம் விலகியிருப்பது நல்லது.



**துலாம்:** சூழ்நிலை உணர்ந்து செயற்படுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர். பெற்றோரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.



**விருச்சிகம்:** நண்பருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழிலில் இருந்த மறைமுகப் போட்டி குறையும். லாபம் சீராகும். பணியாளர்கள் பண விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.



**தனுசு:** முக்கியமான பணி நிறைவேற தாமதமாகலாம். தொழில் வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.



**மகரம்:** பொது விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர்களுக்கு சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பெண்கள் செலவில் சிக்கனமாக இருப்பர்.



**கும்பம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வர். அரசியல்வாதிகள் பதவி பெற யோகம் உண்டாகும்.



**மீனம்:** அந்தஸ்து மிக்கவர்களின் நட்பு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். நிலுவைப்பணம் வசூலாகும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரேஞ் சொக்லேட் கேக்



### தேவையான பொருள்கள்

கோதுமை மா – 250 கிராம்
வெண்ணெய் – 250 கிராம்
அரைத்த சீனி – 250 கிராம்
முட்டை – 4
பேக்கிங் பவுடர் – 2 தேக்கரண்டி
ஒரேஞ் எசன்ஸ் – ஒரு தேக்கரண்டி
இளஞ்சூடான தண்ணீர் – 5 மேசைக்கரண்டி
ஒரேஞ் ஜூஸ் பௌடர் – 3 மேசைக்கரண்டி
சொக்லேட் சோஸ் தயாரிக்க:
சிங்கிள் க்ரீம் – 120 மி.லி
சொக்லேட் துண்டுகள் – 250 கிராம்

### செய்முறை

கோதுமை மாவையும் பேக்கிங் பவுடரையும் சேர்த்து 3 முறை அரித்து வைத்துக் கொள்ளவும். பின்பு மிருதுவான வெண்ணெயையும் அரைத்த சீனியையும் நன்கு அடித்துக் கொள்ளவும். அதன் பின்னர் ஒவ்வொரு முட்டையாக உடைத்து ஊற்றி நன்கு அடித்துக் கொள்ளவும்.

அரித்து வைத்திருக்கும் கோதுமை மாவை சிறிது சிறிதாக வெண்ணெய்க்கலவையில் சேர்த்துக் கொண்டே அடிக்கவும். ஒரேஞ் ஜூஸ் பவுடரையும் தண்ணீரையும் நன்கு கலக்கிக் கொண்டு பின்னர் எசன்ஸையும் சேர்த்து கலக்கவும். இந்த கலவையை அவனில் வைத்து 160 டிகிரியில் 25 – 35 நிமிடங்கள் பேக் செய்து எடுக்கவும். கேக் வெந்ததும் வெளியில் எடுத்து ஆற வைக்கவும்.

சொக்லேட் சோஸ் தயாரிக்கும் விதம்: சிங்கிள் கிரீமை ஒரு சிறிய பாத்திரத்தில் ஊற்றி மிதமான தீயில் சூடு செய்யவும். கொதி நிலை வந்ததும் சொக்லேட் துண்டுகளைச் சேர்த்து அடுப்பை அணைக்கவும். இளகும் சொக்லேட் துண்டுகளை நன்கு மசித்துக் கொள்ளவும்.

சொக்லேட் சோஸ் தயாரானதும் அதை ஆற வைத்திருக்கும் ஒரேஞ் கேக் மீது சமமாகத் தடவி விடவும். ஒரேஞ் சொக்லேட் கேக் தயார்.

# மனிதர்களின் மூளையைப் பாதிக்கும் 10 பழக்கங்கள்

1. காலையில் உணவு உண்ணாமல் இருப்பது: காலையில் உணவு உண்ணாமல் இருப்பவர்களுக்கு குருதியில் குறைவான அளவே சர்க்கரை இருக்கும். இது மூளைக்குத் தேவையான சக்தியையும் தேவையான ஊட்டச் சத்துக்களையும் கொடுக்காமல் ஆக்கி, மூளை அழிவுக்குக் காரணமாகும்.
2. மிக அதிகமாகச் சாப்பிடுவது: இது மூளையில் இருக்கும் குருதி நாளங்கள் இறுகக் காரணமாகி, மூளையின் சக்தி குறைவுக்குக் காரணமாகும்.
3. புகை பிடித்தல்: மூளை சுருங்கவும், அல்ஸைமர்ஸ் வியாதி வருவதற்கும் காரணமாகிறது.
4. நிறைய சர்க்கரை சாப்பிடுதல்: நிறைய சர்க்கரை சாப்பிடுவது, புரோட்டின் நமது உடலில் சேர்வதைத் தடுக்கிறது. இதுவும் மூளை வளர்ச்சிக்கு பாதிப்பாகிறது.
5. மாசு நிறைந்த காற்று: மாசு நிறைந்த காற்றை சுவாசித்தல், நமக்குத் தேவையான ஒட்சிசனை நாம் பெறுவதிலிருந்து தடை செய்கிறது. மூளைக்கு ஒட்சிசன் செல்லாவிட்டால், மூளை பாதிப்படையும்.
6. தூக்கமின்மை: நல்ல தூக்கம் நம் மூளைக்கு ஓய்வு கொடுக்கும். வெகுகாலம் தேவையான அளவு தூங்காமலிருப்பது மூளைக்கு நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தும்.
7. தலையை மூடிக்கொண்டு தூங்குவது: தலையை மூடிக் கொண்டு தூங்குவது, போர்வைக்குள் கரியமிலவாயு அதிகரிக்க வைக்கிறது. இது நீங்கள் சுவாசிக்கும் ஒட்சிசனை குறைக்கிறது. குறைவான ஒட்சிசன் மூளையைப் பாதிக்கிறது.
8. நோயுற்ற காலத்தில் மூளைக்கு வேலை கொடுப்பது: உடல் நோயுற்ற காலத்தில் மிக அதிகமாக மூளைக்கு வேலை கொடுப்பதும், தீவிரமாகப் படிப்பதும் மூளையைப் பாதிக்கும். உடல் சரியாக ஆன பின்னால், மூளைக்கு வேலை கொடுப்பதே சிறந்தது.
9. மூளைக்கு வேலை கொடுக்கும் சிந்தனைகளை மேற்கொள்ளாமல் இருப்பது: மூளையை அதிகமாக உபயோகப்படுத்தும் சிந்தனைகளை மேற்கொள்வதால், மூளையில் புதுப்புது இணைப்புகள் உருவாகின்றன. அதனால், மூளை வலிமையான உறுப்பாக ஆகிறது.
10. பேசாமல் இருப்பது: அறிவு பூர்வமான உரையாடல்களை மேற்கொள்வது மூளையின் வலிமையை அதிகரிக்கிறது.




# இறக்கை கிறிஸ்மஸ்

இறக்கை கிறிஸ்மஸ் மரத்துக்கு தேவையான பொருள்கள்
வெண்நிற இறகுகள்
முத்துகள்
காகித மட்டை கூம்பு
பசை

1 தேவையான இறகை எடுத்து சுத்தப்படுத்திக் கொள்ளவும்.
2 ஒவ்வொரு இறகுகளின் நுனியிலும் முத்தை இணைக்க.
3, 4 காகித மட்டையால் செய்த கூம்பில், படத்தில் காட்டியவாறு இறகுகளை ஒட்டிக் கொள்ளவும்.
5 இறுதியாக கூம்பின் நுனி வரை ஒட்டி இறகை நட்சத்திரம் போன்று வெட்டி வடிவமைக்குக.
6 இறகுகளுக்கு விரும்பிய வர்ணமிட்டு, வர்ணமிக்க கிறிஸ்மஸ் மரத்தை உருவாக்குக.

# வட நாட்டு ஆபரணங்கள்




வட நாட்டு ஆபரணங்கள் அறிமுகமாகியுள்ளன. பகட்டான வேலைப்பாடுகளுடைய இவை. தரத்துக்கமைய சில கால உத்தரவாதத்துடன் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த வகை ஆபரணங்கள் 5 ஆயிரம் ரூபாவில் இருந்து விற்பனை செய்யப் படுகிறது.

# தினமும் கட்டாயம் சாப்பிட வேண்டிய உணவுகள்



தயிர் மிகச்சிறந்த, ஆரோக்கியமான சிற்றுண்டிகளுள் ஒன்று. சாதாரண தயிரை விடவும் சிறந்த உணவு இருக்க முடியாது. அதனால் தினமும் காலை, மதியம், மாலை என மூன்று வேளையும் நம்முடைய உணவோடு தாராளமாகத் தயிரைச் சேர்த்துக் கொள்ளலாம். வெறும் 8 அவுன்ஸ் தயிருக்குள்ளேயே நமக்கு 579 மில்லி கிராம் பொட்டாசியம் கிடைக்கிறது. தயிரில் பொட்டாசியம் மட்டுமல்லாது புரதம், கல்சியம் என ஏராளமான சத்துக்கள் நிறைந்துள்ளன.


கீரையில் வெறுமனே விற்றமின் ஏ மட்டும் இருக்கிறதென நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் கீரையில் தாராளமாகப் பொட்டாசியம் கிடைக்கிறது. அதிலும் குறிப்பாக, ஸ்பின்னாக்கில் மற்ற எந்த உணவுப் பொருள்களிலும் இல்லாத அளவுக்கு பொட்டாசியம் நிறைந்து காணப்படுகிறது. ஒரு கப் ஸ்பின்னாக் கீரையிலிருந்து மட்டுமே நமக்கு 839 மில்லிகிராம் பொட்டாசியம் கிடைக்கிறது.

அதனால் இந்த உணவுகளை நாம் நம்முடைய அன்றாட உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலின் மீதாய் ஒரு பெருஞ் சுமை





வற்றாத வளம்கொண்ட கடலின் பெருமை என்பது அதை நம்பி வாழ்ந்துவருகின்ற மீனவர்களுக்கே நன்றாகத் தெரியும். கடல் அம்மா என்பதான அன்பின் பிணைப்போடே மீனவர்கள்தங்களின்வாழ்வாதாரத்தை அழைக்கிறார்கள். கடல் மீனவர்களுக்கு மட்டுமே வாழ்வாதாரங்களை தரவில்லை. மனிதகுலத்தின் வாழ்வாதாரமாகவே கடல்தான் என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட, நிரூபிக்கப்பட்டு வருகின்ற உண்மைகளின் வெளியானது.

அந்தவகையிலே புவிக்கோளத்தின் முக்காற் பங்கை அல்லது பரப்பை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் கடல்தான் எங்களுடைய வானிலையைத் தீர்மானிக்கிறது. மனிதர்களின் செயற்பாடுகளால் வளிமண்டலத்தில் வெளிவிடப்படுகின்ற கார்பன் டை ஒக்சைடின் கால்பகுதியை கடல்நீர்தான் உறிஞ்சிக்கொள்கிறது. இதன் மூலம் புவி வெப்பமடைதல் என்பது தடுக்கப்படுவதுடன் சூழல் மாற்றங்கள் தவிர்க்கப்படுகின்றது.

இந்தநிலையிலே மனித வாழ்க்கையின் அங்கங்களில் ஒன்றாய் தற்போது தொழிற்சாலைகள் பெருகிவிட்டன. கார்பன் டை ஒக்சைடின் அளவு என்பது காற்றில் அதிகரித்து வருகிறது. இதன்படி ஒவ்வோர் ஆண்டும் இந்த கார்பன் டை ஒக்சைடின் அளவு அதிகரித்துக்கொண்டே இருப்பதாகவும் கடல் நீரின் கார்பன் டை ஒக்சைட் உறிஞ்சு திறன் குறைந்துபோயிருப்பதான தகவலை விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வு செயன்முறைகள் வெளிப்படுத்தியுள்ளது.

இதன்படி நேச்சர் என்ற இதழ் வெளியிட்டுள்ள கட்டுரையொன்றில் கடந்த காலங்களில் 2.3 பில்லியன் தொன்கள் அளவுடைய கார்பன் டை ஒக்சைட்டை கடல் உறிஞ்சிக் கொண்டதாக ஆய்வுத் தகவலின் அடிப்படையிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கடந்த 2000ஆம் ஆண்டில் இருந்த கடல் நீரின் கார்பன் டை ஒக்சைட் உறிஞ்சு திறன் என்பது 10 சதவிகிதம் குறைந்து போயிருப்பதாக ஆய்வாளர்கள் கணக்கிட்டுள்ளனர். இதுமாத்திரமன்றி மேற்படிகணிப்பீடுகள் முன்னரே செய்யப்பட்டிருந்தாலும் இதுபற்றிய அளவீடுகளும் புள்ளிவிவரங்களும் தற்போது சேகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காற்றில் கார்பன் டை ஒக்சைடின் அளவு அதிகரிக்கும்போது கடல்நீரின் அமிலத்தன்மை அதிகரிக்கிறது. இதனால் கடல் நீரின் கார்பன் டை ஒக்சைட் உறிஞ்சு திறன் குறைகிறது என்பதான தகவலை கொலம்பியா பல்கலைக்கழக விஞ்ஞானி சாமர் காட்டி வாலா வெளிப்படுத்தியுள்ளார்.

இவைதவிர வளிமண்டலத்தில் தொழிற்சாலைகளில் இருந்து வெளியகற்றப்படும் காபனின் அளவானது 1765 ஆம் ஆண்டு முதல் 2008 வரை காட்டிவாலா குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ஆக,1950 ஆம் ஆண்டுவரை எல்லாம் சீராக இருந்துள்ளது. ஆனாலும் 2000 ஆம் ஆண்டிலிருந்து கடல் நீரின் கார்பன் டை ஒக்சைட்டின் உறிஞ்சுதிறன் கணிசமாகக் குறையத் தொடங்கியிருக்கிறது.

1990 ஆம் ஆண்டுகளைக் காட்டிலும் இன்று நாம் கடல்நீரின் மீது 150 பில்லியன் தொன்கள் வரையான அதைவிட அதிகரித்த தொகையிலான கூடுதலான கார்பன் டை ஒக் சைட்டினை திணிக்கிறோம். திணித்துவருகிறோம். கடலின் சுமையை குறைத்திட நாம் அனைவரும் விடை தேடி நடைபோட வேண்டும்...! எங்கள் கடல் அன்னை என்ற ஆதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் காப்பாற்ற வேண்டும்!


## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### வீரகத்தி ராசா [ராஜா]



மலர்வு 1940.10.05 — உதிர்வு 2007.12.30

அன்பின் உறைவிடமான சித்தப்பா
எங்கள் குடும்பத்தில் குலவிளக்காய்
எம்மை வழிநடத்தி இறைபதம்
அடைந்து 9வருடங்கள்
ஓடினாலும் - சித்தப்பா
உங்கள் உருவம் அழிந்தாலும் சித்தப்பா
உங்கள் நினைவுகள் என் இருதயத்தில் நிறைந்திருக்கும் சித்தப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

பிரதேச வைத்தியசாலை,
அளவெட்டி.

பிரிவாலும் துயரத்தாலும் வாழும்
மனைவி - சரஸ்வதி (ராணி)
பெறாமகள் - ஜெயராணி

## 27ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நடராஜா சந்திரராஜா (போஸ்)

(முன்னாள் குகன் ஸ்ரோர் உரிமையாளர்)
தி.தி: 20.12.2016

பிறப்பு 20.02.1948 — இறப்பு 19.12.1989

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
எம் குடும்பத்தின் ஒளி விளக்காய் எம்மை வளர்த்து
எல்லா வளங்களையும் உருவாக்கி எம்மை
விட்டுப் பிரிந்து ஆண்டுகள் இருபத்தியேழு சென்றும்
எங்கள் நினைவில் என்றென்றும் நிலைத்து நின்று
தங்கள் ஆசீர்வாதத்துடன் வாழ எமக்கு அருள் புரிவீர்களாக
தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பலாலி றோட்,
கோண்டாவில்.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

(சி/ 27078)(12.18)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கனகரஞ்சினி திருலோகசிங்கம்

மண் மகிழ 08.06.1950 — கண் நெகிழ 20.12.2013

பஞ்சரைப் பெற்றெடுத்து பாசத்துடன் அரவணைத்து
அரும்பாடுபட்டு எம்மை ஆளாக்கி வாழ்வின் வழிகாட்டியாய்
எம்மை வாழவைத்த அன்புத்தாயே.....

பண்பின் இலக்கணமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்புப் பேரொளியாய் அவதரித்து எம் வாழ்வை
வளமாக்கி உய்வினைத் தந்த அம்மாவே!

நீங்கள் இறைவனடி சேர்ந்து மூன்றாண்டுகளானதே!
ஆறுதலின்றி அநாதரவாய் நிற்கின்றோம்
இரு விழிகள் நீர் சொரிய இதயத்துள் நினைவேற்றி
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் நினைவுகளோடு வாழும்
குடும்பத்தினர்.

(ஜெ.6858) (13.18)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர் செ. பரமேஸ்வரன்
அவர்களின் தாயார்

### திருமதி சோதிப்பிள்ளை செல்லையா

அவர்கள் 2016.12.18 அன்று காலமாகிவிட்டார். அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் எமது பாடசாலை அதிபரிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை நலன்புரி சங்கம்
யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சி
அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திரு. செ. கனேந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சோதிப்பிள்ளை செல்லையா

அவர்கள் 18.12.2016 ஆம் திகதி சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், அனைத்து
நலன்புரி சங்கம், பிரதேச செயலகம்
உடுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சறோஜினிதேவி கோபாலன்



பிறப்பு: 22.09.1956 இறப்பு: 19.12.2016

பலகாடு காரைநகரைப் பிறப்பிடமாகவும் திருநெல் வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி கோபாலன் 19.12.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கோபலனின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர் களான தம்பையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்ற வர்களான நாகலிங்கம் - மீனாட்சி தம்பதியரின் மருமகளும் ஜெயகார்த்திகா (லண்டன்), பொறகலா (ஜேர்மனி), கார்த்தி கேயன் (ஆசனப் பதிவாளர்- பிறின்ஸ் பஸ்), நாகேஸ்வரி, ஹரிஹரசுதன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ராஜ்குமார் (லண்டன்), பகீரதன் (ஜேர்மனி), உதர்சினி, உதய குமார்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமாமியும் சஜானன், சுவாதிகா, தக்ஷிகா, லபிஷன், சரண்யா, சஞ்ஜய், சுஜானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர் களான குமாரசாமி, சங்கரப்பிள்ளை மற்றும் விசாலாட்சி, அருளம்பலம், காலஞ்சென்ற இலட்சுமணன் மற்றும் சுந்தரலிங்கம் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் தேவராசா, மகேஸ்வரி, தங்கபுஸ்பம், ஜெயக்குமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2016) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாரி அம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.
077 936 7419**

## துரைச்சாமி இராசநாயகம்

**(முன்னாள் இலங்கை மின்சாரசபை ஊழியர்)**



எழாலை தெற்கு சூராவத்தை, சுன்னாகத்தை பிறப்பிட மாகவும், குப்பிளானை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி இராசநாயகம் (15.12.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் துரைச்சாமி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் கதிரவேலு - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக்கணவரும் மதியழகன் (கனடா), விதியழகன் (கனடா), சசி (கனடா), திசையழகன் (கனடா), வேலழகன், முகுந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் சந்திரா (இலங்கை) காலஞ் சென்ற வர்களான சந்திரநாயகம் (சந்திரன்), திசைநாயகம் மற்றும் றோகினியம்மா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவறஞ்சினி, கிரிஸ்னசாந்தி, பாலசுதர்ஷன், விசாகினி, கோணேஸ்வரி, சிமித்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, திருவிளங்கம் மற்றும் மகாலிங்கம், வாலாம்பிகை (கனடா), கதிர் சுந்தரலிங்கம் (கனடா) காலஞ்சென்றவர்களான திருவிளங் கம், சிவகுமார், றஞ்சினிதேவி ஆகியோரின் அன்பு மைத் துனரும் சுதர்ஷன், நிவேதா, விதுஷா, லக்ஷியா, ஆஞ்சனா, செல்வி, டினேஸ், யஸ்மின், அபிஷா, லவன், தக்ஷா, நீலபவன், தாரிக்கன், தர்ணிக்கா, தாரணி, அஞ்சலினா, சஞ்சய், ஜெய்டன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2016) புதன்கிழமை மு.ப. 9 மணியளவில் ஊரெழு வடக்கு ஸ்ரேசன் றோட், சுன்னாகம் எனும் இடத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**ஊரெழு வடக்கு,
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.**

**சசி - 077 4920 328,
மதி - 075 0666 415,
சந்திரா - 077 1068 449,
றோகினி - 076 6454 118,
கற்கண்டு - 077 3621 176**

(ஜே/6997)(17.19.20)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி சீதாலெட்சுமி காசிவிஸ்வநாதன்



நல்லூரைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீதாலெட்சுமி காசிவிஸ்வ நாதன் (EVER REST) (18.12.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காசிவிஸ்வநாதனின் அன்பு மனைவியும் பத்மலோசனி, பாஸ்கரன், கமலாசினி, சுதர்சனி ஆகியோரின் அன்புத்தாயும் பத்ம நாதன், மீனலோசனி, கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடை பெறும். இறுதிக்கிரியை விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.**

(ஜே/6435)(17.19.20)

**தகவல்:
குடும்பத்தினர்**

## கிருஷ்ணர் கதிரவேலு



**பிறப்பு 21.02.1937 இறப்பு 19.12.2016**

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் யாழ். நாச்சிமார் கோயிலடியை வசிப்பிட மாகவும் கொண்ட கிருஷ்ணர் கதிரவேலு நேற்று (19.12.2016) திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர்-சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற துரையம்மாவின் அன்புக் கணவரும் ஜெயக் குமார் (ஜெயா), இராசகுமார்(சின்னத்தம்பி- இந்தியா), சந்திரகுமார்(சுரேன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருசாம்பாள், சசிகலா ஆகியோரின் அன்பு மாமனும் கேதாரணி, தனுஷ்குமார்(இந்தியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.12.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**654/2, கே.கே. எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்**

## கந்தையா நாகலிங்கம்




காரைநகரைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் V.C அடியை வதிவிட மாகவும் கொண்ட கந்தையா நாகலிங்கம் நேற்று (19.12. 2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான இலட் சுமணபிள்ளை-சின்னம்மா தம்பதிகளின் அன்புமருமகனும் நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும், பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பரிசாரகர்) காலஞ்சென்றவர்களான சிவர்ாமலிங்கம், தேவராசா மற்றும் சரஸ்வதி(முன்பள்ளி ஆசிரியர், முழங்காவில்) கமலாதேவி(ஆசிரிய ஆலோசகர்,கிளிநொச்சி) புவனேஸ்வரி (ஆசிரியர் யாழ் செங்குந்தா இந்துக்கல்லூரி) வள்ளியம்மை ஆகியோரின் மைத்துனரும் மகேஸ்வரி, தேவதாஸன், மகா லட்சுமி (ஓய்வுபெற்ற மருத்துவ மாது) குகானந்தராசா (கோட்டக் கல்வி பணிப்பாளர் -பளை)கணேசலிங்கம் ( RDA, யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகலனும்,நர்த்தகி(விவசாய பீடம்) சங்கீதா(பொறியல் உதவியாளர்) கௌசல்யா(யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) துவாரகன் (மேற்பார்வையாளர்) ஆகியோரின் மாமனாரும், சாம்பவி (ஆசிரியர்) பிரியங்கா (நுண்கலைப்பீடம்) மாதங்கி (NDFA தொழில் நுட்பக் கல்லூரி) லக்ஷிகரன் (மாணவன், முழங்காவில் ம.வி) மாதுளன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் சனுசனின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2016) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு கொக்குவில் கிழக்கு அம்பகர் வீதியிலுள்ள மைத்துனியின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்
குடும்பத்தினர்.**



# பாதீனியம்

## எதற்கும் அடங்காமல் எதனையும் அடக்காமல் கோலோச்சுகிறது.

செ.தமிழ்நம்பி

அமெரிக்காவின் மெக்சிக்கோ வளை குடாப் பகுதியில் தோன் றிய பாதீனியச் செடியின் கொடிய விளைவுகள் ஆபிரிக்கா, ஆசியா கண்டங்களில் அதிகமாக உணரப்பட்டுள்ளது. அமெ ரிக்காவிலிருந்து கோதுமைத் தானியங்களோடு பாதீனியம் விதைகளும் கலப்படமாகி இந்தியாவின் மும்பைத் துறை முகத் தின் வழியாக 1956ஆம் ஆண்டு காலப் பகுதியில் வந்தி றங்கியதாகக் கூறப்படுகிறது.

பாதீனியம் என்பது பூண்டு, சீதேவியார் செங்கழுநீர் , செவ் வந்தி போன்ற தாவரங்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு செடி வகையாக விளங்குகிறது. ஒன்றரை மீற்றர் உயரத்துக்கும் மேலாக வளரக் கூடியது. பாதீனி யச் செடிகள் காலியான இடங் கள், தரிசு நிலங்கள், பயிர் நிலங்கள், குடியிருப்புப் பகுதிகள், பூங்காக்கள், பழத் தோட்டங்கள், சாலையோரங்கள், கரை யோரங்கள் என அனைத்து இடங்களிலும் வளர்ந்து வருகின் றன.

இவை மிகப்பெரும் எண்ணிக்கையில் பரவிக்கொள்வதுடன் நெருக்கமாக முளைத்து, நிமர்ந்து சடைத்து விரைவிலேயே பச்சைக் கம்பளம் விரித்ததுபோல நிலத்தை மூடிவிடு கின்றது. பாதீனியச் செடிகள்களைகளுக் கெல்லாம் தலைமையாக விளங்குகிறது. இதன் தண்டுகள், கிளைகள் மற்றும் இலைகள் உரோமங்களால் மூடப்பட்டிருக்கும். இச்செடியானது அதிக எண்ணிக்கையிலான பூக்களையும்,குறைந்த எடையுடைய விதைகளையும் உற்பத்தி செய்கிறது. விதைகள் குறைந்த எடையைக் கொண்டுள்ளதால் காற்றின் மூலமாக ஏனைய இடங்களை நோக்கிப் படையெடுக்கிறது. எளிதிலும் விரை வாகவும் பரவுகிறது.

இதன்படி ஒரு பாதீனியச் செடியானது 2500 முதல் 5000 வரை யிலான விதைகளை உற்பத்தி செய் கிறது. மேலும் இவற்றின் விதைகள் முளைப்பதற்குத் தேவையான சூழ்நிலைகள் இல் லாத போதும் சாதகமான சூழ்நிலை வரும் வரை காத்துக் கிடக்கிறது. குறிப்பாக 20 ஆண்டுகள் வரை உறக்கத்தில் இருந்து முளைக்கக்கூடிய சிறப்புத் தன்மையைக் கொண் டுள்ளது.

அதேவேளை பாதீனியம் செடிகளின் கீழாக செடி கொடிகள் எதுவும் முளைத்து வளர முடிவதில்லை. தண்ணீருக் காகவும், சூரிய ஒளிக்காகவும், வேர்ப் பிடி மண்ணுக்காகவும் செடிகள் போரா டிச் சாகின்றன. இவற்றின் மீது பாதீனியச் செடிகள் நஞ் சூட்டி அழிக்கிறது.

**(23ஆ) ஆம் பக்கம் பார்க்க..**

## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் விஜயகுமார்



பூநகரியைப் பிறப்பிடமாகவும், இல. 24, மணிக்கூட்டு ஒழுங்கை யாழ்ப் பாணத்தைவதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் விஜயகுமார் நேற்று (19.12.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற கனக ரத்தினம் மற்றும் யோகம்மாதம்பதிகளின் புதல்வனும் நிசாந்தினி அவர்களின் பாசமிகுகணவரும் நிருஜன்(யாழ் இந்துக்கல்லூரி) நிதர்ஷா (யாழ் இந்து மகளிர்கல்லூரி), வர்ஷா (யாழ் இந்து ஆரம்பபாடசாலை) ஆகியோரின் அன்பு தந்தையும் தர்மலிங்கம்- பராசக்தி தம்பதியினரின் அன்பு மருமகனும் இரத்தினகுமார், புஸ்பலீலா, காலஞ்சென்ற சுரேஸ்குமார் மற்றும் விஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மினி (சுவிஸ்) மகாலஷ்மி (நோர்வே) மணிவண்ணன், விஜிந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2016) புதன் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல24, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.**

**தகவல்
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(23அ) ஆம் பக்கத் தொடர்ச்சி

பாதீனியம் பார்த்தீனியன், அம்புரோசின் போன்ற நச்சு வேதிப்பொருள்களைச் சுரக்கிறது. இந்த நச்சுப் பொருள்களுடன் தாவர இனங்கள் போராடித் தப்பிப் பிழைக்க வழியின்றி அழிந்து விடுகின்றன.

அந்தவகையிலே எதற்கும் அடங்கா மல் எதனையும் அடக்காமல் பல நூறு ஆண்டு காலங்களாக இயற்கைச் சமநிலையில் பெரும் பங்காற்றி வருகின்ற உள்ளூர் தாவர இனங்களின் சாம்பல் மீது ஏறி நின்று கொண்டு பாதீனியம் கோலோச்சி வருகிறது.



**பாதீனியம் ஏற்படுத்தும் பாதிப்புகள்**

1. பாதீனியச் செடியானது கால்நடைத் தீவனங்களுக் காக ஏற்படுத்துகிறது.
2. வேளாண்மைப் பயிர்களின் வளர்ச்சியைப் பாதிக் கிறது. குறிப்பாக வேளாண்மை உற்பத்தியை 30 வீதமாகக் குறைக்கிறது.
3. மண்ணில் கசிய விடும் நச்சுப் பொருள்களின் மூலம் பயிர்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது.
4. உளுந்து,பயறு போன்ற பயிர்களின் அருகாமை யில் பாதீனியச் செடிகள் வளரும்போது பயிர்களின் வளர்ச் சியை வெகுவாகப் பாதிக்கிறது.
5. அவரையினப் பயிர்களின் வேர் முடிச்சுக்களை பாதிப்படையச் செய் கிறது. குறிப்பாக அவற்றின் வேர்களில் இரைசோபியம் பக்ீரியாக்களைக் கொண்ட வேர் முடிச்சுகள் காணப்படுகின்றன. இவை நைட்ரஜன் வாயுவைத் தாவரங்கள் உறிஞ்சக் கூடிய அயனநிலைக்கு ஏற்படுத்துவதுடன் வளி மண்டலத்தில் நைட்ரஜனின் சமநிலையைப் பேணியும் வருகின்றன. இந்த நிலையிலே பாதீனியச் செடிகளின் நஞ்சுகள் இந்த வேர் முடிச்சுக்களை அழிவுநிலைக் குட்படுத்துவதாக தாவரவியல் அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.
6. பாதீனியச் செடிகள் மனிதர் களுக்கும் ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது.
7. பாதீனிய செடிகள் பரவியுள்ள இடங்களில் உள்ளக் காற்றில் மிதக்கும் மகரந்தங்களில் பாதீனியச் செடிகளின் மகரந்தங்கள் தான் அதிகம் உள்ளதாக சொல்லப்படுகிறது. இந்த மகரந்தங்கள் தம்மீது நச்சுப் பொருள்களை பூசி வைத்துள்ளன. இதனைச் சுவாசிப்பவர்கள் ஆஸ்துமா நோயின் பாதிப்புக் குள்ளாகின்றனர்.
8. பாதீனிய செடியைத் தொடர்ச்சியாகத் தொடுபவர்களுக்கு தோலில் அரிப்பும் தடிப்பும் ஏற்படுகிறது.
9. பாதீனியச் செடிகளால் ஏற்படும் நோய்கள் எவ்வித மருத்துவ சிகிச்சைகளுக்கும் கட்டுப் படுவதில்லை.
10. பாதீனியச் செடிகள் கலந்த பசுந் தீவனங்களை உண்ணும் கால்நடைகளின் பால் கசப்புத் தன்மை பெறுகிறது.
11. பாதீனியச் செடிகள் கரிய மில வாயுவை அதிகமாக வெளிவிடுவதால் சுற்றுப் புறச் சூழலுக்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.
12. பாதீனியச் செடிகள் பல்லுயிர் பெருக்கங்களை கட்டுப் படுத்துவதுடன் அவற்றை அச்சுறுத்துகிறது.

**என்ன செய்வது?**

பாதீனியச்செடிகளை வேருடன் பிடுங்கி மண்ணுக்குள் புதைப்பதால் அவை மக்குரமாகிவிடுகிறது. உயிரியல் முறையில் பாதீனியச் செடிகளின் இலைகளை விரும்பி உண்ணும் பூச்சிகளை அவற்றினிடையே ஆழ ஊடுருவச் செய்து கட்டுப் படுத்தலாம். பாதீனியச் செடிகள் அதிகம் உள்ள இடங்களில் கேசியா இனத்தைச் சார்ந்த எதிரிச் செடிகளை வளரவிட் டும் இவை பரவாமல் தடுக்கலாம்.

நிலத்தை நன்கு உழுது களைகளின்றி பண்படுத்தும் போதும் பாதீனிய செடிகள் வளரவாய்ப்பு இல்லாமல் போகின்றன. இந்தநிலையிலே பாதீனியச் செடிகளை கட்டுப்படுத் தும் எளிய வழிமுறை ஒரு கிலோ உப்பையும்,ஒரு லீற்றர் சோப்பு எண் ணெயையும் 10 லீற்றர் தண்ணீரில் கலந்து தெளிப்பதே என்கின்றனர் தாவரவியலாளர்கள். மேலும் இந்த செயன் முறைகள் மூன்று தினங்க ளுக்குள் பாதீனியச் செடிகளை வாடிவதங்கச் செய்வதாகவும் அவை பின்பு கருகி அழிந்து போவதாகவும் சொல்கின்றனர்.

ஆக, வடபுலத்தின் தாய் நிலமெங்கும் தனது பாதுகாப்பு வலயங்களை அமைத்து இயற்கையின் சமநிலையைப் பேணுகின்ற பயிரினங்களின் உயிர்களைப் பறித்தெடுக்க அனுமதிக்க முடியாது. இவ்வளவு தீமைகளை ஏற்படுத்தும் பாதீனியச் செடிகளை முழுவதுமாக அழித்திட நடுவண் அரசு போர்க்கால அடிப்படையில் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். பாதீனியச் செடிகள் அழிப்பை நிலைபேறாக்கி பயிரினங்களை பாதுகாத்திட இயங்க நிலை அணியொன்றை உருவாக்க வேண்டும்.

தமிழீழத்தின் பொருண்மியத் துறையை மீள் ஞாபகம் கொள்ள வேண்டும். அதன் பணிக்கூற்றுக்களோடு இணைந்து வேளாண்மைத்துறை, பொதுப் பணியாளர் வலையமைப்பின் புத்துருவாக்கம் மற்றும் சுகாதாரத்துறை ஆகியவற்றை ஒருங் கிணைத்து செயற்பாட்டு ரீதியிலே பாதீனியச் செடிகளை அழித்திட நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மக்களிடம் பாதீனியச் செடிகளின் தீமைகள் குறித்து விழிப் புணர்வு ஏற்படுத்தி, அவற்றை அழிக்கும் பணியில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். பயிர்களையும், கால் நடைகளையும், மனிதர்களையும், சுற்றுச் சூழலையும் பாதுகாக்கப் பணிசெய்ய வேண்டும்.

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 591
சீட்டிழுப்பு திகதி 2016.12.19
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
03 13 16 66 C
சுப்பர் ஜக்பொட்
ரூ.44,395,460/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1324
சீட்டிழுப்பு திகதி 2016.12.19
வெற்றி இலக்கங்கள்
09 19 59 67 T
8448693 3476810
ரூ. 14,938,980/-

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 41
சீட்டிழுப்பு திகதி 2016.12.19
வெற்றி இலக்கங்கள்
16 45 50
36
7,551,040/-
69
7515347

VACANCY
சிவிலிம கிளிநொச்சிக் கிளைக்கு
இலங்கையின் சீலிங் மற்றும் கட்டடத் துறையில் முன்னணி நிறுவனமாகிய எங்களிடம் விற்பனை மற்றும் வெளிக்கள சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்கள் உள்ளன. முன் அனுபவம் உள்ள 35 வயதிற்குட்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.
'சிவிலிம கிளிநொச்சி'
இல.96, A9 வீதி, கரடிப்போக்குசந்தி, கிளிநொச்சி.
தொடர்பு: 077 949 4200

## கண்ணீர் அஞ்சலி



**கனகரத்தினம் விஜயகுமார்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02.07.1979 | 19.12.2016 |

எமது நிறுவனத்தில் காசாளராக கடமையாற்றிய கனகரத்தினம் விஜயகுமார் (19.12.2016) திங்கட்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**லிங்கன் கிறீம்ஹவுஸ்**
**உரிமையாளரும் ஊழியர்களும்.**

வேலையாள்கள் தேவை
அலுவலகங்கள். வங்கிகள். திருமண மண்டபங்கள். பொதுஸ்தாபனங்கள் போன்ற இடங்களில் சுத்திகரிப்பு பணியை மேற்கொள்வதற்கு யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வேலையாள்கள் தேவை.
ஆண். பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
வயதெல்லை (23-45)
தொடர்பு:- 076 801 1662, 077 497 5962

சாரதி தேவை
பட்டா ரக சேல்ஸ் வாகனம் ஓடுவதற்கு (யாழ். மாவட்டத்துக்குள்) சாரதி ஒருவர் தேவை. கொக்குவில் பகுதிக்கு அண்மையில் இருப்பவர் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 077 117 7900

## பெயர்மாற்றம்

சர்வோதயா வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூரைச் சேர்ந்த **வல்லி செல்வேந்திரன்** ஆகிய நான் எனது பெயரினை **வல்லி தெய்வேந்திரம்** என மாற்றம் செய்வதோடு இவ்வாறே இது சம்பந்தமான அனைத்து ஆவணங்களிலும் நான் கையொப்பமிடுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(J/6988)
(14,17,18)

வல்லி தெய்வேந்திரம்.

வேலைவாய்ப்பு
கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அண்மையில் இயங்கி வரும் ஆறு அறைகள் கொண்ட ஹொட்டலுக்கு பராமரிப்பாளர் (House Keeper) தேவை.
உணவு மற்றும் தங்குமிட வசதி வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு
E-Mail: tilko.tilak@gmail.com
021 720 0707

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி



Spoken English
Veta Fluency Diploma
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 9:30a.m | Mon,Wed,Fri 9:30a.m | Tue, Thu 08.30 a.m. | Mon,Wed,Fri 11:00a.m | Sat, Sun 10.30a.m. |
| Mon,Wed,Fri 3:30a.m | Tue, Thu 3.30 a.m | Sat, Sun 08.30 a.m. | Sat, Sun 3.30 p.m. | Tue,Thu 9:30 a.m |
| Sat, Sun 3.30 p.m. | Sat, Sun 3:30 p.m. | | Tue,Thu 9:00 a.m | |

பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்
சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
IELTS
IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு
DMI COMPUTER EDUCATION
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.
DMI COMPUTER EDUCATION

| No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | M.M.V. வீதி, நெல்லியடி | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி | No. 130 K. K. S வீதி NSB வங்கி அருகில் சுன்னாகம் | No.19,A9 வீதி, கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

STUDY IN CANADA
உங்கள் கனவுக்கல்வியினை கனடா நாட்டில் தொடர உங்கள் கனவிற்கும் தகைமைக்கும் மதிப்பளிக்கும் WINSTAR VISA CONSULTANTS ஐ நாடுங்கள்
*BIO MEDICAL SCIENCE * COMPUTER SCIENCE
*PRACTICAL NURSING * BUSINESS MANAGEMENT
*ART & SCIENCE * HOTEL MANAGEMENT
*2017 INTAKES (Spring/Summer/Fall)
*எங்குமில்லாத மிகக்குறைந்த கட்டணங்கள்
*நீங்கள் செலுத்தும் பணத்துக்கு 100% உத்தரவாதம்
*சிறந்த ஆங்கில பயிற்சிகள்
*விசா 100% பெற சிறந்த ஆலோசனைகள்.
அடுத்த வருடத்திற்கான சகல உள் நுழைவுகளுக்குமான இறுதித்திகதி 30.12.2016 (வெள்ளிக்கிழமை) சிறந்த ஆலோசனைகளைப் பெறநேரில் வாருங்கள்.
WINSTAR VISA CONSULTANTS
106, Post box Juction, Palaly Road, Thirunelvely.
web : www.winstarjaffna.com
fb : winstar visa consultants
T.P - 070 236 3676

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Hazama Ando Corporation

மேற்படி யப்பானிய நிறுவனத்தில் பணிபுரிவதற்காக சாரதிகளிற்கான உடனடியான வேலைவாய்ப்பு - அலுவலகம்(மன்னார்)

Hazama Ando Corporation இந்த நிறுவனம் கட்டுமான வேலையில் சிறப்பாக ஓர் வழிகாட்டும் நிறுவனம் ஆகும். விசேடவிதமாக வீதி துறைமுகம். பாலம். நீர் வடிகாலமைப்பு போன்றவற்றை சிறப்பான முறையில் அபிவிருத்தி செய்கின்ற திட்டமைப்பு கொண்டு செயற்பட்டு வரும் நிறுவனம்.

ஆகவே வடமாகாணமான மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் பாலம் கட்டுமானப் பணியை முன்னெடுப்பதற்கு சாரதியாக பணிபுரிவதற்கு தகுதியான விண்ணப்பதாரர்கள் கோரப்படுகிறார்கள்.

நாங்கள் ஓர் சிறந்த ஊதிய தொகுப்பையும் விரிவான நன்மைகளுடன் கூடிய தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை பல ஒழுங்கமைப்புக்களுடன் உருவாக்கிதர-உள்ளோம். அத்துடன் விண்ணப்பதாரி ஆங்கில மொழியில் முழுமையான தேர்ச்சி பெறறவராக இருப்பதோடு முக்கியமாக தமிழ் மொழியில் சிறப்புத் தேர்ச்சி உள்ளவராக இருத்தல் வேண்டும்.

உங்களுடைய சுயவிவரக்கோவை அடங்கிய விண்ணப்பங்களை கீழ் வரும் விலாசம் அல்லது இணையத்தள முகவரி ஊடாகவோ அனுப்பி வைக்கவும்.

**The Admin /HR Manager**
**Hazama Ando Corporation**
**Apartment No F 3/2**
**Green Path Residencies**
**No -04, Colonal T.G Jayawardane Mawatha, Colombo -03**
**E - Mail: hacmbcp@yahoo.co.jp**


## செய்தால் என்ன?

# வீட்டின் கூரையை பசுமை செய்யுங்கள் கரியமில புகையை காற்றிலிருந்து நீக்குங்கள்

மில்லியன் கணக்கில் மக்கள் கூட்டம் செறிந்து வாழும் நகரங்களில் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேட்டின் அளவு அதிகமாக காணப்படுகிறது. எத்தனை வாகனங்கள், எவ்வளவு மின்சாரம், எத்தனை கழிவுகள்...? இந்நிலையிலே எல்லோருடைய வீட்டின் கூரைகளையும் பசுமையாக்கினால் ஆண்டுக்கு 55,000 தொன் கரியமில புகையை காற்றிலிருந்து அகற்றி சுத்தமான காற்றை சுவாசிக்கலாம் என மிச்சிகன் ஸ்டேட் பல் கலைகழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். வீட்டுக் கூரையில் புல்தரைகளை விரிப்பது, செடிகளை வளர்த்தால் இவை அழகுக்கு அழகையும் கட்டடங்களை குளிர்ச்சியாகவும் வைத்திருக்கும்.குளிர்சாதனங்களின் மின்சாரம் சேமிப்பாகும். மழை நீர் வீணாகமல் பயன்பெறும். இன்னமும் அதிக மழை வீழ்ச்சியினை பெற்றுக்கொள்ள முடியும். ஆக,இதைச் செய்தால் என்ன..?

# குப்பைகளை அகற்ற மிகப்பெரிய மீன்வலை

பூமிக்கு வெளியே உள்ளதான குப்பைகளை அகற்ற ஸ்ரீல மற்றும் அலுமினியத்தால் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய மீன் வலையை விண்கலம் மூலம் ஜப்பான் விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. இதன் பிரகாரம் ஜப்பானின் தெற்குப்பகுதியில் உள்ள டேனிகாஷிமா தீவில் இருந்து சர்வதேச விண்வெளி மையத்திற்கு அந்த வலை விண்கலம் மூலம் ஏவப்பட்டுள் ளது.

அந்தவகையிலே விண்கலத்தில் உள்ள மிகப்பெரிய மீன்வலை மூலம் விண்வெளியில் பூமியைச் சுற்றி வருகின்ற கைவிடப்பட்ட ஏவுகணைகள் உள்ளிட்ட தேவையற்ற பொருள்களை நீக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த 1957 ஆம் ஆண்டு முதன்முதலாக சோவியத் ரஷ்யா ஸ்புட்னிக் என்ற ஏவுகணையை விண்வெளிக்கு ஏவியது முதல் தற்போது வரை பல்வேறு நாடுகளும் விண்வெளிக்கு ஏவுகணைகளை ஏவி வருகின்றன.

அவற்றின் பயன்பாடுமுடிந்து கைவிடப்பட்ட ஏவுகணைகள் முதல் பல்வேறு பொருள்களும் பூமியைச் சுற்றி வருகின்றன.

மேற்படி கருவியில் இருந்து வெளிவரும் மின்சாரத்தின் மூலம் பூமியைச் சுற்றி வரும் குப்பைகளின் இயக்க வேகத்தை குறைக்கவும் அவற்றைக் கைப்பற்றவும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.


## வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபைக்குச் சொந்தமான கடைகளுக்கான ஒரே தடவைக் கட்டணக் கேள்வி அறிவித்தல் - 2017

வவுனியா மாவட்ட எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்களிடமிருந்து **2017ஆம் ஆண்டு மாசி மாதம் முதலாம்திகதி** தொடக்கம் கீழ்க்குறிப்பிடப்படும் மாதாந்த வாடகையின் அடிப்படையில் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கடைகளுக்கான ஒரே தடவைக் கட்டணகேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி,நேரம்** : 20.12.2016 -09.01.2017அலுவலக நாள்களில் மு.ப 9.00 - பி.ப.3.00 மணிவரை

**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி,நேரம்** : 10.01.2017 மு.ப.10.00 மணிவரை

**கேள்விகள் திறந்துபரிசீலிக்கப்படும் திகதி,நேரம்** : 10.01.2017 மு.ப.10.00 மணி

கேள்விப் பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **செயலாளர், பிரதேசசபை, வெங்கலச்செட்டிகுளம்** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்கமேல்மூலையில் **கேள்வியின் பெயர் (கடைபெயர்)** தெளிவாக இட்டுப்பதிவுத்தபால் மூலம் **10.01.2017 ஆம் திகதிமு.ப.10.00** மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபைதலைமைஅலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப்பெட்டியில் குறித்த நேரத்திற்குமுன்னர் இடுதல்வேண்டும். மறு பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா** என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 10.01.2017 ஆம் திகதிமு.ப.10.00 மணிக்குமுன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

நிபந்தனைகள்

01. கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்புபவர்கள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் வவுனியா மாவட்டத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராம சேவையாளரின் சான்றிதழுடன் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப் பிரதியுடன் விண்ணப்பதாரி நேரடியாக சமூகமளித்தல் வேண்டும்.
02. கேள்விப் பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்கள், மீளளிக்கப்படும் வைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டால் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
04. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவாககேள்வியைச் சமர்ப்பிப்பவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
05. கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் போது கேள்வி தாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட அவரது பிரதிநிதியோ பார்வையாளராக சமுகமளிக்கமுடியும்.
06. கேள்வி நிபந்தனைகள்,அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
07. இக்கடைகளில் சாய்ச்சி உருக்கும் ஆலை, வாகனத் திருத்தகம்,சலூன் ஆகிய வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது.
08. வாடகைத்தொகை சபையினால் தீர்மானிக்கப்படும் கால ஒழுங்கில் 10% அதிகரிக்கப்படும்
09. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்படவேண்டும். பிரதிநிதிஎவரும் அவர் சார்பில் நடத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் அவரதுவாரிசுகள் அனுமதிக்கப்படுவர். ( உ-ம் மனைவி, பிள்ளைகள்)
10. சபையுடனானஒப்பந்தமீறல்கள் ஏற்படாதவிடத்துசித்தியெய்தும் கேள்விதாரர் அவருக்குப்பின் அவரது இரத்தஉறித்துடையவாரிசுகள் இக்கடைக்கான சகல உரிமைகளையும் அனுபவிக்கமுடியும்.
11. சபையின் அனுமதியின்றி எவ்வித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
12. சித்தியெய்தாத கேள்விதாரர்களின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.
13. சித்தியெய்திய கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் அல்லதுசபையினால் வழங்கப்படும் கால எல்லைக்குள் முழுத்தொகையையும் செலுத்திசபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும்.
14. கடைகளில் ஏற்படும் பாதிப்புகளுக்குசித்தியெய்தும் கேள்விதாரரேபொறுப்பாவார்.
15. பெற்றுக்கொள்ளப்படும் கடைகளுக்கான மின்சார இணைப்பிற்கு மாதாந்த மின் பட்டியல் கட்டணம் வாடகை தாரராலே செலுத்தப்படல் வேண்டும்.
16. வாடகைப்பணம் மாதாந்தம் இறுதிவேலை நாளுக்கு முன்பதாக செலுத்தப்படல் வேண்டும் அல்லது அடுத்தமாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும். தவறின் 10% தண்டமும் சேர்த்து அறவிடப்படும். வாடகைப் பணம் தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் செலுத்தப்படாத விடத்து முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துசெய்யப்பட்டதாககருதப்படும்.
17. இவ் ஒப்பந்தம் தொடர்பாகசபைச் செயலாளரின் நியாயமான எவ்விதமுடிவையும் ஏற்கவேண்டும். இது தொடர்பாக சபைக் கெதிராகவோ செயலாளருக்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கைஎடுக்கமுடியாது.
18. கேள்விதொடர்பாகமேலதிகவிபரங்கள் செட்டிகுளம் பிரதேசசபையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

| இல | கடைபெயர் | மாத வாடகை | கேள்வி படிவ கட்டணம் | கேள்வி வைப்பு கட்டணம் | ஆரம்ப கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | துட்டுவாகைகடை இல 04 | 1062.50 | 1000.00 | 5000.00 | 127,500.00 |
| 2 | துட்டுவாகைகடை இல 05 | 1062.50 | 1000.00 | 5000.00 | 127,500.00 |
| 3 | துட்டுவாகைகடை இல 06 | 1062.50 | 1000.00 | 5000.00 | 127,500.00 |
| 4 | கணேசபுரம் கடை இல 01 | 650.00 | 1000.00 | 5000.00 | 78,000.00 |
| 5 | கணேசபுரம் கடை இல 02 | 650.00 | 1000.00 | 5000.00 | 78,000.00 |
| 6 | குருக்கல்புதுக்குளம் கடை இல 01 | 500.00 | 1000.00 | 5000.00 | 60,000.00 |
| 7 | குருக்கல்புதுக்குளம் கடை இல 02 | 500.0 | 1000.00 | 5000.00 | 60,000.00 |

**திரு.சு.விஜயதாஸ்**
**செயலாளர்,பிரதேசசபை,செட்டிகுளம்.**
**20.12.2016**

(வி.27082) (13.18.17)



## வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை

இறைச்சிக் கடை/ மீன் கடை/ பொதுச் சந்தை நடத்துவதற்கான

## மீள் கேள்வி அறிவித்தல் - 2017

01.02.2017 தொடக்கம் 31.12.2017 வரையிலான காலப்பகுதிகளுக்கு கீழ்காணும் குத்தகைகளுக்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் படிவங்கள் இணைப் பிரதிகளில் வழங்கப்படும். கேள்விப்படிவங்களின் ஒருபிரதி அரக்குமுத்திரை இடப்பட்டு செயலாளர், பிரதேசசபை,வெங்கலச்செட்டிகுளம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அன்றேல் பிரதேசசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியிலோ **2017ஆம் ஆண்டு 01ஆம் மாதம் 10ஆம் திகதிமு.ப 10.00 மணிக்கு** முன்னதாக கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படல் வேண்டும்.

இரண்டாவது பிரதியினை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலவலகம்,பூங்கா வீதி, வவுனியா** என்ற விலாசத்துக்கு குறித்த திகதியில் அல்லது அதற்குமுன்னர் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

**கேள்விப் படிவங்கள் யாவும் 10.01.2017 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.**

**கேள்விப் பத்திரத்தை 20.12.2016 – 09.01.2017 திகதிவரை** வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை அலுவலகத்தில் அலுவலக நாள்களில் **காலை 9.00 மணிதொடக்கம் பி.பகல் 3.00 மணிவரை** பெற்றுக்கொள்ளலாம். கேள்விதிறத்தலின் போதுகேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் கேள்விச்சபை கூட்டத்தில் பார்வையாளராக கலந்துகொள்ளமுடியும்.

நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரி தொடர்ச்சியாக 05வருடங்கள் செட்டிகுளம் பிரதேசத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராமசேவையாளரின் சான்றிதழுடன் கேள்விப்படிவம் பெறப்படவேண்டும்.
2. ஏற்கனவே குத்தகை கேள்விகோரலில் பிரதேசசபை கறுப்புப்பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களுக்கு கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.
3. சித்தியெய்தும் கேள்விதாரர் **10.01.2017** இல் இருந்து **07** (ஏழு) நாள்களிற்குள் **1/3** வைப்புத்தொகையை செலுத்தத்தவறின் குத்தகைகேள்வி இரத்துச்செய்வதுடன் கேள்வி வைப்பு மீளளிக்கப்படமாட்டாது.
4. கச்சேரிஅல்லது பிரதேசசபையினால் நிர்ணயிக்கப்படுகின்ற விலைப்பட்டியலுக்கமைவாக மாட்டிறைச்சி,மீன் என்பன விற்பனைசெய்யப்படல் வேண்டும்.
5. கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது.

| இல. | கடை விவரம் | வருடாந்த குத்தகை | மீளளிக் கப்படும் வைப்பு | கேள்விப் படிவகட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | மாட்டிறைச்சிக் கடைமாங்குளம் | 687,500.00 | 8,000.00 | 1000.00 |
| 2 | மாட்டிறைச்சிக் கடைசெட்டிகுளம் | 297,247.46 | 8,000.00 | 1000.00 |
| 3 | மீன் கடை சூடுவெந்தபுலவு | 18,297.33 | 8,000.00 | 1000.00 |
| 4 | மீன் கடைசெட்டிகுளம் | 186,842.00 | 8,000.00 | 1000.00 |
| 5 | மாட்டிறைச்சிக் கடை சூடுவெந்தபுலவு | 550,021.90 | 8,000.00 | 1000.00 |
| 6 | ஆட்டோதரிப்பிடம் (செட்டிகுளம், மாங்குளம்,வீரபுரம்,ஆண்டியா புளியங்குளம்,சூடுவெந்தபுலவு) | 38,302.00 | 5,000.00 | 1000.00 |

**செயலாளர்**
**பிரதேசசபை,வெங்கலச்செட்டிகுளம்.**
**20.12.2016**

(வி.27082) (13.18.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2017...

இவ்வாறு கடும் வறட்சிக்கு மத்தியில் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் மின்சாரம் வழங்குதல், குடிதண்ணீர் விநியோகித்தல், விவசாய நிலங்களுக்குத் தேவையான நீரை வழங்குதல் உட்பட மேலும் பல செயற்பாடுகள் குறித்து துறைசார் அமைச்சர்களுடனும் திணைக்களங்களின் தலைவர்களுடனும் பிரதமர் ரணில் விரைவில் பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன், வறட்சியால் ஏற்படும் பாதிப்புக்களையும் சவால்களையும் எதிர்கொள்வதற்காக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் ஆலோசனையின் பிரகாரம் விசேட செயலணியொன்றும் அமைக்கப்படவுள்ளது.

தென்மேற்கு பருவப்பெயர்ச்சியின்போதே இலங்கைக்குக் கூடுதல் மழைவீழ்ச்சி கிடைக்கும். இம்முறை அது கிடைக்கவில்லை. தற்போது நிலவும் இடைப்பருவப் பெயர்ச்சி காலநிலையிலும் எதிர்பார்த்தளவு மழைவீழ்ச்சி பதிவாகவில்லை.

ஜனவரி முதல் வாரத்தில் வடகீழ் பருவப் பெயர்ச்சி காலநிலை ஆரம்பமாகினாலும் மழை பெய்வதற்குரிய சாத்தியக்கூறுகள் குறைவாகவே காணப்படுவதாக வானிலை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, நாட்டில் கடும் வறட்சி நிலவக்கூடிய சூழ்நிலையே காணப்படுகின்றது.

எனினும், தாழமுக்கங்கள் உருவாகும் பட்சத்தில் மழைவீழ்ச்சி கூடுதலாகப் பதிவாகும் சாத்தியமும் இருக்கின்றது என வானிலை அவதான நிலைய வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (த-4)

## வடக்கு...

உள சுகாதாரம், சிறப்புத் தேவைக்குரியவர்களின் நீண்ட காலப் பராமரிப்பு, விபத்துக்கள் மற்றும் காயம் ஏற்படு தலைத் தவிர்த்தலும் அவசர சிகிச்சையும், சுகாதாரத் தகவல்களை இலத்திரனியல் மயப்படுத்தல், மனிதவள அபிவிருத்தி ஆகியவையே முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன.

"இவற்றை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசின் நிதி உதவி மாத்திரம் போதாது. வெளிநாட்டு உதவிகளும் தேவை. கனடா, அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே, ஆஸ்திரேலியாவில் உள்ள மருத்துவ நிபுணர்கள், துறைசார்ந்த நிபுணர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர். உலக சுகாதார நிறுவனம், நிதி வங்கிகள் பலவற்றில் தமிழர்கள் மிகப் பெரிய பதவிகளில் உள்ளனர். அவர்களும் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். எமது மருத்துவக் குழுவினர் வடக்கின் தேவைகள் தொடர்பில் தெரியப்படுத்துவர். அதன் பின்னர் அதற்கு எவ்வாறான உதவிகளை வழங்கலாம் என்பது தொடர்பில் ஆலோசனை முன்வைக்கப்படும். இதன் மூலம் வடக்கின் சுகாதார அபிவிருத்தியினை முன்னெடுக்க முடியும். இதற்கு வடக்கு ஆளுநர், கொழும்பு அரசின் அனுமதிகள் கிடைத்துள்ளன" என்று வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார். (த-5)

## சகோதரனின்...

அதே இடத்தைச் சேர்ந்த உதயகுமார் சுவர்மன் (வயது-24) என்ற இளைஞனே கத்திக் குத்துக்கு இலக்காகிச் சாவடைந்தார்.

'மதுபோதையில் வீட்டுக்கு சென்ற சகோதரர் ஒருவர், இரவு உணவு தொடர்பாக வீட்டாருடன் தகராறில் ஈடுபட்டுள்ளார். இது பெரிதாகி அந்த வீட்டில் உள்ள மூன்று சகோதரர்களுக்கும் இடையில் கைகலப்பாக மாறியது. இதன்போது ஒரு சகோதரர் இன்னொருவர் மீது கத்தியால் குத்தியுள்ளார். கத்திக் குத்துக்கு இலக்கானவர் அதிகளவு குருதி வெளியேறிய நிலையில் உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். எனினும் அவர் முன்பே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியசாலையில் உறுதிப்படுத்தப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக 22 வயதுடைய ஒரு சகோதரர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றய சந்தேக நபரும் கைது செய்யப்படுவார். மேலதிக விசாரணை கள் இடம்பெறுகின்றன' என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-21,26)

## வயோதிபப்...

யடிக்க சென்ற கொள்ளையர்கள் அந்த வீட்டின் வயோதிபப் பெண்ணை வெட்டிக் கொலை செய்தனர் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 10.30 மணியளவில் குடத்தனை, பொற்பதிப் பகுதியில் இடம்பெற்றது. தங்கவேலாயுதம் பரமேஸ்வரி (வயது- 63) என்ற வயோதிபப் பெண்னே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

'முதியவர்களுடைய பிள்ளைகள் அனைவரும் வெளிநாட்டில் உள்ளனர். முதியவர்கள் இருவரும் குடத்தனை, பொற்பதிப் பகுதியிலுள்ள அவர்களது வீட்டில் வசிக்கின்றனர். நேற்றைய தினம் இரவு இவர்களுடைய வீட்டின் முன் வாசல் கதவு திறந்த நிலையில் இருந்துள்ளது. இதனை கடற்றொழிலுக்காக அந்த வழியாகச் சென்ற இந்த முதியவர்களுடைய பேரன் அவதானித்துள்ளார். சந்தேகத்தின் அடிப்படையில் வீட்டுக்குள் சென்றபோது, அங்கிருந்து ஒருவர் தப்பித்து ஓடியுள்ளார். இதனால் வீட்டின் அறைக்குள் சென்று பார்த்தபோது வயோதிப்பெண்ணின் கழுத்துப் பகுதி அறுக்கப்பட்டு குருதி வெளியேறிய நிலையில் காணப்பட்டுள்ளார். இதை அவதானித்த பேரன் வயோதிப பெண்ணுடைய கணவரைத் தேடியபோது, அவர் அறையினுள் உறக்கத்தில் இருந்துள்ளார். அதன் பின்னர் கத்திக் கூச்சலிட்ட பேரன், அயலவர்களை எழுப்பியுள்ளார். மக்களால் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் உடலத்தை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். முதியவர்கள் வசதியானவர்கள். எனவே யாரோ திட்டமிட்டு கொள்ளையடிக்க முயற்சித்திருக்கலாம் என்ற அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன' என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-21,26)

## இலங்கை...

மையிலான குழுவொன்று இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ளவுள்ளது.

வாரத்தில் குறைந்தது 3 நாள்கள் இந்திய மீனவப் படகுகள் இலங்கை கடற்பரப்பினுள் பிரவேசிக்கின்றன. 5 ஆயிரத்துக்கும் அதிகமான படகுகள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றன. இலங்கை கடற்பரப்பில் ஒரு வாரத்தில் சுமார் 6 ஆயிரம் மெற்றிக் தொன் மீனை இந்திய மீனவர்கள் பிடித்துச் செல்கின்றனர். இதனால் இலங்கைக்கு சுமார் 900 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை இழப்பு ஏற்படுகிறது.

இருப்பினும் தென்னிந்திய மீனவப் படகுகள் இலங்கை கடற்பரப்பினுள் பிரவேசிப்பது தற்போது 50 வீதமாக குறைவடைந்துள்ளது. அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்தியப் படகுகளை இலங்கைக் கடற்படையினரும், கரையோரக் காவல் படையினரும் கைப்பற்றிக் கொள்வதே இதற்கான காரணம். நான் கடற்றொழில் அமைச்சராகப் பொறுப்பேற்றதன் பின்னர் கடற்படையினர் பொறுப்பேற்ற எந்தவொரு இந்தியப் படகையும் விடுவிக்கவில்லை.

சட்ட நடவடிக்கைகளின் பின்னர் சகல படகுகளும் அரசுடைமை ஆக்கப்பட்டன. மனிதாபிமான அடிப்படையில் மீனவர்களை மட்டும் அரசு விடுவித்தது-என்றார். (த-4)

## நீதிமன்றிலும்...

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வழக்குகள் தாமதமாவதைத் தவிர்த்தலும் நீதிச் சேவை தொடர்பில் மக்களின் நம்பிக்கையை வெல்லுதலும் என்ற கருப்பொருளில் நீதிச் சேவை சங்கத்தினால் வத்தளையில் உள்ள பெகாஸஸ் ரீப் ஹோட்டலில் நீதிபதிகளின் வருடாந்த மாநாடு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதித் துறையில் பணியாற்றுபவர்களுக்கு நியாயமான சம்பள முறைமையொன்று இல்லை என்ற பிரச்சினையை அரசு விளங்கிக் கொண்டுள்ளது. சுதந்திரமாகப் பக்கச் சார்பின்றித் தமது சேவையை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக அந்தத் துறையில் உள்ள அனைத்துப் பதவியினருக்கும் ஏற்றுக் கொள்ளத்தக்க நியாயமான சம்பள முறைமையொன்றை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கின்றது.

நிறைவேற்று அதிகாரத்தின் நிழல் எவ்வளவு தூரம் நீதித்துறையின் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தது என்பதைக் கடந்த சில தசாப்தங்களை மீட்டிப் பார்ப்பதன் ஊடாக அனைவரும் புரிந்து கொள்ள முடியும். நீதிமன்றத்தின் சுயாதீனத்தையும் பக்கச் சார்பின்மையையும் ஏற்படுத்துவது அரசின் அடிப்படைப் பொறுப்பாகும்.

நீதிமன்றமும் சட்டமும் அனைவருக்கும் நியாயமாக இருக்க வேண்டும். தராதரங்களுக்கு ஏற்ப நீதிமன்றத்திலும் சிறைச்சாலையிலும் வெவ்வேறான கவனிப்புகள் இருப்பதாகப் பொது மக்களிடமிருந்தும் பல்வேறு துறைகளிலிருந்தும் எழும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்தத் துறையில் உள்ள அனைவரும் உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டும்.

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவில் நியமனம் மற்றும் பதவியுயர்வுகளை வழங்கும் போது திறமைக்கும் அனுபவத்துக்கும் முன்னுரிமையளிக்கப்படவேண்டும். அதற்கு அரசு தாராளமாக இடமளித்துள்ளது என்றார்.

தலைமை நீதியரசர் கே.ஸ்ரீபவனின் சேவையைப் பாராட்டி ஜனாதிபதியினால் சிறப்பு நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது. (த-5)

## பொறுப்புக்...

யானதும் நியாயமானதுமான சமூகத்துக்கான மக்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சரத் விஜேசூரிய தெரிவித்தார்.

குருநாகலில் நடைபெற்ற நீதி யானதும் நியாயமானதுமான சமூகத்துக்கான மக்கள் அமைப்பின் நிறுவுநரான அமரர் சோபித தேரரின் நினைவுப் பேருரையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக துணைநின்ற சோபித தேரர் தலைமையிலான மக்கள் அமைப்புடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அனைத்து நிபந்தனைகளையும் தற்போதைய ரணில் -மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசு அப்பட்டமாக மீறியுள்ளது.

நல்லாட்சி அரசு ஆட்சிப்பீடம் ஏறியபோது முன்வைத்த 100 நாள் செயற்திட்டம் ஒட்டுமொத்தமாக ஐக்கிய தேசியக் கட்சியின் தயாரிப்பு. தேர்தல் தோல்வியைத் தவிர்த்துக் கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த ஏமாற்றுத் திட்டமே அது.

தற்போதைய தேசிய அரசில் அங்கம் வகிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தற்போது வெளிப்படையாக ஊழல் மோசடிக்காரர்களைப் பாதுகாத்து வருவது அம்பலமாகியுள்ளது.- என்றார். (த-5)

## பொருத்தமற்றது...

மாவட்டப் பொது அமைப்புக்களாலும் வீட்டுத்திட்டப் பயனாளிகளாலும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஒன்று கூடிய மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக மாவட்ட செயலாளரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: எமது பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத்திட்டத்தை முழு மனதோடு வரவேற்கின்ற அதேவேளை, எமது மக்களின் விருப்பத்துக்கும் சூழலுக்கும் பொருத்தமற்ற வகையில் மேற்கொள்ளப்படவுள்ள பொருத்து வீட்டுத் திட்டத்தை முழுமையாக எமது மக்கள் நிராகரிக்கின்றார்கள் என்பதைத் தங்கள் உயர்வான கவனத்துக்குக் கொண்டுவருகின்றோம்.

30 வருடப் போரையும் போரின் விளைவுகளையும் எதிர்கொண்ட சமூகம் என்ற வகையில் எமது வாழ்வியலை மீளக்கட்டி அமைப்பதில் அதிக தேவை உடையவர்களாக இருக்கின்றோம். நல்லாட்சி மீதும் ஜனநாயக நடைமுறைகள் மீதும் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

மீளக்குடியேற்றம், வீடமைப்பு போன்ற மனிதாபிமான விடயங்கள் எமது மக்களின் அடிப்படை உரிமை. பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காது அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது அரசு நடந்துகொள்வது விவேகமும் வினைத்திறனுமற்ற நடவடிக்கைகள். எமது பிரதேசத்தின் நிலவரம், கலாசார முறைமைகள், வாழ்வியல் சம்பிரதாயங்கள் என்பவற்றைக் கூடக் கருத்தில் எடுக்காது பொருத்து வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருப்பது சர்வாதிகார அணுகுமுறையே அன்றி வேறில்லை.

பொருத்து வீட்டுத்திட்டம் எமது சமூகத்துக்குப் பொருத்தம் அற்றது என்பதை எமது நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் வடக்கு மாகாண சபையும் சூழலியலாளர்களும் தங்களின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்கள். நாடாளுமன்றிலும் இது பற்றி விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் வலிந்து பொருத்து வீடுகளை எம் மீது திணிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் சந்தேகங்களையும் நல்லாட்சி மீதான நம்பிக்கையீனங்களையும் உருவாக்கி வருகின்றது.

அதிகாரிகளை அச்சுறுத்திப் பொருத்து வீட்டுத்திட்டத்தை நிறைவேற்ற முயல்வது மோசமான விளைவுகளை ஏற்பட்டுத்தவல்லது. பயனாளிகளிடையே கலந்துரையாடல்களை மேற்கொள்ளாது மக்களின் விருப்பங்களுக்கு மாறாகக் குறித்த திட்டத்தை நிறைவேற்ற முயல்வதைக் கிளிநொச்சி மாவட்டப் பொது அமைப்புக்களும் மக்களும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எனவே மேற்படி திட்டத்தை உடனடியாக மீளாய்வு செய்வதுடன் மக்கள் தங்களின் நிரந்த வீடுகளைத் தாங்களே அமைத்துக் கொள்ளும் வகையில் குறித்த பொருத்து வீட்டுக்குச் செலவிடப்படும் முழுத்தொகையும் மக்களுக்கு வழங்கப்பட்டு அவர்களின் விருப்பதற்கு ஏற்ப வீடுகளை அமைப்பதற்கு உதவுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்-என்றுள்ளது.

மனுவைப் பெற்றுக்கொண்ட கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், பொருத்து வீடு பொருத்தமற்றது என்பதை வலியுறுத்தி இந்த மனு என்னிடம் சமர்ப்பித்துள்ளனர். இந்த மனுவை ஜனாதிபதி, பிரமதர் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படு[illegible] கிளிநொச்சி மாவட்டத்தில் 16 ஆயிர[illegible] வீடுகள் இன்னமும் தேவையாகவுள்ள[illegible] வீடுகள் தேவை என்ற ரீதியில் நடவடிக்[illegible] எடுக்கவேண்டிய காலகட்டத்தில் இரு[illegible]கின்றோம். இன்று (நேற்று) சமர்ப்பிக்கப்[illegible] விடயங்கள் தொடர்பாகச் சில வேளைக[illegible] கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்[illegible] அதற்கு செல்வதற்குத் தயாராக இரு[illegible]றேன் என்று தெரிவித்தார். (த-4-6-[illegible])

## மைத்திரியின்...

இருப்பினும் இந்த வாக்குறுதி இன்ன[illegible] முழுமையாக நிறைவேற்றப்படவில்[illegible] என்று சிவில் அமைப்புக்கள் குற்றம் சும[illegible]யுள்ளன.

தேசிய கிறிஸ்மஸ் தின விழா கடந்த ஆ[illegible] டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி, யாழ். மா[illegible] சபை மைதானத்தில் நடை பெற்றது. இ[illegible] பங்கேற்பதற்காக ஜனாதிபதி மைத்திரி[illegible] சிறிசேன யாழ்ப்பாணத் துக்கு வந்திருந்[illegible] வலி. வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து த[illegible]யுள்ள நலன்புரி நிலையங்களை நே[illegible] சென்று பார்வையிட்டார்.

இதன் பின்னர் கிறிஸ்மஸ் தின நிகழ்[illegible] உரையாற்றும்போது, வலி.வடக்கு மக்க[illegible] அவர்களது சொந்த இடங்களில் ஆறு [illegible] காலத்தினுள் மீள்குடியேற்றம் செய்[illegible] என்று தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி வாக்குறுதி வழங்கி இன்று [illegible] ஒரு வருடம் பூர்த்தியடைகின்றது. [illegible] வடக்கில் இன்னமும் 4 ஆயிரம் ஏ[illegible] தனியார் காணிகள் விடுவிக்கப்படவில்[illegible] பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டிலே[illegible] உள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 20
அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும், மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# சமநிலை!

யாழ்ப்பாணம், டிசெ. 20
அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரு ஆட்டங்களும் சமநிலை கண்டன.

**நவஜீவன்ஸ் - சென். சேவியர்**

மனோகராவின் மைதானத்திலேயே ஆட்டங்கள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் நிறைவு வரை இரு அணிகளும் கோல்கள் எதனையும் பதிவுசெய்யாத நிலையில் ஆட்டம் சமநிலை கண்டது.

**டயமன்ஸ் - றோயல்**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது. ஆட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் டயமன்ஸின் முதல் கோலைப் பதிவு செய்தார் லக்கிசன். டயமன்ஸின் ஆதிக்கத்துடனேயே ஆட்டம் நீண்டு சென்றது. 1:0 என்ற நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் றோயல் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தியது. கிடைத்த ஓரிரு வாய்ப்புக்களை அந்த அணி தவறவிடவும் செய்தது. இருப்பினும் 47 ஆவது நிமிடத்தில் வாய்ப்பைக் கச்சிதமாகப் பயன்படுத்திய றோயலின் நிதர்சன் கோலொன்றைப் பயன்படுத்தி டயமன்ஸின் ஏக ஆதிக்கத்துக்கு பதிலடி கொடுத்தார். 1:1 என்று இரு அணிகளதும் சீரான ஆதிக்கத்துடன் ஆட்டத்தின் எஞ்சிய சில நிமிடங்கள் ஓடி மறைந்தன. எந்த அணியாலும் வெற்றிக்கோல் பதிவாகவில்லை. ஆட்டம் சமநிலை கண்டது. (ம-108)



ஸ்பெய்னின் புகழ்பெற்ற கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனா, அதன் நட்சத்திர வீரரான சுவாரசிடனான ஒப்பந்தத்தை எதிர்வரும் 2021ஆம் ஆண்டு வரை நீடித்துள்ளது. இதன்மூலம் மெஸ்ஸி, சுவராஸ், நெய்மர் கூட்டணி இன்னும் சில ஆண்டுகள் உறுதியானது. (ம)

# ஞானம்ஸ் சம்பியனானது கலையொளியை வீழ்த்தி



யாழ்ப்பாணம், டிசெ. 20
உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் அணி கிண்ணம் வென்றது.
உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் இடம்பெற்றது. கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து தெல்லிப்பழை கலையொளி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 12 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் நான்கு இலக்குகளை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுதாகரன் ஆட்டம் இழக்காமல் 94 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தெல்லிப்பழை கலையொளி விளையாட்டுக் கழகத்தின் சார்பில் தர்சன், ராம், அனுரதன் மூவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். 111 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை கலையொளி அணி 82 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அனிஸ் 23 ஓட்டங்களையும், றஞ்சித் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜெனி 3 இலக்குகளையும், றஜீவன் 2 இலக்குகளையும் ஜீவன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் ஞானம்ஸின் சுகந்தன் தெரிவானார்.
முன்னதாக நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கொக்குவில் காமாட்சியை வீழ்த்தியது ஆனைக்கோட்டை யூனியன். (ம-23)

# ஜெகமீட்பர், சென். ஆன்ஸ் அணிகள் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 20
ஏவ்.ஏ. கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வலைப்பாடு ஜெகமீட்பர், வலைப்பாடு சென். ஆன்ஸ் அணிகள் வெற்றிபெற்றன. இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் கழகங்களுக்கு இடையில் தேசிய மட்டத்தில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. பூநகரி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. முழங்காவில் மைதானத்தில் நேற்றுமுன்தினம் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டக்கச்சி லக்கிஸ்ராா் அணி மோதியது. இதில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணி 7:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் அணியை எதிர்த்து வலைப்பாடு சென். ஆன்ஸ் அணி மோதியது. சென். ஆன்ஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# தேசிய மட்ட பளுதூக்கல் பொலன்னறுவையில் இன்று

இலங்கை பளுதூக்கு சங்கம் நடத்தும் கனிஷ்ட, மூத்த, இளையோருக்கான தேசிய மட்ட பளு தூக்கல் தொடர் பொலன்னறுவையில் உள்ள பன்னாட்டு பளுதூக்கு நிலையத்தில் இன்று இடம்பெறவுள்ளது. குறித்த போட்டியில் வடக்கு மாகாணத்திலிருந்து யாழ். மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, வயாவிளான் மத்திய கல்லூரி ஆகியவற்றின் பளுதூக்கும் அணிகள் கலந்து கொள்ளுகின்றன. (ம-23)

# இளவாலை மத்தி. - ஆவரங்கால் இந்து இறுதியாட்டத்தில் மோதுவதற்குத் தகுதி

யாழ்ப்பாணம், டிசெ. 20
யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் மாவட்ட ரீதியில் நடத்திய தொடரில், இளவாலை மத்திய விளையாட்டுக் கழகம் மற்றும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

**முதலாவது அரையிறுதி**

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் குறித்த அரையிறுதிகள் இடம்பெற்றன. முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது. 5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் 25:21, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகம் கைப்பற்றியது. இதனால் அடுத்த மூன்று செற்களிலும் தொடர் வெற்றியைப் பதிவுசெய்தாலேயே ஆவரங்கால் மத்தியால் வெற்றிபெற முடியும் என்ற நெருக்கடி நிலை ஏற்பட்டது. அதற்கேற்ப அந்த அணி வலுவாகச் செயற்பட்டு மூன்றாம் நான்காம் செற்களை முறையே 25:18, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது. தற்போது நிலைமை 2:2. இறுதி செற்றில் வெற்றி பெறும் அணியே இறுதிக்குத் தகுதிபெறலாம் என்ற நிலையில் அந்த செற்றை 16:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய இளவாலை மத்திய அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

**இரண்டாவது அரையிறுதி**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழகம் மோதியது. ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் முறையே 25:21, 25:22, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி அடுத்த இரு செற்களுக்கும் வேலை வைக்காமல் 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரியல் மட்றிட் உலகச் சம்பியன் ரொனால்டோ ஹற்றிக் பதிவு

கழகங்களுக்கு இடையிலான உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் ஸ்பெய்னின் ரியல் மட்றிட் சம்பியனானது.



ஜப்பானில் நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) நடந்தது இறுதியாட்டம். ரியல் மட்றிட்டை எதிர்த்து ஜப்பானின் கசிமா மோதியது. ஆட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார் கரீம் பென்சிமா. 44 ஆவது நிமிடத்தில் பதில் கோலைப் பதிவு செய்தார் ஹகு சபாசகி. 1:1 என்ற நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 52 ஆவது நிமிடத்தில் சபாசகி, கசிமாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். ரியல் மட்றிட் ரசிகர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். இதற்குப் பின்னர் தான் உலகின் ஆகச் சிறந்த கால்பந்து வீரரான ரொனால்டோவின் வித்தை ஆரம்பமானது. 60 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். வழங்கப்பட்ட மேலதிக நிமிடங்களில் அடுத்தடுத்து மேலும் இரு கோல்களை அடிக்கிறார் ரொனால்டோ. முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் கசிமாவை வீழ்த்தி உலகச் சம்பியனானது ரியல் மட்ரிட்.

தொடரின் சிறந்த வீரருக்காக வழங்கப்படும் தங்கப் பந்து விருதை ரொனால்டோ வென்றார். வெள்ளிப் பந்து ரியல் மட்ரிட்டின் இளம் வீரரான லூக்காவுக்குக் கிடைத்தது. (ம)

# கருண், கருணையற்ற ஆட்டம் வரலாறு படைத்த இன்னிங்ஸ்



இங்கிலாந்து அணிக்கு எதிரான ஐந்தாவது டெஸ்ட் ஆட்டத்தில் கருண் நாயரின் கருணையற்ற ஆட்டத்தாலும் அவர் பதிவுசெய்த முச்சதத்தாலும் இந்திய அணி முன்னிலை பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 477 ஓட்டங்களைக் குவித்தது. மூன்றாம் நாள் முடிவில் இந்தியா 391-4 என்றிருந்தது. நாயர் 71 ஓட்டங்களுடனும் முரளி விஜய் 17 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 29 ஓட்டங்களுடன் முரளி விஜய் ஆட்டமிழந்தார். அடித்தாட ஆரம்பித்தார் கருண் நாயர். தனது முதல் சதத்தைப் பதிவுசெய்தார் கருண். தொடர்ந்தும் சிறந்த ஆட்டத்தை அவர் வெளிப்படுத்தினார். இந்தத் தொடரிலேயே அறிமுகமானார். ஆனால் அறிமுக வீரர் என்றவாறாக அவரது ஆட்டம் அமையவில்லை. மிகச் சிறந்த கால் நகர்த்தல்கள். இரட்டைச் சதத்தையும் முச்சதத்தையும் அவர் எட்டினார். இரட்டைச் சதத்திலிருந்து முச்சதத்தை எட்ட வெறும் 75 பந்துகளையே எடுத்துக் கொண்டார். ஜடேயா, அஸ்வின் இருவரும் அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தனர். 759-7 என்ற நிலையில் இந்தியா ஆட்டத்தை இடைநிறுத்தியது. இங்கிலாந்து 12-0 என்றுள்ளது. (ம)

# இந்தியாவின் துடுப்பாட்டம் கோக்லியை நம்பியில்லை

## ஸ்ரோக்ஸ் தெரிவித்தார்

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை கோக்லியை மட்டும் நம்பி இருக்கவில்லை என இங்கிலாந்து அணியின் சகல துறை வீரரான ஸ்ரோக்ஸ் தெரிவித்தார்.

நடைபெற்றுவரும் இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 477 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு அதன் தலைவரான கோக்லி 15 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். இருப்பினும் லோகேஸ் ராகுல், கருண் நாயர் ஆகியோரின் இன்னிங்ஸால் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது. இந்த நிலையில் ஸ்ரோக்ஸின் கருத்து மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது என்று கருதப்படுகிறது.

விராட் கோக்லி ஓர் அபாயகரமான வீரர். இந்திய அணியின் வெற்றியில் அவரது பங்களிப்பு மிக அதிகம். ஆனால் அவரை மட்டும் நம்பி அந்த அணியில்லை. மிகச் சிறந்த துடுப்பாட்ட வரிசையை இந்தியா கொண்டுள்ளது. அஸ்வின், ஜடேயா போன்றோர் கூட அரைச்சதம், சதங்களைப் பதிவுசெய்கின்றனர் என்று ஸ்ரோக்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)



# பகலிரவு டெஸ்ட்; வென்றது ஆஸி.

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற்று மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரில் 1:0 என்று முன்னிலையில் உள்ளது ஆஸ்திரேலியா.

பிரிஸ்பெய்ன் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. சிமித், ஹான்ட்ஸ்கொம் இருவரதும் சதங்கள் கைகொடுக்க அந்த அணி சகல இலக்குகளையும் இழந்து 429 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக சிமித் 130 ஓட்டங்களையும், ஹான்ட்ஸ்கொம் 105 ஓட்டங்களையும், ரென்சொவ் 71 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் ரியாஸ், ஆமிர் இருவரும் தலா 4 இலக்குகளையும், யாசிர் ஷா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தானுக்கு ஆரம்பம் படுமோசமாக அமைந்தது. ஐந்தே ஓட்டங்களுடன் அசார் அலி ஆட்டமிழந்தார். மிஸ்பா 4, யுனிஸ் கான் 0 என்று முக்கிய வீரர்கள் தடுமாற்றத்தை வெளிப்படுத்த அந்த அணி 142 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அகமட் ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களையும், அஸ்லாம் 22 ஓட்டங்களையும், ஆமிர் 21 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் ஸ்ராக், கசில்வூட், பேட் மூவரும் தலா மூன்று இலக்குகளை வீழத்தினர்.

பாகிஸ்தானை மீண்டும் துடுப்பெடுத்தாடப் பணித்து



இன்னிங்ஸ் வெற்றிபெறக்கூடிய வாய்ப்பு ஆஸ்திரேலியாவுக்கு இருந்தது. ஆனால் அந்த அணி இரண்டாவது இன்னிங்ஸிற்காக தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடி 202-5 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக கவாயா 74 ஓட்டங்களையும், சிமித் 63 ஓட்டங்களையும், ஹான்ட்ஸ்கொம் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் ரகற் அலி 2 இலக்குகளையும், ஆமிர், யாசிர், ரியாஸ் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

490 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய பாகிஸ்தான் நான்காம் நாள் முடிவில் 382-8 என்ற நிலையில் இருந்தது. சபிக் 100 ஓட்டங்களுடனும் யாசிர் 4 ஓட்டங்களுடனும் ஆட்டத்தின் இறுதி நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். இணைப்பாட்டம் மேலும் நிலைபெற்றது. ஆஸ்திரேலியா நிச்சயம் பதற்றத்தை உணர்ந்திருக்கும். வெற்றிக்கு 42 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் 137 ஓட்டங்களுடன் சபிக் ஆட்டமிழந்தார். யாசிரும் ரண் அவுட் செய்யப்பட 39 ஓட்டங்களால் வென்றது ஆஸ்திரேலியா. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சம்பியன்ஷிப்; சிந்து வெளியேற்றம்

உலக சம்பியன்ஷி ப் பூப்பந்தாட்டத் தொடரிலிருந்து இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையான பி.வி. சிந்து அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில். முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகளுக்கு மட்டுமாக வருட இறுதியில் நடத்தப்படும் உலக சம்பியன்ஷிப் பூப்பந்தாட்டத் தொடர் டுபாயில் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சிந்துவை எதிர்த்து தென்கொரிய வீராங்கனை சுங் ஜி ஹையுன் மோதினார். முதல் செற்றை 21:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் ஹையுன். இரண்டாவது செற்றை 21:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் சிந்து. இதனால் மூன்றாவது செற்றில் வெற்றி பெறுபவரே இறுதிக்குத் தகுதிபெறலாம் என்ற நிலை உருவானது. சிறப்பாகச் செயற் பட்ட ஹையுன் அந்த செற்றை 21:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார். (ம)

வழிகாட்டி
VALIKAADDY
நடாத்தும்

## உயர்தர பாடத் தெரிவு வழிகாட்டி

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளின் உயர்கல்வி திட்டமிடலை சரியாக மேற்கொள்ளுங்கள்.

மாணவர்களே! உங்களுக்கு வழிகாட்ட கல்வியின் சிகரங்கள் காத்திருக்கிறார்கள்



O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு

**அனுமதி இலவசம்**

இடம் :- இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி
நீராவியடி, யாழ்ப்பாணம். யாழ் இந்துக்கல்லூரி அருகில்

காலம் :- 23.12.2016 வெள்ளிக்கிழமை

நேரம் :- காலை 9.00 மணி தொடக்கம்

### பதிவுகளுக்கு

இக் கருத்தரங்கில் கலந்துகொள்ள நீங்கள் செய்ய வேண்டியது 0718691691 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு உங்கள் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை SMS செய்து உடனே முற்பதிவு செய்து கொள்ளுங்கள். வழிகாட்டி நிறுவனத்தால் இலவசமாக இக் கருத்தமர்வு நடாத்தப்படுவதால் மாணவர்கள் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. முந்துபவர்களுக்கு முன்னுரிமை.

உயர்தர பாடத் தெரிவு வழிகாட்டி கருத்தரங்கை வழிநடாத்த உள்ள வளவாளர்கள் விவரம்

Biology stream
Dr. P.Sevvel
Senior lecturer
Department of botany,
University of Jaffna.

Commerce stream
Prof. T. Velnampy
Dean,
Faculty of Business Management,
University Of Jaffna

Technology stream
Prof. K. Kandasamy (Ret.)
Senior Professor of Physics,
Consultant,
Faculty of Technology
University Of Jaffna

Arts stream
N. Piratheeparajah
Senior Lecturer
Department of Geography
University of Jaffna

Maths stream
Prof. P. Ravirajan
Professor in Physics Former
Head Physics
Director Staff Development Centre,
University of Jaffna

"கல்வியே வாழ்க்கையின் வழிகாட்டி"

பிரதான அனுசரணை: Mobitel We Care. Always.
இணை அனுசரணை: BCAS CAMPUS Jaffna Campus
ஊடக அனுசரணை: உதயன்

## இந்தியன் சுப்பர் லீக்; கொல்கத்தா சம்பியன்




நடப்பு வருடத்துக்கான இந்தியன் சுப்பர் லீக் கால்பந்துத் தொடரில் கொல்கத்தா அணி கிண்ணம் வென்றது.

இறுதியாட்டம் கொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கொல்கத்தாவை எதிர்த்து கேரளா பலப்பரீட்சை நடத்தியது. ஆட்டத்தின் 37 ஆவது நிமிடத்தில் கேரளாவின் ரபி முதல் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த சில நிமிடங்களில் கொல்கத்தா அணியின் சிரினோ பதில் கோலைப் பதிவுசெய்தார். 1:1 என்ற நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியில் எந்த அணியும் மேலதிக கோலைதையும் பதிவுசெய்யவில்லை. வழங்கப்பட்ட மேலதிக நேரங்களிலும் கோல்கள் கிடைக்க வில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் கேரளாவை வீழ்த்தி கொல்கத்தா சம்பியனானது. (ம)

## கார்லொஸ் மோயாவின் கீழ் பயிற்சி பெறவுள்ளார் நடால்

உலகின் முன்னாள் முதல் தர வீரரான நடால், இனிவரும் காலங்களில் மோயாவின் பயிற்சியின் கீழ் செயற்படவுள்ளார். நடாலுக்கு அவரின் உறவினரான டொனி நடால் ஏற்கனவே பயிற் சிகளை வழங்கிவரும் நிலையில் கார் லொஸும் இணைந்து நடாலை பயிற்றுவிக்க வுள்ளார். நடாலும் கார் லொஸும் நீண்ட கால நண்பர்கள். இருவரும் பல தொடர்களில் ஒன்றாகக் களமிறங்கியுள்ளனர்.

முன்னாள் முதல் தர வீரரான நடால், தொடர் சரிவுகளின் காரணமாக தற்போது ஒன்பதாவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

**VACANCIES**

English Lecturers - Male/ Female
Qualification - ELT/Experience/HNDE

Administrative Officer - Female
Qualification - A/L and computer Knowledge
Preference - Good commanding skill in English

CV should be emailed at admin@clasjaffna.com. On or before 25th December 2016

ELAS
Sirpon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040

# NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

## 2019 A/L கணித, உயிரியல் பிரிவு

### தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| பௌதீகவியல் | திரு. R.குமரன் M.Sc |
| | திரு. R.குகன் B.Sc |
| இரசாயனவியல் | திரு. டயஸ் B.Sc (Hons),Spl.in Che. |
| | திரு. K.T. சிவகுமார் B.Sc, PGDE |
| உயிரியல் | திரு. S.பொன்திவாகரன் B.Sc, (Hons) |
| | திரு. V.உமாசங்கர் B.Sc, PGDE |
| | திரு. T.கஜேந்திரன் |
| இணைந்த கணிதம் | திரு. S.செந்தில்ராஜ் B.Sc, PGDE |

### English Medium

| | |
|---|---|
| Physics | Mr. R. Kumaran M.Sc |
| Chemistry | Mr. Dias B.Sc (Hons) Spl.in Che |
| Biology | Mr. V.Umasanger B.Sc, PGDE |
| | Mr.T.Kajenthiran |
| Com.Maths | Mr. T.Shanjeevan B.Sc (Hons) Dip.in.English. ( Lecturer in University ) |

ஆரம்பம் :- 23.12.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.